பக்கங்கள்: 16 + சூரியகாந்தி 6 = இருபத்திரண்டு

யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 10 ஞாயிற்றுக்கிழமை (22-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:88

சாவகச்சேரியில் நேற்றுக் காலை துணிகரச் சம்பவம்

## ஊழியரைச் சுட்டுவிட்டு நகைகள் கொள்ளை!

### முகமூடி அணிந்து சீருடையில் வந்தோர் கைவரிசை

தென்மராட்சி,பெப்.22

முகமூடி அணிந்து சீருடையில் ஆயுதங்கள் சகிதம் வந்த நபர்கள் நகைக்கடை ஊழியர் ஒருவரைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு அவரிடம் இருந்த பல லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் 2 லட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். சம்பவத்தை நேரில் கண்ட மாணவன் ஒருவனையும் சுட்டுக் காயப்படுத்திவிட்டுக் கொள்ளையன் மோட்டார் சைக்கிளுடன் காத்திருந்த மற்றொருவனுடன் தப்பிச் சென்றுள்ளான்.

சாவகச்சேரி நகருக்கு மிகச் சமீபமாக நேற்றுக் காலை 8 மணியளவில் மிகத் துணிகரமான இந்தக் கொள்ளை இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரியில் உள்ள பிரபல்யமான நகைக் கடை ஊழியரான சண்முகம் சதீஸ்குமார் (வயது-28) சம்பவத்தில் தொடைப் பகுதியில் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார். அச்சமயம் வீதியில் சென்று கொண்டிருந்த சத்தியசீலன் துவாரகன் (வயது-15) என்ற சிறுவனும் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தான்.

இந்தச் சம்பவத்தால் சாவகச்சேரியில் பெரும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

தேர்தல் நாளன்று

## மக்களின் சுதந்திர நடமாட்டத்துக்கு கண்காணிப்புக் குழுவின் உதவி

கொழும்பு,பெப்.22

எதிர்வரும் தேர்தல் தொடர்பான செயற்பாடுகளில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு நேரடியாகப் பங்குகொள்ளாவிட்டாலும், தேர்தல் தினத்தன்று மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்காக உதவுவது தொடர்பாக அது ஆராய்ந்துவருகின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கும் இடையில் வாக்களிக்கச் செல்லும் மக்களின் நடமாட்டம் தேர்தல் தினத்தில் கூடுதலாக இருக்கும்.

யுத்த நிறுத்த உடன்பாட்டின்கீழ் மக்களின் சுதந்திர நடமாட்டத்தை உறுதிப்படுத்தும் வகையில் அன்றைய தினம் அத்தகைய பிரதேசங்களில் கண்காணிப்புப் பணியை மேற்கொள்வது தொடர்பாக கண்காணிப்புக் குழு ஆலோசனை செய்வதாக அக்குழுவின அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.(ம-3)

### நோர்வே தூதுவர் கிளிநொச்சிக்கு!

கொழும்பு,பெப்.22

வாஷிங்ரனில் இம்மாத முற்பகுதியில் நடைபெற்ற இலங்கைக்கு நிதி உதவி வழங்குவது குறித்த மாநாட்டில ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிக்கப்படவுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலில் விருப்பு வாக்குக்கோர கூட்டமைப்பு வேட்பாளர்கள் முடிவு

## நேற்றுக் கூடித் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப்ரவரி22

**நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் போட்டியிடும் தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர்கள் விருப்பு வாக்குக் கோருவது என்று முடிவு செய்திருக்கிறார்கள். முன்னர் தெரிவிக்கப்பட்டதற்கு மாறாக தேர்தலில் இம்முறையும் கூட்டமைப்பு வேட்பாளர்கள் விருப்பு வாக்கு வேட்டையில் ஈடுபடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.**

**யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களில் நேற்று நடந்த தமிழ்க் கூட்டமைப்பின் தேர்தல் தொடர்பான கூட்டங்களில் இதுதொடர்பான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.**

தமிழ் மக்களின் ஒற்றுமையை உலகறியச் செய்யவும் நாடாளுமன்றத்தில் அவர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தி அதன் வலுவைப் பன்மடங்காக்கவும் இம்முறை தேர்தலில் புதுவியூகம் அமைக்கப்பட்டுள்ளன என்று கூட்டமைப்பின் இணைப்பாளர் சுரேஷ்பிரேமச் சந்திரனும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் ஜோசப்பரராஜசிங்கமும் முன்னர் தெரிவித்திருந்தனர்.

அதன்படி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எந்த வேட்பாளரும் விருப்பு வாக்குகளைக் கோருவதில்லை என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த முடிவுபற்றிக் கூட்டமைப்பின கடந்த தேர்தல் கூட்டங்களில் விரிவாக ஆராயப்பட்டது. முன்மொழியப்பட்ட வேட்பாளர்கள் தேர்தலில் விருப்பு வாக்குப் பெறும் முறையையே தேர்தலில் பின்பற்ற வேண்டும் என்றும் -

தேர்தலில் தமக்கு விருப்பமான வேட்பாளர்களைத் தெரிவுசெய்ய மக்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் -

கூட்டமைப்பு உறுப்பினர்கள் பலா இந்தக் கூட்டங்களில் வலியுறுத்தி வந்தனர் என்று கூறப்படுகின்றது.

மட்டக்களப்பில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் நேற்று விடு

(16ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மாவட்ட தமிழ் வேட்பாளர்கள் இன்று புலிகளுடன் சந்தித்துப் பேச்சு

### வேட்புமனுக்களிலும் கையெழுத்திடுவர்

அம்பாறை,பெப்.22

அம்பாறை மாவட்டத்தில் தமிழ் கூட்டமைப்புச் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் இன்று கலந்துரையாடல் நடத்துகின்றனர்.

இக்கலந்துரையாடலின் பின்னர் வேட்பாளர்கள் தமது வேட்புமனுக்களில் கையொப்பம் இடுவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதில் விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ், அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் பாவா ஆகியோர் கலந்துகொள்வா.

இந்த மாவட்டத்தில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் விவரம் வருமாறு:-

அ.சந்திரநேரு (முன்னாள் எம்.பி), க.பத்மநாதன், கா.விவேகா

(16ஆம் பக்கம் பார்க்க)

## மகேஸ்வரன் கொழும்பில் போட்டி

முன்னாள் இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சிப் பட்டியலில் போட்டியிடயிருக்கிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்றுப் பிற்பகல் அவர் வேட்புமனுவில் கைச்சாத்திட்டார் எனச செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் கடந்த இரு தேர்தல்களில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட்டு அவர் வெற்றி பெற்றிருந்தார்.

எனினும் இம்முறை யாழ். மாவட்ட அரசியலில் இருந்து விலகுவதாக அவர் கடந்த வாரம் அறிவித்தார். பின்னர் கொழும்பு சென்றிருந்த அவர் அங்கு தேர்தலில் போட்டியிடுவதற்குத தீர்மானித்திருக்கிறார். (ம-3-ரி)

## வடக்கு-கிழக்கில் நாளை ஒரே நேரத்தில் தமிழ்க் கூட்டமைப்பு வேட்புமனுத் தாக்கல்

யாழ்ப்பாணம்,பெப்.22

வடக்கு - கிழக்கில் சமகலாத்தில நாளை நண்பகல் தமிழ்க்கூட்டமைப்பினர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஒரே நேரத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய கூட்டமைப்புத் தலைவர்கள் முடிவெடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை வேட்புமனுக்கள் தொடர்பாக இறுதி முடிவு எட்டப்பட்டுள்ளது. எனினும், வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட வேட்புமனுக்கள் இன்று நண்பகல் இறுதியாக்கப்பட இருக்கின்றன.

இவ்விரு மாவட்டங்களிலும் வேட்பாளர்கள் தொடர்பாகக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் நேற்றுக் கூடி ஆராய்ந்தனர். எனினும் இறுதிப்பட்டியல் இன்று நண்பகலுக்கு முன் பூர்த்தியாகிவிடும் என்று தெரிவிக்கப்பட்டது.

**திருகோணமலை**

நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் வைத்து கூட்டமைப்பு உறுப்பினர்கள் இன்று நண்பகல் வேட்புமனுவில் கையொப்பமிட உள்ளனர். நாளை திங்கட்கிழமை நண்பகல் இவர்கள் தமது வேட்புமனுவினைச் சமர்ப்பிக்க உள்ளனர்.

வேட்பாளர் பட்டியலில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவர், இளைப்பாறிய பாடசாலை அதிபரும் மூத்த உறுப்பினருமான முஸ்லிம் ஒருவர், கடந்த தேர்தலில் போட்டியிட்ட இளம் வேட்பாளர் ஒருவர், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் மூத்த உறுப்பினர் ஒருவர், தமிழீழ விடுதலைக் கழகத்தின் சார்பில் வங்கி உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் ஈழமக்கள புரட்சிகர விடுதலை முன்னணியின் சுரேஸ் அணியைச் சேர்ந்த மூத்த

(16ஆம் பக்கம் பார்க்க)

யாழ். தேர்தல் களம் சூடுபிடிக்கிறது:

## ஆனந்தசங்கரி தலைமையில் சுயேச்சைக் குழு தயார்?

யாழ்ப்பாணம்,பெப்.22

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரியின் தலைமையில் சுயேச்சைக் குழு ஒன்று போட்டியிடத் தயாராக இருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

நேற்றுக் காலை யாழ்ப்பாணம் வந்த கூட்டணித் தலைவர் ஸ்ரான்லி வீதியிலுள்ள கட்சி அலுவலகத்தில் தமது ஆதரவாளர்களுடன் அவசர அவசரமாக ஆலோசனை நடத்தியிருக்கின்றார்.

தமிழ்க்கூட்டமைப்பின் வேட்பாளர் பட்டியலில் தமக்கும் தமது ஆதரவாளர்களுக்கும் இடம் ஒதுக்கப்படுவது தொடர்பாக இதுவரை எந்த முடிவுகளும் அறிவிக்கப்படாததாலேயே சுயேச்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி., வரதர் அணி கூட்டு டக்ளஸ் தலைமையில் போட்டி!

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ். மாவட்டத்தில் ஈ.பி.டி.பி - ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) கூட்டணி நாளை வேட்புமனுவைத் தாக்கல் செய்யவிருக்கிறது.

இக்கூட்டணி முன்னாள் எம்பியான டக்ளஸ் தேவானந்தாவை முதன்மை வேட்பாளராகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் போட்டியிடயிருக்கிறது.

இக்கூட்டணியின் முன்னாள் எம்.பிக்களான எஸ்.சிவதாசன், வி.கே.குகேந்திரன், எஸ்.பாஸ்கரன், எஸ்.தவராசா மற்றும் நிசாந்தன், செல்வி மகேஸ்வரி வேலாயுதம், சின்னபாலா, சீவரத்தினம் ஆகியோரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) சார்பில் எஸ்.சிறீதரனும் போட்டியிடுகின்றனர்.

வடக்கு - கிழக்கில் சகல மாவட்டங்களிலும், கொழும்பிலும் ஈ.பி.டி.பி.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மு.கா. யாழ்ப்பாணத்தில் தனித்துப் போட்டியிடும்

கொழும்பு,பெப்.22

யாழ். மாவட்டத்திலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட இருப்பதாக அக்கட்சியின் பேச்சாளர் டாக்டர் ஹபீஸ் உதயனுக்குத் தெரிவித்தார்.

மௌலவி பி.ஏ.எஸ்.சுபியான் தலைமையிலான குழு, யாழ்ப்பாணத்தில் போட்டியிடவுள்ளது.

வடக்கு - கிழக்கில் சகல மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிட முஸ்லிம் காங்கிரஸ் முடிவுசெய்தபோதும, வன்னி, அம்பாறை மாவட்டங்களில் வேறு அணிகளுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவது குறித்து ஆராய்ந்து வருகின்றோம் - என்றும் அவர் தெரிவிததார்.

(ம-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும்

# பிரதான கட்சிகள் தீர்வுகாணத் தவறிவிட்டன அதனாலேயே பிக்குகள் களத்தில் குதித்தனர்

### தேசிய ஹெல உறுமய கட்சியின் யாழ். வேட்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22

நாட்டில் உள்ள சகல இன, மத மக்களின் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வை இரு பிரதான கட்சிகளின் தலைவர்களும் காணவில்லை. இதன் காரணமாகவே இம்முறை தேர்தலில் பிக்குகள் களத்தில் குதித்துள்ளனர்.

சாத்வீக வழியில் சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் மூலம் எமது கொள்கையை முன்வைப்போம். மேடை அமைத்துக் கூட்டங்கள் எதையும் நடத்த மாட்டோம்.

ஜாதிக ஹெல உறுமயவின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் வண. விதாரந்தினியோ மேதாந்த தேரர் மேற கண்டவாறு உதயனுக்குத் தெரிவித்தார்.

வேட்புமனுத் தாக்கல் செய்வதற்காக யாழ். வந்த அவர் தமது கட்சியின செயற்பாடு குறித்துத் தெரிவித்ததாவது:-

இலங்கையில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றாக சமாதானத்துடன் வாழவேண்டும் என்பதே எமது பிரார்த்தனை.

அந்தப் பிரார்த்தனையுடனேயே தேர்தலில் பங்குபற்ற முடிவுசெய்தோம்.

நாட்டில் உள்ள இரு பெரும் கட்சிகளின் தலைவர்களும் சிங்கள, தமிழ், முஸ்லிம் சகோதரர்கள் ஒன்றாக வாழக்கூடிய தீர்வு எதையும் காணவில்லை. அரசியல் நோக்குடனேயே அவர்கள்



செயற்படுகின்றனர்.

இந்த நாட்டில் உள்ள மக்கள் மத, இன வேறுபாடுகள் இன்றி வாழக்கூடிய தீர்வே இன்று தேவை.

இந்தத் தீர்வை வலியுறுத்தியே தேர்தலில் நாம் நிற்க முடிவுசெய்தோம்.

எமது கட்சியை தேர்தல் திணைக்களத்தில் பதிவுசெய்ய காலம் போதாது இருந்தது. இதன் காரணமாக 'சிஹல உறுமய' கட்சியை 'ஜாதிக ஹெல உறுமய' என்ற பெயரில் மாற்றித் தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

எமது கட்சியில் பிக்குகள் மட்டுமே போட்டியிடுகின்றனர். வேறு பொது ஆள்களுக்கு இடமில்லை.

இலங்கை ஒரே நாடாக இருக்க வேண்டும். தெற்கு, வடக்கு, கிழக்கு என நாடு பிரியக்கூடாது என்பதுதான எமது பிரதான கொள்கை. அந்த அடிப்படையில் எமது கட்சியின் பிரசாரம் இருக்கும்.

எமது கொள்கையில் யாழ். மாவட்டத்தில் வாழும் தமிழ் மக்களையும் இணைத்துக்கொள்வதற்காகவே இங்கு போட்டியிடுகின்றோம். நாடு முழுவதும் எமது கட்சி வேட்பாளர்களை நிறுத்தும்.

வடக்கு மக்கள் பிரச்சினை தெற்கு மக்களுக்குத் தெரியாது. தெற்கு மக்கள் பிரச்சினை வடக்கு மக்களுக்குத் தெரியாது. இரு பிரிவு மக்களையும் அரவணைத்து நாடு பிளவுபடாமல பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

தேர்தலில் போட்டியிடுவதற்கு முன் சகல கட்சிகளுக்கும் கடிதம் அனுப்பினோம். எந்தக் கட்சியும் எமது கடிதத்தைப் பொருட்படுத்தவில்லை. பதில் கூட அனுப்பவில்லை. இதையடுத்தே தேர்தலில் பங்குகொள்ள முடிவு செய்தோம்.

வேற்று நாட்டவர்கள் இந்த நாட்டில் இருந்து வெளியேறிய பின்னர் அரசியலில் இரு கட்சிகளாக மக்கள் பிளவுபட்டு நிற்கிறார்கள். தமிழ் - சிங்கள மக்கள் உறவுகளையும் சீர்குலைத்துள்ளனர் எமது தலைமைகள் - என்றார் அவர்.

தங்கள் கட்சியினர் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களுக்கு ஆதரவு வழங்குவீர்களா? எனக் கேட்டதற்கு "எமது கட்சி சமாதான பேச்சுக்களுக்கு ஆதரவு வழங்கும். ஆயுதங்களைக் கைவிட்டு, நாட்டுப் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டு செயற்படுவதாக விடுதலைப் புலிகள் அறிவிக்கவேண்டும். அதன் பின்னர் விடுதலைப் புலிகளின் தலைவர்களும் நாட்டின் தலைவர்களும் ஒரே மேசையில் இருந்து பேசவேண்டும். பேச்சுக்கள் தொடர்ச்சியாக இடம் பெற்றுத் தீர்வுகள் காணப்படவேண்டும். இதுவே எமது நிலைப்பாடு" - என்றார் அவர். (ம-3)

## அரச வாகனங்களை தேர்தலில் பயன்படுத்த ஜனாதிபதி தடை

எதிர்வரும் தேர்தலில் அரச வாகனங்களையோ, சொத்துக்களையோ எந்த வேட்பாளரும் பாவிக்க அனுமதிக்கக்கூடாது.

மேற்கண்ட கண்டிப்பான உத்தரவை ஜனாதிபதி திறைசேரிச் செயலாளருக்கு விடுத்துள்ளார்.

அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும சபைகளின் வாகனங்கள், சொத்துக்களும் தேர்தலுக்கு பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது என்றும் அந்த உத்தரவில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

அரசின் நிதி எக்காரணம் கொண்டும் தேர்தல் பணிகளுக்காகப் பயன்படுத்த திறைசேரி உதவக் கூடாது என்றும் அந்த உத்தரவில் கேட்கப்பட்டுள்ளது. (ம-3)

## ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து நீக்கம்!

கொழும்பு,பெப்.22

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து முன்னாள் எம்.பிக்களான எம்எஸ்எம்ஹரீஸ், அன்வர் இஸ்மாயில ஆகியோர் நேற்று நீக்கப்பட்டுள்ளனர்.

கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கூடிய உயர்மட்டக் குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

கட்சியின் கட்டுப்பாடுகளை மீறியது, மக்களைத் தவறாக வழிநடத்தியது, வேறு கட்சிகளுக்கு உதவியது ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் இவர்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை -

திருகோணமலை மாவட்டத்தில் ஐ.தே.கவின் முன்னாள் எம்.பியான எம்.ஏ.மஹ்ரூப், பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம்.பியான நஜீத் மஜீத் ஆகியோர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்துள்ளனர் என்றும் -

அவர்கள் முஸ்லிம் காங்கிரஸ் பட்டியலில் போட்டியிடுவார்கள் என்றும் - அக்கட்சியின் பேச்சாளர் டாக்டர் ஹபீஸ் தெரிவித்தார். (ம-3)

## கூட்டணியின் வன்னித் தலைவர் நேற்றுத் திடீர் இராஜினாமா!

வவுனியா,பெப்.22

தமிழர் விடுதலைக் கூட்டணியின வன்னிக் கிளைத் தலைவர் சதாசிவம் குலதேவராசா நேற்று அந்தப் பதவியில் இருந்து திடீரென இராஜினாமாச் செய்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாடுகள் திருப்திகரமாக இல்லை என்றும் இதன் காரணத்தால் வடக்கு - கிழக்கு அரசியல் நடவடிக்கைகளில் இருந்து தான் ஒதுங்குவதாகவும் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.

வவுனியா வெகுஜன ஒன்றியத் தலைமைப் பதவியிலிருந்தும் வவுனியா வர்த்தகர் சங்க உப தலைவா பதவியிலிருந்தும் இராஜினாமாச் செய்வதாகவும் அவர் அறிவித்துள்ளார். தேர்தல் பட்டியல் தயாரிப்பு முதல் கட்சியின் செயற்பாடுகள்வரை உட்பூசல்களும் ஊழல்களும் இடம் பெறுவதாகவும் இதனாலேயே தான் இந்த முடிவை எடுத்ததாகவும் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல் இன்று மதியம் பெரும்பாலும் வெளியாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாகப் போட்டியிடுவார் என்று தெரிவிக்கப்பட்ட சட்டத்தரணி சிற்றம்பலம் இப்போது போட்டியிடமாட்டார் என்று கூட்டணித் தரப்புக்கள் தெரிவிக்கின்றன. இவரின் இடத்தை நிரப்புவதிலேயே சிக்கல்கள் தோன்றி இருப்பதாகவும் கூறப்படுகின்றது. (ம-164)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 2 ஆம் ஆண்டு நிறைவு இன்று

### மனிதநேய அமைப்புக்கள் கண்காணிப்புக் குழுவுக்கு மகஜர் கையளிக்கும்

இலங்கை அரசுக்கும் விடுதலைப புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்தினால் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இன்று மகஜர் கையளிக்கப்படவுள்ளது.

இன்று காலை 10 மணிக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகப் பொறுப்பாளரிடம் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் இந்த மகஜரைக் கையளிக்கவுள்ளனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைகின்ற போதும், மக்களின் இயல்பு வாழ்க்கை சீரமைக்கப்படவில்லை. அத்துடன் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்குள் மக்கள் குடியமர அனுமதிக்கப்படவில்லை. பொதுவாகப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்கள் எதுவுமே நடைமுறைப் படுத்தப்படவில்லை என்பவற்றைக் குறிப்பிட்டு இந்த மகஜர் கையளிக்கப் படவுள்ளதாகக் கூறப்பட்டது.(எ-10)

## நகரில் இரவில் மூடப்படும் வீதியில் இனி 24 மணிநேரப் போக்குவரத்து

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ். ஆரியகுளம் சந்தியிலிருந்து ஆஸ்பத்திரி வீதிச் சந்திவரை செல்லும் பலாலி வீதியின் பாகம் நேற்று முதல் 24 மணி நேரமும் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டது.

இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள பகுதியூடாகச் செல்லும் இவ்வீதி 1995ஆம் ஆண்டு முதல் நீண்டகாலமாக மூடப்பட்டிருந்தது. பின்னர் புரிந்துணர்வு உடன்படிக்கையையடுத்து கடந்த 2002ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் இவ்வீதி பொதுமக்களின் பாவனைக்கெனப் பகல் முழுவதும் திறந்துவிடப் பட்டது. இதுவரை காலமும் இரவு 8 மணியுடன் மூடப்பட்ட இவ்வீதியை நேற்றுமுதல் இராணுவத்தினர் முழு நேர மக்கள் பாவனைக்குத் திறந்து விட்டுள்ளனர்.

தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் மாணவர்களின் நன்மை கருதியும் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் கருதியும் இவ்வீதியை 24 மணிநேரமும் திறந்து விட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ-8)

# வவுனியாவில் தேங்கியுள்ள தபால்களை எடுத்துவர சமாதான செயலக உதவியை நாடுகிறது திணைக்களம்

### தபால்மா அதிபர் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22

வவுனியா தபாலகத்தில் தேங்கியுள்ள வடபகுதிக்கான தபால்களை யாழ்ப்பாணம் எடுத்துவருவது குறித்து சமாதானச் செயலகத்தின் உதவியைத் தபால் திணைக்களம் நாடியுள்ளது.

நேற்று யாழ்ப்பாணம் வந்த தபாலமா அதிபர் கே.ஏ.சேனாதீர இந்தத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிததாவது:-

வவுனியா தபாலகத்தில் தேங்கியுள்ள தபால்கள் தொடர்பாகப் பல விடயங்களை ஆராய வேண்டியுள்ளது. இந்த விடயத்தைக் கையாள்வதற்கென தபால் தொடர்பு அமைச்சின் செயலாளர் குழு ஒன்றை நியமித்துள்ளார்.

வவுனியா தபாலகத்தில் தேங்கியுள்ள தபால் பொதிகளில் பெருமளவானவை வர்த்தக ரீதியற்ற பொதிகளாகும். இவற்றை உரியவர்களிடம் சேர்ப்பிப்பது தொடர்பாக நாம் அரசின சமாதானச் செயலகத்துடன் தொடர்பு கொண்டுள்ளோம். இவற்றை உரியவர்களிடம் கையளிக்கும்வரை அதற்கான பொறுப்பு தபால் திணைக்களத்தையே சாரும். எனவே எமது சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் செயற்படுவது குறித்து நாம் அமைச்சிடமிருந்து பரிந்துரைகளைக் கோரியுள்ளோம். அமைச்சின் செயலாளர் இது குறித்து பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். தற்போதைய நிலைமை குறித்து நாம் அவருக்குத் தெரிவித்துள்ளோம். இதற்கான மாற்று வழியை அரசின் சமாதானச் செயலகம் மேற்கொள்ளுமென நான் நம்புகின்றேன். இவ்வாறான நிலைமைகளில் சமாதானச் செயலகமே தலையிட்டுப் பேச்சுக்களை மேற்கொள்ள வேண்டும்.

யாழ். பிரதம தபாலகக் கட்டடத்தில் சிறுசிறு வேலைகள் பூர்த்தி செய்யப்படவேண்டியுள்ளன. இவற்றைக் கூடிய விரைவில் பூர்த்தி செய்யுமாறு நாம் பொறியியலாளருக்குத் தெரிவித்துள்ளோம். அந்த வேலைகள் முடிவடைந்ததும் அதற்கான கொடுப்பனவுகள செலுத்தி முடிக்கப்படும்.

பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு யாழ். பிரதம தபாலகத்தை விரைவில் திறக்க ஆவன செய்யுமாறு நாம் தபால், தொலைத் தொடர்புத்துறை அமைச்சுக்குத் தெரிவிக்கவுள்ளோம். இந்த நிலையில் தற்போதைய தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தற்போதுள்ள கட்டடங்களில் இடவசதிகளும் பாதுகாப்பும் போதாதுள்ளன. இவ்வளவு வசதிகள் கொண்ட கட்டடமொன்றை நிர்மாணித்து வைத்துக்கொண்டு அதைப் பொது மக்களின் பாவனைக்குப் பயன்படுத்தாதிருப்பது



நல்ல விடயமல்ல.

அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பதவியிருந்த வேளையில் யாழ்ப்பாணம், சாவகச்சேரி மற்றும் காரைநகர் ஆகிய தபாலகங்களின் கட்டுமாணப் பணிகளை மிக விரைவாக முடிக்குமாறு பணித்திருந்தார். குறிப்பிட்ட தினத்துக்கு முன்பாக அந்த வேலைகள் பூர்த்தி செய்யப்படவேண்டுமெனக் கூறி அதற்கான திகதியையும நிர்ணயித்திருந்தார். சாவகச்சேரி தபால் நிலையத்துக்கான நிதியொதுக்கீட்டை மேற்கொண்டது மட்டுமன்றி அது தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் அமைச்சர் பாக்கீர் மாக்கார் அக்கறை எடுத்துக்கொண்டார்.

யாழ் தபாலகத்தைத் திறந்து வைபபது குறித்து திகதியொன்று நிர்ணயிக்கப்பட்டால் மாத்திரமே கட்டடத்தின் உள்ளே பூர்த்தி செய்யப்படவேண்டிய சிறுசிறு வேலைகளைப் பூர்த்தி செய்யமுடியும். அவ்விதம் திறப்பதற்கான திகதி நிர்ணயிக்கப்படாவிட்டால் கட்டடத்தைத் திறந்து வைக்கும வேளையில் மீண்டும் சிறுசிறு வேலைகளைச் செய்யவேண்டி ஏற்படும். திறந்து வைப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகளையே எம்மால் மேற்கொள்ள முடியும். ஆனால், திறப்பதற்கான திகதி பற்றி முடிவெடுப்பது அமைச்சையே சார்ந்ததாகும்.

சாவகச்சேரித் தபாலகம் தற்போது அமைந்துள்ள பழைய கட்டடத்தில் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதத்திலான இடவசதி போதாதுள்ளது. அத்துடன் அது பாதுகாப்பற்றதுமாகும். ஆதலால், தேர்தல தொடர்பான பணிகளைப் புதிதாக அமைக்கப்பட்ட தபாலகக் கட்டடத்தில் மேற்கொள்ளுமாறும், உத்தியோக பூர்வமாக அக்கட்டடம் திறந்து வைப்பது குறித்துப் பின்னர் தெரியப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளோம். பழைய கட்டடத்தில் உடைவுகள் சிதைவுகள இருப்பதால் அது தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பற்றதெனக் கருதுகின்றோம்.

காரைநகர் தபாலகம் குறித்து பிரச்சினை ஏதுமில்லை. அது தற்போது முறையாக இயங்கி வருகின்றது - என்றார். (ம-8-ரி)

# தமது அரசியல் நிலைப்பாட்டை விளக்கி கூட்டணித் தலைவர் விடுத்துள்ள அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.22

தேர்தலின் போதும் தேர்தலின் பின்னரும் அமைதிப்பேச்சுத் தொடர்பான கொள்கையில் மாற்றம் இருக்காது. அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கி பேச்சுக்கு விடுதலைப் புலிகளின் உந்துசக்தியாகச் செயற்படுவேன்.

- இவ்வாறு தமது அரசியல் நிலைப்பாட்டை விளக்கித் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி விடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர், கட்சியின் அலுவலகத்திலிருந்தவாறு நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

18.02.2004 இல் நடைபெற்ற தமிழர் விடுதலைக்கூட்டணியின் தேர்தல் நியமனக்குழுக் கூட்டத்தின்போது கட்சியின்செயலாளர் நாயகத்தின் அசமந்தப்போக்குக் காரணமாக எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டதால் நான் எனது மனச்சாட்சியின்படி வர இருக்கும் தேர்தல் தொடர்பான எனது கருத்துக்களையும், ஆலோசனையையும் குழு முன் வைத்தேன். நான் தெரிவித்த கருத்துக்கள் ஊடகங்கள் மூலம் வெளிவந்த போது எங்கள் கட்சியின் நீண்டகால தொண்டர்களும், தலைவர்களும் மற்றும் தமிழ்ப் பெரியோர்களும் தாம் விளங்கிக்கொண்ட அளவிற்கு கிரகித்துக்கொண்டு என்னைப் பாராட்டியதோடு, மேலும் தெளிவான ஒரு விளக்கத்தை வேண்டிநின்ற காரணத்தினால் இந்த விளக்க அறிக்கையை உங்களுக்குத் தருகின்றேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் நியமனக்கூட்டம் தொடர்பாக நான் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனுக்கு எழுதிய கடிதம் பற்றிய விவரம் ஊடகங்கள் மூலம் நீங்கள் அறிந்திருப்பீர்கள். வேண்டுமென்றே, உள்நோக்கத்துடன், ஏற்படுத்தப்பட்ட முறைகேடான நடவடிக்கைகளையும், இடைஞ்சல்களையும் பொருட்படுத்தாது கடைசிக் கூட்டமாக பல விட்டுக்கொடுப்புக்களுக்கு பின் தேர்தல் நியமனக் குழுக் கூட்டத்தில் நான் கலந்துகொண்டேன்.

கூட்டம் ஆரம்பித்த வேளையிலும் கூட நான்கேட்டுக்கொண்டபடி, வேட்பாளர்கள் தொடர்பான முழுமையான விவரங்கள் முறைப்படி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதால் கால அவகாசம் இல்லாத நிலையிலும் முறைப்படி விண்ணப்பங்களைக்கோரி வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்போம என நான் கூறியபோது இவ்வாறான விவரங்கள் கோரும் நடைமுறை இதற்கு முன் மேற்கொள்ளப்படவில்லை என செயலாளர் நாயகம் கூறினார். எங்கள் கட்சிப்பிரச்சினைகள் இதற்கு முன் நீதிமன்றம் சென்றதில்லை, இப்படியான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி விட்டீர்களே என அவருக்குப் பதில் கூறினேன்.

### தேர்தல் நியமன பாரம்பரியம்

இச்சந்தர்ப்பத்தில் இனப்பிரச்சினை தொடர்பான ஒரு முன்னுதாரண நிகழ்ச்சியை நான் கூறக்கடமைப்பட்டுள்ளேன். 1977ஆம் ஆண்டுத் தேர்தலின் போது தமிழர் விடுதலைக்கூட்டணி தேர்தல் நியமனக்குழு மறைந்த தலைவர் சிவா ஐயாவின் கொழும்பு இல்லத்தில் கூடி 3அல்லது 4 நாள்களாக வேட்பாளர்களின் வேட்புமனுக்களை ஆராய்ந்து. நேர்முக விசாரணை நடத்தி வேட்பாளர் பட்டியலுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது. குமார் பொன்னம்பலம் அவர்கள் வட்டுக்கோட்டைத் தொகுதியை நிராகரித்தபொழுது நேரம் இரவு 11.30 மணியாகும். காலஞ்சென்ற எனது அருமை நண்பர் தா.திருநாவுக்கரசு அவர்களை இரவு 12 மணிக்கு தேர்தல் குழு முன் அழைத்து நேர்முக விசாரணையின் பின் அதிகாலை 2 மணியளவில் அவரை வட்டுக்கோட்டைத்தொகுதிக்கு வேட்பாளராக ஏற்று முடிவெடுக்கப்பட்டது. இதுதான் தேர்தல் நியமனம் தொடர்பான கட்சிப் பாரம்பரியம். ஆனால், அப்போது செயலாளர் நாயகமாக இருந்து மிகநேர்த்தியாகச் செயற்பட்டவர் அ.அமிர்தலிங்கம் அவர்கள், இந்த நடைமுறையை நேர்மை நெறிநின்று செயற்பட்டவர்கள், கடைப்பிடித்தார்கள் என்பதுதான உண்மை.

தேர்தல் நியமனக்குழு எதையுமே நேர்வழி நின்று சாதிக்கமாட்டாது என்பதை அறிந்துகொண்ட நான், தமிழ் இனத்தைப்பொறுத்தவரை இத்தேர்தல் அதிமுக்கியமானது என்பதால் பின்வரும் யோசனைகளை தேர்தல் நியமனக்குழு முன் வைத்தேன்.

விண்ணப்பங்களை முறைப்படி கோரி, வேட்பாளர்களைத் தெரிவு செய்யத்தவறினால் பின்வரும் விடயங்களை நடைமுறைப்படுத்த உதவும்படி கேட்டுக்கொண்டேன்.

1. தமிழீழ விடுதலைப் புலிகள் பல்வேறு தமிழ் மாவட்டங்களிலும் தமது தெரிவுக்கமைவாக வேட்பாளர்களை நிறுத்தி தேர்தலில் போட்டியிடவேண்டும். அவர்கள் விரும்பினால் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கட்சியையும் உதயசூரியன் சின்னத்தையும் பயன்படுத்தலாம்.

2. நடக்க இருக்கும் நாடாளுமன்றத்தேர்தலில் 2001இல் ஏற்படுத்தப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்த அங்கத்துவக் கட்சிகள் எதுவும் போட்டியிடக்கூடாது.

3. முன்னாள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்திருந்த கட்சிகளின் தலைவர்கள் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும்.

இந்த முடிவுக்கு நான் வர வேறு பல காரணங்களும் உண்டு.

1. தமிழர் விடுதலைக்கூட்டணி தொடர்பான காரணங்கள்.

கூட்டணியில் இன்று முக்கிய பதவிகளில் இருப்பவர்கள் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியைக் காட்டிக்கொடுத்தேனும் பதவி அதிகாரம் பெற்றுத் தங்கள் நிலையை வலுப்படுத்தும் நோக்கோடு செயற்படுபவர்களாகக் காணப்படுகின்றனர்.

உட்கட்சிப்பூசல்கள் உச்சக்கட்டத்தை எட்டி இன்று நிலைமை நீதிமன்றம் வரை சென்றுவிட்டது. சதி முயற்சிகளில் ஈடுபடுவோரும், குழிபறிப்பு வேலைசெய்வோரும், காட்டிக்கொடுப்பவர்களும் இட்டுக்கட்டிப் பிரசாரம் செய்பவர்களும் கட்சியில் மலிந்து கிடக்கிறார்கள்.

முக்கியமானவர்கள் கட்சியை வலுப்படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளாது தம்மை வலுப்படுத்த கட்சியை எவ்வாறு பயன்படுத்தலாம் என பலவாறும் சூழ்ச்சி செய்கிறார்கள்.

கூட்டணித் தலைவர்கள் மீது எக்காலத்திலும் ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்படவில்லை. இக்குற்றச்சாட்டுகள் இன்று நாடாளுமன்றத்திலும் மாநகரசபையிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது எமக்கு மனக்கஷ்டத்தை ஏற்படுத்துகிறது.

சுய நலமிகள் அனைவரும் களைந்தெடுக்கப்பட்டு மீண்டும் கட்சியை எஞ்சியுள்ள புனிதர்கள் உதவியுடன் புனிதப்படுத்தி கட்சிப் பாரம்பரியம், மேன்மை மிக்க வரலாறு பேணப்படும் வரை தேர்தலில் இருந்து விலகி நிற்பது நல்ல பலனைத் தருமென நாம் பூரணமாக நம்புகின்றோம்.

2. முன்னைய தமிழ்த் தேசியக கூட்டமைப்புத் தொடர்பான காரணங்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, கொழும்பு தமிழ்ப் பெரியார்களின் நன்முயற்சியால் ஏற்படுத்தப்பட்டது. 2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் வாக்குகள் சிதறடிக்க இடமளிக்காது அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து போட்டியிட்டு அதிகூடிய தமிழ்ப்பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும் என்ற முக்கிய நோக்குடன் உருவாக்கப்பட்டது. தேர்தல் நடக்கும்வரை இணைந்துசெயற்பட்டவர்கள் தேர்தலின் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியை அழிக்கும் அவர்களது திட்டம் படிப்படியாக செயலுருவம் பெறத்தொடங்கியது. கூட்டணியின் அழிவில்தான் தங்களது வளர்ச்சி உறுதிபடும் எனத் திட்டமிட்டு செயற்படத்தொடங்கினர். கூட்டணியின் செல்வாக்கினால் வலுப்பெறமுடியும் என நம்பிவந்து இணைந்துகொண்டவர்கள் தங்களை வலுப்படுத்திக் கொண்ட பின் தமிழர் விடுதலைக் கூட்டணியை வலுவிழக்கச்செய்யும் நோக்குடன் வசைபாடத் தொடங்கினர்.

கூட்டணித் தலைமை - புலிகளை விமர்சிப்பதை நிறுத்த வேண்டும் என தமிழர் கூட்டமைப்புக் கட்சித் தலைவர்கள் அடிக்கடி கூறத் தவறுவதே இல்லை. இது அவர்களின் கற்பனையில் எழுந்த வஞ்சகக்கருத்து. அவ்வாறு யாரும் விமர்சிக்கவில்லை.

இத்தகைய வஞ்சக நோக்குடன் செயற்படும் கட்சிகளுடன் தொடர்ந்தும் செயற்படமுடியாது என்பது எனது தெளிவான கருத்து. இக்கருத்தின் அடிப்படையில்தான் மனம் புண்பட்ட நிலையில் விடுதலைப் புலிகளின் வேட்பாளர்கள் மட்டும் போட்டியிடவேண்டும் என்று கூறுகின்றேன்.

அன்பான தமிழ்ப் பெருங்குடி மக்களே! எத்தகைய புனிதமான நோக்கத்திற்கும், கருத்துக்கும் கற்பனையான வஞ்சகக் கருத்துக்களைத் தெரிவிக்கும் கபட நெஞ்சத்தினர் எம்மத்தியில் இல்லாமல் இல்லை. என்னுடைய வேட்பாளர் பற்றிய இக்கருத்துக்கு வஞ்சகமாக, வியாக்கியானம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகின்றது. சுயநலத்தை மட்டும் இலக்காகக்கொண்டு செயற்படும் அரசியல்வாதிகளுக்கு வேறு விதமாகச் சிந்திக்கத் தெரியாது. வஞ்சனையோடு சிந்திக்கவும், செயற்படவும்தான் அவர்களால் முடியும்

வரும் தேர்தலில் புலிகள் பிரதிநிதிகள் மட்டும்தான் போட்டியிட வேண்டும். ஏனைய கட்சிகள் அவர்களின் முழுமையான வெற்றிக்குப் பாடுபடவேண்டும் என்ற எனது கருத்து நேர்மையானது. என்னுடைய கடந்த கால அரசியல் செயற்பாடுகள் இதற்கு ஆதாரமானவை.

ஒருவனுக்கு பதவியும், அரசியல் செல்வாக்கும், அதிகார அந்தஸதும் தானாக வந்து சேரவேண்டும். என்ற கொள்கையுடையவன் நான். கூட்டணியைத் தந்தை செல்வாவும், தலைவர் ஜீ.ஜீயும் இணைந்து அமைத்த போது, அதன் ஸ்தாபக உறுப்பினனாக என்னை இணைத்துக்கொண்டேன். பதவி பெறுவதற்குப் படிக்கல்லாக இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் நோக்குடன் நான் அவ்வாறு செயற்படவில்லை. நாடாளுமன்ற உறுப்பினராகவே என்னை இணைத்துக்கொண்டேன். அவ்வாறு இணைந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களில் இன்றும் கட்சியில் தொடர்ந்தும் இருப்பவன் நான் மட்டுமே! ஏனையோர் கட்சிக்கு வந்து பதவிபெற்றவர்கள். ஆகையால் சுயநல நோக்குடன் நான் கருத்துக் கூறவில்லை.

கூட்டணியின் தீர்மானத்திற்கமைய எனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை 1983இல் ராஜினாமாச் செய்தேன். தொடர்ந்து 2000 ஆம் ஆண்டு வரை 17 வருடங்கள் எந்தப் பதவியையும் நாடிநிற்காது கட்சிப் பணிகளில் மட்டும் என்னை இணைத்துக்கொண்டேன். இடையில் இரண்டு முறை தேர்தலில் பங்குகொள்ளாமலே நாடாளுமன்ற உறுப்பினர் பதவி கிடைக்க இருந்த வாய்ப்பினையும் நிராகரித்து வேறு ஒருவருக்கு வாய்ப்பளித்தவன நான். பதவி எனக்கு ஒருபொருட்டல்ல. பதவிக்காக ஏமாற்றுக் கருத்துக கூறமாட்டேன்.

கூட்டணியில் 30 ஆண்டுகள் தொடர்ந்து தொண்டனாக உழைத்த பின் 2002இல் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டேன். 30வருட காலம் பொறுமையுடன் தலைமைக்கு கட்டுப்பட்டுத் துணையாக இருந்து செயற்பட்டு மகிழ்ந்தவன் நான். சுயநலம் பேணிக் கருத்துக் கூறமாட்டேன்.

இத்தகைய வரலாற்றுக்கு உரித்துடைய நான் கபடத்தனமாகக் கருதது கூறமாட்டேன் என்பதைத் தமிழினம் நம்பவேண்டும்.

### புலிகள் பற்றிய எனது கருத்து

புலிகள் பற்றிய எனது கருத்து, ஒரு திறந்த புத்தகம். இலங்கை நாடாளுமன்றத்தில், சிங்களத் தலைவர்கள் மத்தியில் புலிகள் சார்பாக முதன்முறையாகப் பேசியவன் நான். "ஆனையிறவை வெற்றி கொள்ளலாம என்று கனவு காணாதீர்கள். இந்தியாவிடம் ஓடிச்சென்று எங்கள் இராணுவ வீரர்களை உயிரோடு மீட்டுத் தாருங்கள் என மன்றாடும் நிலை மீண்டும் வராது என மனப்பால் குடிக்காதீர்கள்" என்று பேசியவன் நான். என்னிடம் கபடத் தனம் இல்லை. எனது அரசியல் சகபாடிகள் இதனை எனது குறைபாடாகச் சுட்டிக் காட்டிப் பேசுவதுமுண்டு.

2001இல் கூட்டமைப்பு உருவாக தமிழ்ப் பெரியார்கள் செயற்பட்டபோது, ஆயுதக் குழுக்களால் எனது கட்சித் தலைவர்களுக்கு நேர்ந்த கதியை நினைத்து வருந்திய நிலையிலும், தமிழ் இனத்தின் விடிவுக்காக இணைந்து செயற்படச் சம்மதித்தேன். கூட்டமைப்பின் முக்கிய கொள்கைத் திட்டமாக பின்வரும் விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

1. புலிகள் மீது விதிக்கப்பட்ட தடையை அரசு நீக்கவேண்டும்.

2. தமிழர் உரிமை தொடர்பான பேச்சுக்கள் புலிகளுடன் மாத்திரம் இடம்பெறவேண்டும்.

3. சமகாலத்தில் வேறு எவருடனும் தமிழர் உரிமை தொடர்பாகப் பேசக்கூடாது.

4. உடனடியாகப் போர்நிறுத்தம் மேற்கொள்ளவேண்டும்.

5. பொருளாதாரத்தடை, போக்குவரத்துத்தடை நீக்கப்பட வேண்டும்.

இக்கொள்கைகளை எழுத்துக்கெழுத்து மாறுபடாது கடைப்பிடித்து வந்துள்ளேன். ஏற்றுக்கொள்ளப்பட்ட இக்கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

### பிரபாவுக்கு கடிதம் எழுதினேன்

தம்பி பிரபாகரனைத் தேர்தலின் பின் நாம் சந்தித்த போது அன்பு கலந்த மரியாதையுடன் ஆனந்த சங்கரி அண்ணன் எனப்பெயர் சொல்லி அழைத்துக் கருத்துக் கூறினார். இந்த உறவு நிலை விஷமிகளால் கெடுக்கப்பட்டு விட்டதோ என நான் ஐயுற்ற நிலையில் தம்பிக்குத் தன் நிலை விளக்கமாக ஒரு கடிதம் எழுதினேன். அக்கடிதமும் அவரைச் சென்றடையவில்லையோ எனவும் ஐயுற்றேன்.

இன்றைய நிலையிலும் மேற்கூறிய கொள்கைகளில் எந்த மாற்றமும் இல்லை. பிரதம மந்திரி அவர்களிடமும், அண்மையில் ஜனாதிபதியிடமும் இக்கருத்துக்களை வலியுறுத்திக் கூறியுள்ளேன். தொடர்ந்தும் இதே கொள்கை அடிப்படையில் செயற்படுவேன்.

அன்பார்ந்த தமிழ் மக்களே! உங்கள் சார்பாக 50 ஆண்டுகளாக அரசியல் பணியில் ஈடுபட்டு வருகின்றேன். தொடர்ந்தும் உங்கள் பணிக்காக என்னை அர்ப்பணித்துச் செயற்படுவேன். இதய சுத்தியுடன் வரும் தேர்தல் தொடர்பான என் கருத்துக்களைக் கூறியுள்ளேன்.

வரும் 24ஆந்திகதி நியமனப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் கடைசித் தினம் ஆகையால் இன்னும் இரண்டு தினங்களுக்குள் இந்த ஆலோசனை தொடர்பாக முடிவெடுத்துச் செயற்பட வேண்டும். மாறாக, முன்னைய கூட்டமைப்பைச் சேர்ந்த கட்சிகள் தேர்தலில் போட்டியிடுமிடத்து தமிழர் விடுதலைக் கூட்டணியும் கட்சி அடிப்படையிலோ அல்லது சுயேச்சையாகவோ போட்டியிட நிர்ப்பந்திக்கப்படும் எந்த நிலையிலும், தேர்தலின் போதும், தேர்தலின் பின்பும் அமைதிப் பேச்சுத் தொடர்பான எங்கள் கொள்கைகளில் மாற்றம் இருக்காது முழுமையான ஒத்துழைப்பு வழங்கி பேச்சுக்களுக்கு விடுதலைப் புலிகளின உந்துசக்தியாக செயற்படுவதோடு எக்காலத்திலும் இனத் துரோகி என்ற பெயரோடு எனது உயிர் பிரியாது என்பதையும் வலியுறுத்திக் கூறுகின்றேன்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## நான்கு பெரியோர்கள் நினைவாக முத்திரை வெளியீடு

கொழும்பு,பெப்.22

நாட்டின் சிறப்புமிக்க நான்கு பெரியோர்களை நினைவு கூரும் முகமாக தபால் திணைக்களத்தின் முத்திரைப் பணியகம் முத்திரைகளையும் முதல்நாள் அஞ்சல் உறைகளையும வெளியிடவுள்ளது. இவ்வைபவம் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10 மணிக்கு இரத்மலானையில் உள்ள 'பரமதம்ம சேத்திய பிரிவெனா' வளவில் நடைபெறவுள்ளது.

தொலைத்தொடர்பு அமைச்சர் டி.எம்.ஜயரத்ன தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஐ-7-8)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

ஊரெழு கிழக்கு வளர்பிறை சனசமூக நிலையமும், வளர்பிறை சேமிப்புச் சங்கமும் இணைந்து நடத்தும் பாராட்டு விழாவும், மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு இ.மன்மதராசன் தலைமையில் வளர்பிறை கலையரங்க முன்றிலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிராம அலுவலர் வ.சந்திரசேகரம் கலந்துகொள்ளவுள்ளார்.(எ-10)

☆ ☆ ☆

தென்மராட்சி,பெப்.22

மந்துவில் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாம் இன்று காலை 9.00 மணி தொடக்கம் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில் நடைபெறும்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பரிசோதனை முகாமில் கண், நீரிழிவு, இரத்த அமுக்கம், பெண்நோயியல், வாய்ப்புற்று, பொதுமருத்துவம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என செயலாளர் லயன் கா.சற்குணதேவன் அறிவித்துள்ளார். (எ-117)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,பெப்.22

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. (எ-10)

☆ ☆ ☆

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 22ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினராக பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசுவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆசியுரைகளை சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.(எ-10)

☆ ☆ ☆

2003 ஆம் ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் ஜே/108 கிராம அலுவலர் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அ.சீவாஅமிர்தம் தலைமையில் நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. (எ-10)

## வெவ்வேறு விபத்துச் சம்பவங்களில் மூவர் தலையில் படுகாயமடைந்தனர்

யாழ்ப்பாணம்,பெப்.22

மூன்று வெவ்வேறிடங்களில் கடந்த 19ஆம், 20ஆம் திகதிகளில் இடம்பெற்ற விபத்துக்களில் மூவர் தலைப் பகுதியில் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த 20ஆம் திகதி கரணவாய் மூத்த விநாயகர் கோவிலடியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் கரணவாய் பொன்னம்பலம் வித்தியாசாலை மூன்றாம் தர மாணவனான பேரின்பநாதன் டிலக்ஷன் (வயது 8) என்ற சிறுவன் படுகாயமடைந்தான்.

இச்சிறுவன் பாடசாலைக்கு நடந்து சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளொன்று சிறுவனை மோதியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சிறுவன் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

கடந்த 19ஆம் திகதி மட்டுவிலில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் - சைக்கிள் விபத்தொன்றில் சைக்கிளில் சென்றவரான கணபதி மகேந்திரன் (வயது 36) என்பவர் தலையில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை -

மாங்குளம், மன்னகுளம் பகுதியில் இடம்பெற்ற லொறி - சைக்கிள் விபத்தில் தலையில் படுகாயமடைந்த கந்தையா இளையதம்பி (வயது 53) என்பவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளார். (ஐ-8-15)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

கலர்மீன்கள், புதியவகை மீன் தொட்டிகள், மோட்டர்கள், அழகுப் பொருள்கள், லவ்பேட்ஸ், கூடுகள், பூங்கன்றுகள், பூச்சாடிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 55A, அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (27846)

Suzuki 50, N.P.H.B 9459 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.பொன்னம்பலம், இல.247, பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை. T.P.:226-3575.(28642)

## வீடு விற்பனைக்கு

யாழ்.பழைய பூங்கா வீதியில் மறவகுளத்துக்கு மேற்காக சுண்டுகுளி மகளிர் கல்லூரி, சென்.ஜோன்ஸ கல்லூரிகளுக்குப் பக்கமாக 5 பரப்புக் காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமதி ச.தவேந்திரன், இல.36, சந்தனமாதா ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P. 222 2300. (28706)

ஊரெழு கிழக்கு, ஊரெழுவில் இராசமணி குலசேகரம் அவர்களின் 18 பரப்புக் காணியுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: கா.சற்குணதேவன், T.C Lane, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். T.P. 222 5440. (28753)

இல.10, கில்னர் லேனில் வீடு உடன விற்பனைக்குண்டு. தொடர்பு: மா.பெ. முத்தையா, இல.10, கில்னர் லேன், யாழ்ப்பாணம். சந்திக்கும் 'நேரம்: 8-12, 2-6. (28641)

## தொலைபேசி விற்பனைக்கு

மோட்டரோலா தொலைபேசி ஒன்று பருத்தித்துறையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.செல்லததுரை (J.P.) தும்பளை வீதி, பருத்தித்துறை. T.P.:0776 052485, 0776120921. (28763)

## கார் விற்பனைக்கு

பாவித்த மொறிஸ் கார் (1275 குதிரை வலு 1969 மொடல் 5ஸ்ரீ... இலக்கமுடையது). உடன் விற்பனைகுண்டு. விலைரூபா 75,000 இற்கு மேல். தொடர்பு: 158(114), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 222-5672.(C/33378)

11ஸ்ரீ 9xxx Toyata Corella (நீலநிறம்) விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: 021 - 226 -3575 (28727)

## கடை விற்பனைக்கு

இல.237, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணத்தில் (மிட்டாஸ் கடைச் சந்திக்கும், சத்திரச் சந்திக்கும் இடையில்) அமைநதுள்ள (நீளம் 30அடி, அகலம் 16அடி) கடை விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.- 0777-722564. (24Hrs), 021-2225120 (10.00a.m-5.00p.m) (28742)

## கடை வாடகைக்கு

யாழ். நகரில் இரு கடைகள் வாடகைக்குண்டு. தொடர்பு: 767, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (28713)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

500-தொடர் இலக்க MD.90-6-17 மொடல் ஒரு கைப்பாவனையில் எந்தவித மறுசீரமைப்பும் செய்யாது ஆரம்ப இயந்திர நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு:55, சீனியர் லேன், யாழ்ப்பாணம். (28762)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(28639)

நிறைகூடிய புறொயிலர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து வேண்டிய நிறையில் பெற்றுக் கொள்ளலாம். விலைகுறைக்கப்பட்டுள்ளது. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டை. சந்தி. T.P.:222-3529, 222 2867. (28700)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் 40/- Prima பேட்டுக் குஞ்சுகள் 60/- 01-03-2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். பருத்தித்துறைக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28640)

## வாடகைக்கு வீடு தேவை

அரசதொழில் செய்யும் சிறிய குடும்பம் ஒன்றுக்கு கொக்குவில், கோண்டாவில், நல்லூர் சுற்றாடல்களில் சிறிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு:0777 - 563703. (28759)

## வீடு வாடகைக்கு

புதிதாகக் கட்டப்பட்ட முற்றிலும் நில ஓடு (மாபிள்) பதிக்கப்பட்ட வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். (கீழ் வீடு மட்டும்). தொடர்பு: ஜெயந்தி, கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (28560)

## அறை வாடகைக்கு

பல்கலைக்கழக மாணவர் இரண்டு பேருக்கு அறை வாடகைக்கு உண்டு. தொடர்பு: 291, அரசடி றோட், கந்தர்மடம், நல்லூர், யாழ்ப்பாணம்.(28752)

## இலகு திருமண சேவை

1969, பரணி, செவ்வாயற்ற, 15 பாவமுள்ள, U.Kயில் வசிக்கும் Computer Engineer மணமகனுக்கு Sponsar இல் செய்யக்கூடிய U.K., Norway, Canada மணமகள் தேவை. தொடர்பு: இலகு திருமணசேவை, நாசசிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.(28588)

## தவறிவிட்டது

கூட்டுறவுச் சங்க முக்கிய ஆவணங்கள் அடங்கிய கறுப்புநிற BAG ஒன்று 19-02-2004 வியாழக்கிழமை மானிப்பாய் சங்கானை வீதிப்பகுதிகளில் தவறிவீழ்ந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் பரிஷ் ப.நோ.கூ.சங்க அலுவலகத்தில் ஒப்படைத்துதவவும் சன்மானம் வழங்கப்படும். T.P 222 6699, 0712 307184, 2756. (28711)

கடந்த 07-02-2004 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலைககுச் சென்ற மினிபஸ்ஸில் நடனக்குறிப்புகள் அடங்கிய கொப்பி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கல்வயல் மித்திரா தொலைத் தொடர்பு நிலை யத்தில் ஒப்படைக்கவும். (சி-33390)

உரும்பிராய் தெற்கு செல்வம் லக்ஸ்மன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல. 831380160V), விசேட அ.அட்டை என்பன 05.02.2004 அன்று மருதனார்மடத்துக்கும் இணுவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு முன்னால் இருக்கும் இரும்புக் கடையில் ஒப்படைத்துதவவும். (28755)

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971இல் பிறந்த, உதயத்துச் செவ்வாய் U.K. இல் Work permit இல் தொழில்புரியும், ஸ்பொன்சர் செய்யக்கூடிய M.Sc. பட்டதாரி மணமகளுக்கு, நற்குணமுள்ள பட்டதாரி மணமகன் தேவை. ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்பு: விள. இல.:2171, C/O உதயன். (28692)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 35 வயது, அனுஷ நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்ற ஆசிரியைக்கு 42 வயதுக்குட்பட்ட நடுத்தர சிறு அரசாங்கத்தொழில்/கூட்டுறவு உத்தியோகத்தர்/சொந்தமாக வியாபாரம் புரியும் மணமகன் தேவை. ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2168 C/o உதயன். (28557)

## மணமகள் தேவை

1974, உத்தராடம் 2பாவம் குறைந்த U.K. Engineer மணமகனுக்கு கௌரவ குடும்ப அழகான B.Sc இற்கு மேற்பட்ட மணமகள் தேவை. Sponser உண்டு. துரை விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்பபாணம். (28673)

## மணமக்கள் தேவை

வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்ற, நல்ல பணியிலுள்ள (தோசமுள்ள, தோசமற்ற) டாக்டர், எஞ்சினியர், அரச - தனியார்துறை சார்ந்த மணமக்களின் ஜாதகங்கள் உண்டு. 2 புகைப்படங்களுடன் தொடர்பு கொள்ளவும். சிவாலயா சர்வதேச திருமண நிலையம், ஸ்ரீ.வைகுந்தவாசன் ஆச்சிரமம், 68/15, சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (28710)

## விற்பனைக்கு

56 - LITE ACE VAN
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
தியாகராஜா கிளினிக்,
191, ஆடியபாதம் வீதி.
திருநெல்வேலி.
☎ 021 222 5058.

## பொதுமக்களுக்கு முக்கிய அறிவித்தல்

**சீனிவாசகம்பிள்ளை தம்பையாப்பிள்ளை சமாதியின் சொத்துக்கள்**

யாழ்ப்பாணம், நல்லூர் சட்டநாதசுவாமி கோயிலுக்குப் பக்கத்தில் அமைந்திருக்கும் சீனிவாசகம்பிள்ளை தம்பையாப்பிள்ளையின் சமாதிக்குரிய காணி - வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்த்திரிக் யாழ்ப்பாணம் பகுதி நல்லூர்க் கோயிற்பற்று நல்லூர் இறை 'சங்கிலித் தோப்பு நிலப்பரப்பு 22 என்றும் காணிக்குள் சமாதிக்குரிய கிட்டடமும் வெற்றுக் காணியும் இருக்கின்றது. இக்காணியை சட்டத்திற்கு மாறான ஒரு சிலர் சேர்ந்த தனிப்பட்ட குழு பிறருக்கு குத்தகைக்குக் கொடுக்கவும விலைக்கு விற்கவும் முயற்சிக்கிறார்கள். இக்காணி சீனிவாசகம்பிள்ளை தம்பையாப்பிள்ளை சமாதியின் தர்மச் சொத்தாகும்.

சீனிவாசகம்பிள்ளை தம்பையாப்பிள்ளையின் தர்மச் சொத்துக்களுக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற 12ஆம் இலக்க நம்பிக்கைச் சொத்து வழக்கின்படி குறித்த சமாதிக்கு நானே தர்மகர்த்தாவென்றும அவ்வழக்கில் நம்பிக்கைச் சொத்து சட்டத்தின் 112ஆம் பிரிவின்படி எனக்கு உரிமை வழங்கும் சென்றடைந்த கட்டளை (Vesting Order) வழங்கப்பட்டிருக்கிறது. அக்கட்டளையில் மேலே கூறப்பட்ட ஆதனம் முதலாம் ஆதனமாக விவரிக்கபட்டிருக்கிறது.

தர்மச் சொத்துகளுக்கு காலாவதிச் சட்டம் (Prescription Ordinanace) கட்டுப்படுத்தாது என்பதால் அச்சட்டத்தின்படி தர்மச் சொததுக்களுக்கு எதிராக யாரும் உரிமைகோர முடியாது.

ஆகவே, மேற்கூறப்பட்ட காணியையிட்டு பொதுமக்கள் யாராகுதல தனிநபர் குழுக்களிடம் பணத்தைக் கொடுத்து ஏமாறவேண்டாம் என்று இத்தால் அறிவிக்கின்றேன்.

மேற்கூறப்பட்ட காணி விடயமாக மேற்கூறப்பட்ட சமாதியின் விடயமாக 16-02-2003ஆம் திகதி வெளியான தினக்குரலில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது

**சின்னத்தம்பியாப்பிள்ளை துரைராசா**
நல்லூர் சீனிவாசகம்பிள்ளை தம்பையாப்பிள்ளை தர்மகர்த்தா
124, டபிள்யு.ஏ.சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு 6. தொ.பேசி: 011-2365729. (28677) (34-13-19-21)

## வளரும் பயிரே... உறுதியுடன் வளர்க!



செல்வி
**தில்லையம்பலம் உமாசங்கரி**
(இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்)

கடந்த, 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த எங்கள் உமாக்குட்டி, சீருறு கல்வி பெற்றுப் பார்போற்ற வாழவாழ்த்துகின்றோம்.

மனதார வாழ்த்தும் :
அம்மா, அப்பா,
அன்ரி, அன்ரிப்பப்பா,
அத்தை, மாமா, அம்மம்மா.

தும்பளை,
பருத்தித்துறை.

(28715)(35-14-21)

## மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



நெடுந்தீவு நெழுவினி சித்திவிநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும், காணி ஆணையாளர் திணைக்கள முன்னாள் வெளிக்களப் போதனாசிரியருமான

**திரு.இராமலிங்கம் கந்தையா**

அவர்கள் 09.01.2004 அன்று அன்று யாழ்.மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். அவரது சேவை தொடர எல்லாம்வல்ல விநாயகனை வேண்டிக் கொள்வதுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**- பரிபாலனசபையினர்.**

நெழுவினி சித்திவிநாயகர்.
தேவஸ்தானம். நெடுந்தீவு.

(28749)(26-21-14-26)

## முக்கிய அறிவித்தல்

பிறிமா (Prima) கோழிக்குஞ்சுகளுக்கு யாழ். மாவட்டத்திற்கான ஏகவிநியோகஸ்தர் நல்லூர் பாம் சென்ரர் மட்டுமே.

போலியான வேறு பிறிமா குஞ்சுகளை வாங்கி ஏமாற வேண்டாம்.

நல்லூர் பாம் சென்டர்
(வீடியோ சென்ரர் வளவு)
19, முருகேசர் வீதி,
முத்திரைச் சந்தையடி,
நல்லூர்.

Ceylon Grain Elevators Ltd,
"PRIMA" Quality Chicks,
15, Rock House Lane,
Colombo - 15
T.No.: 011-2522556.

(28756) (26-14-21)



உ
கணபதி துணை

## உபநயன அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சுபானுவருடம் மாசி மாதம் 11ஆம் நாள் (23.02.2004) திங்கட்கிழமை திருதியைத் திதியும் உத்தரட்டாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய முற்பகல் மணி 11.15 இலிருந்து நண்பகல் 12.00மணி வரையுமுள்ள இடபலக்கின சுபமுகூர்த்தத்தில்

அரியாலை, சித்திவிநாயகர் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ இ.சுப்பிரமணியக் குருக்களின் பௌத்திரனும் எமது ஏக புத்திரனுமாகிய

சிரஞ்சீவி செல்வன்
**ஸ்ரீ பிரணவரூபன்**

அவர்களுக்கு எமது இல்லத்தில் யஞ்ஞோபவிததாரண பிரம்மோப தேசம் (பூணூல் தரித்தல்) செய்ய விநாயகப் பெருமானின் திருவருளும் பெரியோர்களின் ஆசியும் கிடைக்கப் பெற்றுள்ளது. ஆகவே, அத்தருணம் இஷ்டமித்திர குடும்ப சமேதராக வந்து உபநீதனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

77/2, A.V.றோட்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (28591)(35-14-21-26)

தங்கள் நல்வரவை நாடும் :
சிவஸ்ரீ சு.முரளீதரக்குருக்கள் – அனுராதா
தம்பதியினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலை 2003 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட நிலையில் 171 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்தைப் பெற்ற

**1.க.பிரசாந்தன்**

சிறப்புச் சித்திபெற்ற மாணவர்கள்

2. ஸ்ரீ. கவிப்பிரியன் – 146
3. ந. கஜீபன் – 140
4. ஜெ. நிரோஜினி – 120 ஆகியோரையும்

ஆங்கில தினப்போட்டியில் வெற்றியீட்டிய

1. செ.தர்மிகா தரம் 4 உறுப்பெழுத்து வ.ம. முதலாம் இடம்
2. செ.தர்மிகா தரம் 4 பாவோதல் கோ.ம. முதலாம் இடம்
3. கு.பாமகள் தரம் 5 பாவோதல் கோ.ம முதலாம் இடம்
4. த.தயாளினி தரம் 3 பாவோதல் கோ.ம மூன்றாம் இடம்

தமிழ்த்தினப் போட்டியில் வெற்றியீட்டிய

1. க.பிரசாந்தன் தரம் 5 வாசிப்பு வ.ம. இரண்டாம் இடம்
2. ஜெ.வானதி தரம் 5 ஆக்கத்திறன் வெளிப்பாடு வ.ம. மூன்றாம் இடம்
3. ஸ்ரீ. கவிப்பிரியன் தரம் 5 எழுத்தாக்கம் கோ.ம. முதலாம் இடம்
4. ஜெ. நிரோஜினி தரம் 5 பேச்சு கோ.ம இரண்டாம் இடம்
5. செ.தர்மிகா தரம் 4 தனிநடனம் கோ.ம. இரண்டாம் இடம்

திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றியீட்டிய

1. ஸ்ரீ. கவிப்பிரியன் தரம் 5 வ.ம. இரண்டாம் இடம்
2. க.பிரசாந்தன் தரம் 5 கோ.ம. இரண்டாம் இடம் ஆகியோரையும்

இவர்களை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் இவ்வெற்றிகளுக்கெல்லாம் தோன்றாத் துணையாய் நிற்கும் மருதடி விநாயகரின் பாத மலர்களைப் பணிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(28746) (34-26-14-21)

- பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.

யாழ்ப்பாணம்

# உதயன்

## கடமை செய்யத் தயாராகுக!

"எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி நடைபெறும் பொதுத் தேர்தலில் பெரும்பாலும் தொங்கு நாடாளு மன்றமே தெரிவாகும். பெரும்பான்மைக் கட்சி எதற்கும் தனித்து ஆட்சி அமைக்கும் நாடாளுமன்றப் பலம் கிடைக்காது.

"சுமார் 20 முதல் 25 ஆசனங்களை வெல்லும் கூட்டமைப்பே யார் ஆட்சி அமைப்பது என்பதைத் தீர்மானிக்கும் சக்தியாக அமையும்"

- இவை பிரபல சர்வதேச செய்தி ஏஜென்ஸியான "ரோய்ட்டர்" இலங்கை பொதுத் தேர்தல் தொடர்பாக நடத்திய கருத்துக் கணிப்பின் எதிர்வு கூறல்கள்.

இந்த எதிர்வு கூறலை இப்பத்தியில் ஏற்கனவே வேறு வாசகங்களில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். அவற்றில் ஒன்று, கடந்த திங்கட் கிழமை இப்பத்தியில் இடம்பெற்றது. அதில் கூறப்பட்டவற்றை ஒரு தடவை மீட்டுப்பார்ப்பது நல்லது.

"இத்தேர்தல், தமிழர் தரப்பைப் பொறுத்தவரை இரண்டு விடயங்கள் முக்கியமாகின்றன.

"ஒன்று - தமிழரின் ஏகோபித்த ஒற்றுமையை - ஐக்கியத்தை - வெளிப்படுத்துவதன் மூலம் தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்கும் முயற்சிகளைப் பலப்படுத்தித் தீவிரப்படுத்துவது.

"மற்றது - தமிழர்களுக்கு எதிரான பேரினவாத மிடுக்கு தெற்கில் கிளர்ந்துள்ள இச்சமயத்தில், அந்தச் சக்திகள் நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி, நாட்டைக் குட்டிச்சுவராக்குவதினின்றும் காப்பாற்றுவதற்காக தேசிய ரீதியில் ஆற்றவேண்டிய பங்கை நிறைவுசெய்வது.

"இத்தேர்தலில் தமிழரின் ஒற்றுமைப்பலம் சிதைவடைந்தால் அவர்களின் உரிமைப்போர் பாதிக்கப்படும்; பேரினவாதிகளின் கைகள் ஓங்கும். மொத்தத்தில் தமிழரின் எதிர்காலம் விபரீதமாகும்."

- இவையே நாம் குறிப்பிட்டிருந்தவை.

"பேரினவாத சக்திகள் நாட்டின் ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றி, நாட்டைக் குட்டிச்சுவராக்குவதினின்றும் காப்பாற்றுவதற்காக தேசிய ரீதியில் ஆற்றவேண்டிய தமிழர்களின் பங்களிப்பு" - என்று இப்பத்தியில் நாம் குறிப்பிட்ட விடயத்தைத்தான் இப்போது 'ரோய்ட்டர்' கருத்துக்கணிப்பு "இத்தேர்தல் முடிவில் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழர் கூட்டமைப்பு உருவாகும்" என்று வேறு வடிவத்தில் வெளிப்படுத்தி இருக்கின்றது - எடுத்துக் காட்டியிருக்கின்றது.

ஆனால் -

தேசிய அரசியலில் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழர் தரப்பு உருவெடுப்பது இன்றைய நிலையில் ஏதோ பெரிய சாதனையைத் தமிழர் தரப்புக்குப் பெற்றுத்தந்துவிடும் என்று நாம் கனவுகாணக் கூடாது என்பதும் இன்றைய கட்டத்தில் முக்கியமானது.

அரசு அமைக்கும் சக்தியை தமிழர் தரப்பு தீர்மானித்தாலும் அடுத்த ஓரிரு ஆண்டுகளுக்கு இதே ஜனாதிபதிதான் நிறைவேற்று அதிகாரத்தோடு பதவியில் இருக்கப்போகின்றார்.

தமிழர் தரப்பின் ஆதரவோடு ஆட்சிக்கு வரக்கூடிய அரசு இந்த ஜனாதிபதியை மீறி தமிழருக்கு உரிய எதையாவது வெட்டிப்பிடுங்கித் தந்துவிடும் என நப்பாசை கொள்வது அர்த்தமற்றது. கடந்த இரண்டு வருடகால பட்டறிவு இந்தப் பாடத்தை எமக்குத் தெளிவுபடுத்தியுள்ளது.

அப்படி என்றால், இத்தேர்தலில் ஒற்றுமைப்பட்டு, ஒருமனதாக, ஒருமுகமாக, ஐக்கியப்பட்டு வாக்களிப்பதன் மூலம் நாம் என்ன சாதித்துவிடப்போகின்றோம் என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றதல்லவா?

ஆம். அதுதான் முக்கியமானது.

★ ஒற்றுமையாக வாக்களிப்பதன் மூலம் தமிழ்மக்கள் தங்களின் ஏகோபித்த அபிலாஷை - அவா - விருப்பம் எது என்பதை சர்வதேச சமூகத்துக்குக் காட்டப் போகின்றார்கள் - இது முதலாவது.

★ பேரினவாத சக்திகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி தமிழர் அழிப்பை முன்னெடுப்பதைத் தடுப்பது - இது இரண்டாவது.

★ அடுத்ததுதான் முக்கியமானது; சிந்திக்கப்பட வேண்டியது.

தமிழர் தரப்பின் முதலும் முழுமையுமான பலம் அவர்களின் போராட்ட வலு - ஆயுத வலிமை - இராணுவ வல்லமை. அது ஒன்றே தமிழர் தம் உரிமைப் போருக்கு ஒரே காப்பரண். அதற்கு முன்னால் இந்த ஜனநாயக அரசியல் நகர்வுகளும் தேர்தல் வெற்றிகளும் பொருட்டாகமாட்டா.

எனினும், அந்த இராணுவ வல்லமைக்கு அரசியல் ரீதியாகவும் மேலும் வலுச்சேர்க்க இத்தேர்தல் ஒரு வாய்ப்பாக வந்து கிட்டியிருக்கிறது.

வலிமைக்கு வலிமை சேர்க்க மக்கள் தங்கள் கடனைத் தவறாது ஆற்றுவது கடமை. அதைச் செய்ய முழுத் தமிழினமுமே தயாராக வேண்டும்.

---

மாணவரின் குடிதண்ணீர் பிரச்சினை தொடர்பாக

# மனித உரிமை ஆணைக்குழுவினர் கல்வியியற் கல்லூரிக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற கல்லூரியில் தங்கியிருந்து பயிற்சி பெற்றுவரும் மாணவர்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் கல்லூரிக்கு நேரில் சென்று விசாரணை நடத்தியிருக்கின்றனர்.

மாணவர்கள் தரப்பில் இருந்து கிடைத்ததாகக் கூறப்படும் ஒரு முறைப்பாட்டை அடுத்தே ஆணைக்குழு அதிகாரிகள் அங்கு சென்று குடிதண்ணீர் விநியோக நிலைமையைப் பார்வையிட்டிருக்கின்றனர்.

விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் தற்போது சீராக மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - யாழ். தேசிய கல்வியியற கல்லூரிக்குள் அண்மைய நாள்களாகக் காணப்பட்ட அமைதியின்மை தற்போது சீரடைந்துவிட்டதாகக் கல்வியியற் கல்லூரி நிர்வாக வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

மாணவர்களின் நடத்தைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவந்த விரிவுரையாளர்கள் தங்கள் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டனர்.

தடைப்பட்டுப் போயிருந்த விரிவுரைகள் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளன. (ஐ-7)

# கலைஞர்களுக்கு வைத்தியக் காப்புறுதி கல்வி அமைச்சு அறிமுகம் செய்தது

## துறைசார்ந்தோரை விண்ணப்பிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.22

சகல துறைசார் கலைஞர்களுக்கும் வைத்தியக் காப்புறுதி வழங்கும் திட்டம் ஒன்றை மனிதவள அபிவிருத்தி, கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஆரம்பித்துள்ளது.

'ப்ரதீபா ப்ரணாம' என்ற பெயரில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இந்தக் காப்புறுதித் திட்டத்தில் 18 வயது தொடக்கம் 70 வயது வரையிலான கலைஞர்கள் இணைந்துகொள்ள முடியும்.

மேற்படி காப்புறுதித் திட்டத்தில் கலைஞர்களை உள்ளீர்ப்பது தொடர்பான அறிவுறுத்தல்களும், மாதிரி விண்ணப்பப்படிவங்களும் கல்வி அமைச்சின் கலாசார அலுவல்கள் பிரிவினால் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பணிமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு கலைஞர்களும் தத்தமது பிரதேச செயலகங்களில் பணியாற்றும் கலாசார உத்தியோகத்தர்களிடம் மேற்படி காப்புறுதித் திட்டம் தொடர்பான மேலதிக விளக்கங்களையும் விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக்கொள்ளலாம் என்றும் -

பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களுடன் கலை நிகழ்வுகள் குறித்த புகைப்படங்கள், நற்சான்றிதழ்கள் இணைக்கப்படவேண்டும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி காப்புறுதித் திட்டம் வரையறுக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அமுல்படுத்தப்படவுள்ளது. (எ)

# கச்சதீவு செல்லும் படகுகளை பதிவுசெய்யுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.22

அடுத்தமாதம் 30ஆம் திகதி நடைபெறவுள்ள கச்சதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தின்போது பயணிகள் படகுச்சேவை நடத்தவுள்ள படகுகளின் உரிமையாளர்களை அடுத்தமாதம் முதலாம், பத்தாம் திகதிகளில் முறையே குறிகாட்டுவான் இறங்குதுறையிலும், நெடுந்தீவு இறங்குதுறையிலும் பதிவுகளை மேற்கொள்ளுமாறு நெடுந்தீவு உதவி அரசஅதிபர் எஸ்.பேரானந்தன் கேட்டுள்ளார்.

படகு தொடர்பான ஆவணங்களின் போட்டோப் பிரதிகளுடன் உரிமையாளர்கள் அன்றையதினம் காலை 10 மணிக்கு இறங்கு துறைகளுக்குச் சமுகமளிக்க வேண்டும் என்றும் -

பதிவுகள் முடிவடைந்த பின்னர் அன்றைய தினம் கடற்படையினர் படகுகளைப் பரிசோதனை செய்து தகுதிச் சான்றிதழ்களை வழங்குவர் என்றும் - அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி ஆலய உற்சவம் இம்முறை ஒரு நாள் மட்டும் நடைபெறவுள்ளதால், யாத்திரிகர்கள் தங்களுடன் குடிதண்ணீர், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும் எடுத்துவரவேண்டும் என்றும் -

உற்சவ தினத்தன்று ஆலயச் சூழலில் எவ்விதமான களியாட்டங்களுக்கும், மதுபாவனைக்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-8)

யாழ். மாநகரசபைப் பிரிவில்

# 200 வீதி விளக்குகளை நிறுவ மின்சார சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட வீதிகளில் 200வீதி விளக்குகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மின்சார சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தப்பணிகளுக்கென மாநாகரசபை நிர்வாகம் 5லட்சத்து 36 ஆயிரம் ரூபா நிதியினை கடந்த ஆண்டு இலங்கை மின்சார சபைக்கு வழங்கியுள்ளது என்றும் -

இந்த நிதியினைப் பயன்படுத்தி ஒரு தொகுதி வீதி விளக்குகள் தற்போது நிறுவப்பட்டுள்ளன என்றும் -

மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏனைய பகுதிகளுக்கான வீதி விளக்குகளைப் பொருத்தும் பணிகள் தற்போது மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் - கூறப்பட்டது.

தற்போது குடாநாட்டில் அதிகரித்துவரும் வீதி விபத்துச் சம்பவங்களில் அநேகமானவை இரவு வேளைகளில் நடைபெறுகின்றன. இதனால், இத்தகைய விபத்துக்களை இயன்ற வரை தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன் வீதி விளக்குகளைப் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை - இந்த ஆண்டு இறுதிக்குள் குடாநாட்டில் வீதி விளக்குகள் இல்லாத வீதிகளுக்கு ஆயிரத்து 500 வீதி விளக்குகளைப் பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-6)

## நாளை

மாசி 11
திங்கட்கிழமை
(23.02.2004)
திதி : திருதியை
பகல் 2.59 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி
பகல் 3.52 வரை
சுபநேரம்: 12.31 - 2.01
ராகுகாலம்: 8.01 - 9.31
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நம்பிக்கைதான் இனிமையான எதிர்காலங்களை உருவாக்குகிறது.

# இளவாலை - தெல்லிப்பழை வீதியை பாவிக்க அனுமதி கோரி விண்ணப்பம்

## அரச ஊழியர்கள் அனுப்பிவைப்பு

தெல்லிப்பழை,பெப்.22

தெல்லிப்பழையில் உயர்பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்குள் இயங்கும் அரச அலுவலகங்களின் ஊழியர்கள் இளவாலை - தெல்லிப்பழை வீதியால், தெல்லிப்பழைச் சந்தி ஊடாகத் தமது அலுவலகங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறு பலாலி படைத் தலைமையகத்துக்கு விண்ணப்பித்துள்ளனர்.

மேற்படி வீதி ஊடான பொதுப் போக்குவரத்துக்குப் படையினர் தடை விதித்திருக்கின்றனர்.

இதனால், தெல்லிப்பழை வைத்தியசாலை தெல்லிப்பழை பிரதேச செயலகம், தெல்லிப்பழை பல நோ.கூ.சங்கம் ஆகியவற்றில் பணியாற்றும் ஊழியர்கள் சுன்னாகம், மல்லாகம் சந்திகள் ஊடாக இதுவரை காலமும் தத்தமது போக்குவரத்தை மேற்கொண்டனர்.

இந்தநிலையில், அளவெட்டி, இளவாலை, சண்டிலிப்பாய், பண்ணாகம் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மேற்படி அரச செயலகங்களின் ஊழியர்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதுவிடயம் தொடர்பாக, கடந்த மாதம் யாழ். படைத் தளபதியின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து இளவாலை - தெல்லிப்பழை வீதி ஊடாக அரச ஊழியர்கள் சென்றுவர அனுமதி வழங்குவதாகவும் -

எனினும மேற்படி வீதியைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்த விரும்புவோர் படைத் தலைமையகத்துக்கு விண்ணப்பிக்க வேண்டும் எனவும் - படைத் தளபதி கூறியிருந்தார்.

இதற்கமைவாக, இதுவரை 39 ஊழியர்கள் தமது விண்ணபங்களை பலாலி படைத்தலைமையகத்துக்கு அனுப்பிவைத்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-4-150)

காரைநகர் - ஊர்காவற்றுறை இடையில்

# பாதைப்படகுச் சேவை மீண்டும் ஆரம்பமானது

யாழ்ப்பாணம்,பெப்.22

ஊர்காவற்றுறைக்கும் - காரைநகருக்கும் இடையிலான பாதைப் படகுச்சேவை நேற்றுமுன்தினம் முதல் மீண்டும் ஆரம்பமானது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் இந்தச்சேவையைப் பொறுப்பேற்று நடத்துகின்றனர்.

மேற்படி சபைக்குச் சொந்தமான பாதைப்படகு யுத்த நிலைமைகளை அடுத்து கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டு பயணிகள் சேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

பின்னர், கடந்த வருட இறுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் மீண்டும் இந்த பாதைப் படகைப் பொறுப்பேற்றனர். எனினும், வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பொறுப்பேற்கப்பட்ட மறுநாளே பாதைப் படகு பழுதடைந்து விட்டது.

பின்னர், தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபரின் வேண்டுகோளுக்கு இணங்க ஊர்காவற்றுறை பிரதேசசபையினர் சிறிய படகு ஒன்றின் துணையுடன் பயணிகள் சேவையை நடத்தி வந்தமை தெரிந்ததே. (எ)

# பளை நகரப்பகுதியில் குடிதண்ணீர் விநியோகம்

## பிரதேச சபை நடவடிக்கை

தென்மராட்சி,பெப்.22

பளை நகரப் பகுதியில் வசிக்கும் வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் நலன்கருதி, 25லட்சம் ரூபா செலவில் குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொள்ள பளைப்பிரதேச சபை நடவடிக்கை எடுத்துள்ளது. பொதுச் சந்தையில் உள்ள கிணற்றிலிருந்து குடிதண்ணீர் பெறப்பட்டு குழாய் மூலம் நகர்ப் பகுதி, சந்தை, பஸ்நிலையம் ஆகியவற்றுக்குக் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

பளை நகர்ப்பகுதியில் இரவு தங்கும் பயணிகளுக்கு ஏற்படும் குடிதண்ணீர் தொடர்பான அசௌகரியங்களைத் தவிர்க்கும் பொருட்டு குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் -

விரைவில் இந்த வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-117)

உ

# இணுவில் அருள் கல்வி நிலைய அதிபரும் சிறந்த ஆசானுமாகிய உயர்திரு. இராசரத்தினம் அருட்செல்வம் அவர்களின் வெள்ளிவிழாச் சிறப்பிதழ்

-22.02.2004-



## பண்பால் உயர்ந்த ஆசிரியன்

திரு.இராசரத்தினம் அருட்செல்வம் அவர்கள் தனது ஆசிரிய சேவையில் வெள்ளிவிழாக் காண்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இவர் எனது குடும்ப நண்பராக மட்டுமன்றி உடன்பிறவாத சகோதரன் போன்ற இறுக்கமான உறவைக் கொண்ட அன்பர். எனது பிள்ளைகளது ஆசிரியராக விளங்கும் அவர்களது பண்பை எவரிடமும் காணமுடியாது.

இவரிடம் எல்லா ஆசிரியர்களும் பயிலவேண்டிய ஒரு பாடம் பண்பு என்பதுதான். மாணவர்களிடையே ஒரு தன்னிகரில்லாத தலைவனாக அவர் பரிணமிக்க இப்பண்புதான் காரணம் என நான் நினைக்கிறேன். மனித நேயம் என்பதை நன்கு புரிந்து கொண்டவர் என்பதனால் எந்தவொரு மாணவனது பிரச்சினையையும் இலகுவில் புரிந்துகொள்ளும் ஆற்றல் மிக்கவராக விளங்குகின்றார்.

ஆசிரியத் தொழிலைத் தெய்வமாக மதித்து நடப்பவர். எக்காரணம்கொண்டும் அத்தொழிலை அவமதிப்பது கிடையாது. அத்துடன், ஆசிரியத்தொழில் ஊடாகவே திருப்தியை அனுபவிப்பவரும் அவர்தான். இதன்காரணமாக வகுப்பறைக்குள் நுழைந்துவிட்டால் தன்னை மறந்து கற்பித்துக்கொண்டிருப்பார். மாணவர்களுக்கு இருக்கும் சந்தேகத்தைத் தெரிவிப்பதற்கு அவர் கையாளும் உத்திகளை எவரும் வியக்காமல் இருக்க முடியாது. இன்றைய கல்வியுலகில் ஒரு 'MGR' என சகல ஆசிரியர்களாலும் புகழப்படும் ஒரு பெருந்தகை அவராவார்.

அவருக்கு எடுக்கப்படும் வெள்ளிவிழா தனியார் ஆசிரிய சேவைக்கு வழங்கப்படும் ஒரு கௌரவம் என நான் நம்புகிறேன். அருள் கல்வி நிறுவனத்தினது வளர்ச்சியும் பெருமையும் திரு.அருட்செல்வம் ஆசிரியரது அர்ப்பணிப்பினாலும் விசுவாசத்தினாலும் உருவாக்கப்பட்டது என்பதை எவராலும் மறுக்கமுடியாது. அவரது பண்பை எல்லா ஆசிரியர்களும் கடைப்பிடித்தால் அது மாணவ உலகம் செய்த தவப்பேறு என்றே நான் கூறுவேன்.

நல்ல ஆசிரியனாக, நல்ல சகோதரனாக, நல்ல கணவனாக, நல்ல நண்பனாக இருக்கக்கூடிய ஒருவரைக் குறிப்பிடும்படி யாரும் கேட்டால் அதற்கேற்ற உதாரண புருஷர் திரு.அருட்செல்வம்தான். அத்தகைய பண்புமிக்க ஒருவர் எமது கிராமத்துக்குக் கிடைத்தது பெரும்பேறு என மகிழ்வது மட்டுமன்றி அவர் தனது குடும்பத்துடன் இந்த அவனியிலே எல்லா நலன்களும் பெற்று நீடூழி காலம் வாழவேண்டுமென குலதெய்வமான ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையாரை வேண்டுகின்றேன்.

"வாழ்க வளமுடன் என வாழ்த்தும்"

**க.தேவராஜா J.P.**
தலைவர் வெள்ளிவிழாச்சபை,
தலைவர் / வணிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

## நெஞ்சிருக்கும்வரை நினைவிருக்கும்

திரு.இரா. அருட்செல்வம் அவர்கள் தனது பண்பால், செயலால், அன்பால் யாவரையும் தன்பால் ஈர்த்துக் கொண்டவர்.

இத்தகைய ஒருவருக்கு வெள்ளிவிழாச் செய்யவேண்டும் என்று பல பெரியோர்கள் எண்ணி எம்மை அதில் உற்சாகப்படுத்தினர். அதன் வெளிப்பாடாகவே தலைவர் திரு.க.தேவராஜா தலைமையில் வெள்ளிவிழாச்சபை உருவானது.

இச்சபையின்மூலம் திரு.இரா. அருட்செல்வத்தின் 25 வருட சேவையை வெள்ளிவிழாவாக எடுத்து மணம்வீச வைத்துள்ளோம். இவ்விழா நடைபெறுவதற்கும் இம்மலர் மலர்வதற்கும் பெரியோர்கள், நண்பர்கள், உறவினர்கள், மாணவ மணிகள், அன்பு நெஞ்சம் கொண்டவர்கள் எனப் பலர் எமக்குப் பலவகைகளிலும் -ஆக்கமும் ஊக்கமும் வழங்கினர். அதன் பயனாக இன்று அவருக்கு வெள்ளி விழா நடைபெறுகிறது. இந்தவகையில் இவ்விழாவையும் மலர் வெளியீட்டையும் செய்வதற்கு உதவிய அனைவருக்கும் எமது நன்றியறிதலைச் செலுத்துகின்றோம்.

| | | |
|---|---|---|
| **ம.நாகரூபன்** | **இரா.கணேஸ்** | **இரா.சிவகுமார்,** |
| உபதலைவர் | செயலாளர் | **சீ.பரமசிவம்,** |
| | | இணைப்பொருளாளர் |

## காட்சிக்கு எளிய கடமை வீரர்

"அறியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல"

என்ற வாக்கிற்கிணங்க அருள் கல்வி நிலையத்தின் நிறுவுநர் திரு. இரா. அருட்செல்வம் ஆசிரியர் அவர்களுக்கு விழா எடுப்பதற்குப் பல துறைகளிலும் உள்ள பெரியோர்கள் செய்யும் முயற்சி ஒரு நல்ல ஏற்பாடு. 'எழுத்தறிவித்த்வன் இறைவன் ஆவான்' என்பதற்கிணங்க சமுதாயத்தின் சிற்பியை உருவாக்குகின்ற புனிதமான ஆசிரியத் தொழிலினை மேற்கொண்டு காட்சிக்கு எளியவராக, கடமை வீரராகத் திகழும் ஆசிரியர் அவர்கள் தமது பணிகளில் மேன்மேலும் சிறந்து விளங்கி நீடூழி வாழ எல்லாம்வல்ல ஸ்ரீ பரராஜசேகரப் பெருமானை வேண்டுகிறேன்.


**சிவஸ்ரீ வை. சோமஸ்கந்தக் குருக்கள்**
பிரதமகுரு - ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்,
இணுவில்.

(சி-33384) (24-16-19)

## விழா நாயகரின் சுயவிவரம்

பெற்றோர்: இராசரத்தினம் இரத்தினம்
பிறப்பு: 27.07.1958
இடம்: இணுவில் தெற்கு
ஆரம்பக்கல்வி: இணுவில் இந்துக் கல்லூரி
இரண்டாந்தரக் கல்வி: யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி
திருமணம்: 09.09.1991
மனைவி - கலைவாணி
கற்பித்த நிறுவனங்கள்:
1) வெல்நோண் சென்ரர் - கோண்டாவில்
2) றோயல் அக்கடமி கோண்டாவில்
3) School of Economics - கொக்குவில்
4) வெற்றிவேல் அக்கடமி - கொக்குவில்
5) பெரதேனியா இன்ஸ்ரிரியூட் - கொக்குவில்
6) புதிய உயர்கல்லூரி - யாழ்ப்பாணம்
7) C.C.A. - யாழ்ப்பாணம்
கற்பிக்கும் நிறுவனங்கள்:
1) BITSMAN - மானிப்பாய்
2) K.T.C. - கோண்டாவில்
3) EXPRESS in - கோப்பாய்
4) BRIGHTMAN - யாழ்ப்பாணம்
சொந்த நிறுவனம்:
A.T.C.
பொதுப்பதவி:
கல்வி ஆலோசகர் - இணுவில் பொதுநூலகம் (கல்விப் பிரிவு)
உபதலைவர்: பழைய மாணவர் சங்கம்,
இணுவில் இந்துக்கல்லூரி.
பொருளாளர்: அருட்கவி விநாசித்தம்பி
குழந்தைகள் காக்கும் கரம் நிதியம்

விழா நிகழ்வுகள்:
இடம்:
இணுவில்
ஸ்ரீபரராஜசேகரப்பிள்ளையார்
கல்யாண மண்டபம்
நேரம்: இன்று மாலை 2.30 மணி
தலைவர்: க.தேவராஜா
(யாழ். பல்கலைக்கழகம்)



### ஆனந்த சுகம் சிறந்து வாழி வாழி!

அன்புவளர் அறிஞர் திகழ் இணுவிலூரில்
அருட்கல்வி நிலையத்தின் அன்புத் தாய்போல்
பொன்பெருகு கணிதமொடு பொதுவிஞ்ஞானம்
போதிக்கும் நற்குருவாய் இருபத்தைந்தாண் (டு)
இன்பமுயர் பணிபுரிந்த புனிதச் செல்வர்
இனிய அருட்செல்வனெனும் நாமத்தானே
பொன்பெருகு கற்பகமாய் மனம்சிறந்த
புண்ணியனே தமிழ்மொழிபோல் வாழி வாழி!

**அருட்கவி.சீ.விநாசித்தம்பி**

## வாழ்க வளமுடன்

தனியார் கல்வி நிறுவன கல்விச் சேவையில் 25 வருடங்களைக்கண்டு நிற்கும் திருவாளர் இரா. அருட்செல்வம் ஆசிரியர் அவர்களுக்கு வெள்ளி விழாவினை ஏற்பாடு செய்திருக்கும் வெள்ளிவிழாச் சபைக்கு எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன்.

தற்கால சமூகமட்ட நிலைகளினூடாகப் பார்க்கும்போது ஓர் ஆசிரியர் 5 வருடங்கள் கூட மாணவர் மத்தியில் நிலைத்திருந்து தனது சேவையை வழங்கக்கூடிய நிலை அற்றுப்போயிருக்கும் சந்தர்ப்பத்தில் திரு. அருட்செல்வம் ஆசிரியர் 25 வருடங்கள் மாணவர்களது மனங்களில் நின்று அகலாது தனது சேவையை வழங்கியதோடு, இன்னும் வழங்கிக்கொண்டிருப்பது அவரின் ஆசிரியத்துவ ஆற்றலை வெளிப்படுத்தியிருக்கிறது.


திருவாளர் அருட்செல்வம் அவர்கள் ஆசிரியர் சேவையூடாக சமூகத் தொண்டினை செய்வதோடு, அதற்கு அப்பாலும் பொது அமைப்புக்களினூடாகத் தன்னாலான பணிகளை ஆற்றிவருவது சகலரும் கண்கூடே காணும் உண்மை.

இப்படியான சமூக சேவையாளனாகவும், நல் ஆசிரியனாகவும் விளங்கும் இவருக்கு, வெள்ளிவிழாவினை ஏற்பாடு செய்தமை சாலச் சிறந்ததே. இவ்வாறு இவர் சேவையில் வெள்ளிவிழாவினைக் கண்ட அருட்செல்வம் ஆசிரியர் அவர்கள் மேன்மேலும் பல வருடங்களாகத் தனது சேவையை இந்த ஈழத்திருநாட்டிற்கு வழங்கவேண்டும். அவ்வாறு வழங்கக்கூடிய சகல சௌபாக்கியங்களையும் எல்லாம்வல்ல இறைவன் வழங்க வேண்டுமென வாழ்த்தி வணங்குகிறேன்.

**S.R.ஜெயப்பிரகாசம்**
உதவிப் பிரதேச செயலாளர்,
உடுவில்.

மலர் அமைப்பு:
அருள் வெள்ளிவிழாச்சபை,
இணுவில் - 22.02.2004

அருள் குணம் படைத்த சிறந்த நல்லாசான்
ஆவல் மீதாரா அன்பு அகத்தார வெள்ளிவிழாவின்
தேவை மிக உணர்ந்து செய்யும் பாராட்டு
சேவைக்கு அளிக்கும் திருப்தி விழாவாகும்.



## இணுவிலில் ஓர் உத்தமன்

அருள் கல்வி நிறுவன இயக்குநர் திரு.அருட்செல்வம் அவர்களது 25ஆவது ஆண்டு நிறைவையிட்டு பாராட்டு வழங்குவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நான் தம்பி அருளை சிறுபிள்ளைப் பருவத்திலிருந்தே நன்கு அறிந்தவன். இவரது அண்ணன் திருச்செல்வத்துக்கும் எனக்கும் சிறு பராயத்தில் தொடங்கிய நட்பு இன்று குடும்ப நட்பாகப் பரிணமித்துள்ளது. இக்குடும்ப நட்பே என்னை இம்மலருக்குப் பங்களிப்புச் செய்யத் தூண்டியதில் ஆச்சரியமில்லை.

கணிதம் கற்பிக்கும் திறன் இவருக்குக் கைவந்த ஒன்று. தான் சார்ந்த துறையில் தனக்கென்றே ஒரு பாணியைக் கொண்டவர் ஆகையால் இவர் மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒரு நல்லாசிரியன். இவரது திறமைக்குச் சான்று இவரினால் உருவாக்கப்பட்ட நன்மாணாக்கர்களே. இன்று இவரது மாணவர்களில் பலர் பொறியியலாளராக, வைத்தியர்களாக, விரிவுரையாளர்களாக, கணக்காளர்களாக இன்னும் பற்பல த்றைகளில் சிறந்து விளங்குகின்றனர்.

இவர் தான் கற்பிக்கும் மாணவர்களிடம் என்றும் பணத்தை எதிர்பார்ப்பவரல்லர். அறிவுப்பசி கொண்ட மாணவன் ஒருவனுக்குப் பலனை எதிர்பாராது உதவும் பண்பினைக் கொண்டவர். இதனாலன்றோ இவரது கல்வி நிறுவனம் இன்று வானளாவ உயர்ந்து இது ஒரு பாடசாலையோ என்று எண்ணும் அளவுக்கு விசாலித்து விளங்குகிறது.

இந்த உத்தமன் சகல பேறுகளும் பெற்று கும்பத்துடன் நீடூழி வாழ்ந்து ஈழநாட்டுக்குப் பணிபல புரிய எல்லாம்வல்ல பரராஜசேகரன் அருள் வேண்டி இறைஞ்சுகின்றேன்.

**இ.சச்சிதானந்தம் B.Com. (Hons)**
குடும்ப நண்பன்,
K.R.S. நிறுவனம்.

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி

பிரபல ஆசிரியரும் சமூக சேவையாளருமான இணுவையூர் திரு. இரா.அருட்செல்வம் அவர்களது 25 வருடகால ஆசிரிய சேவையினைக் கௌரவிக்குமுகமாக இன்று வெள்ளிவிழாக் கொண்டாடுவதனையிட்டுப் பெருமகிழ்வடைகிறோம்.

இருபத்தைந்து ஆண்டு காலமாக ஆசிரியர் பணியினை சிறப்புறச் செய்துவருவதென்பது பாராட்டுதற்குரிய விடயமாகும். 'எழுத்தறிவித்தவன் இறைவனாவான்' என்பர். ஆசிரியப்பணி என்பது இறைபணியாகும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்கின்ற வகையில் இறைவனிலும் முன்நிற்கும் பதவி குருவாகும்.

ஆசிரியராக மட்டுமன்றி இணுவையூர் பிரதேச வளர்ச்சியிலும் தம்மை அர்ப்பணித்து பணியாற்றுகின்ற ஒரு சமூக சேவையாளராகவும் திகழும் அருட்செல்வம் அவர்கள் போற்றப்பட வேண்டியவரே.

இவ்விழாவினை நடத்துகின்ற தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம். வெளியிடுகின்ற மலர் சிறப்புற வெளிவரவும் விழாநாயகர் திரு.இரா அருட்செல்வம் அவர்களின் பணி மேன்மேலும் தொடரவும் நடைபெறுகின்ற விழா சிறப்புற அமையவும் இறைவன் ஆசீர்வதிப்பானாக.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

## வாழ்த்துவோருக்கே பெருமை

'நல்லாரைக் காண்பதுவும் நன்றே. நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே. நல்லாரோடு இணங்கி இருப்பதும் நன்றே. நலன்மிக்க நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே' என்பர். நற்றமிழ் வல்லோர் கல்வித் துறையிலே செல்வப் புலத்திலே சமூக செயற்பாடுகளிலே நல்லவர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் சொந்த அலுவல்களுக்கு அப்பால் சென்ற மெய்வருத்தம் பாராது, கண் துஞ்சாது எவ்வெவர் தீமையும் கருதாது தன்நலமறுப்போடு பொதுப்பணியில் ஈடுபட்டு உழைக்கிறார்கள். இவர்களை வாழ்த்தி வளமூட்ட வேண்டியது சமூகத்தில் உள்ளவர்களின் பொறுப்பு என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமே இல்லை.

இவர்களை வாழ்த்துவது வாழ்த்துபவர்களுக்கே பெருமை சேர்க்கும். எல்லாமே ஒரு நல்ல மனிதரை வாழ்த்த வேண்டுமென்று கொண்ட நல்லெண்ணத்தின் வெளிப்பாடாகவே நாம் கருதுகிறோம். துன்பமும் துயரமும் நிறைந்த சூழல் என்றாலும் காலத்தினால் செய்யப்பட்டவற்றுக்குக் காலந்தவறாது வாழ்த்த வேண்டியது நமது கடமையாகும். அந்தக் கடமை உணர்விற்கே இம்மலர், இந்த விழா என்பதை அறியத்தந்து நிறைவடைகின்றோம்.

**ஞான. திருக்கேதீஸ்வரன்**
வெள்ளிவிழாச்சபை அமைப்பாளர்.

# பொதுநிகழ்வில் மாணவர் பங்கேற்பது வெகுவாகக் குறைந்து வருகின்றது

## நல்லை ஆதீன முதல்வர் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.22

பொதுநிகழ்வுகளில் பாடசாலை மாணவர் பங்குகொள்ளும் சந்தர்ப்பங்கள் வெகுவாகக் குறைந்து வருகின்றன. இந்த விவகாரத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விப்புலம்சார் அதிகாரிகள் அதிக அக்கறை காட்டவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

புண்ணிய நாச்சியம்மையாரின் குருபூசை தினத்தை முன்னிட்டு யாழ். சைவ பரிபாலனசபையினர் ஏற்பாடு செய்த நிகழ்வுகள் கடந்த வியாழனன்று நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரமத்தில் சபையின் தலைவர் சைவப்புலவர் வ.கந்தசாமி தலைமையில் நடைபெற்றன. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை நிகழ்த்தியபோதே நல்லை ஆதீன முதல்வர் இவ்வாறு தெரிவித்தார்.

சுவாமிகள் தமது ஆசியுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

பொது நிகழ்வுகளில் மாணவர்களைக் கலந்துகொள்ளச் செய்து மாணவர்களின் மனநிலையினை பக்குவப்படுத்துவதன் மூலம் சமூகத்திலும், பாடசாலைகளிலும் நற்பண்புள்ள தலைமுறையினை உருவாக்கிக் கொள்ள முடியும்.

ஆசிரியர்கள் மாணவர்களைப் பொதுநிகழ்வுகளுக்கு அழைத்துச் சென்று பங்குகொள்ள வைப்பதன் மூலம் ஒரு பண்புள்ள - ஒரு செயல் திறன்மிக்க - மாணவர்களை கல்விச் சமுதாயத்தினால் உருவாக்கிக் கொள்ள முடியும்.

இன்று ஒவ்வொரு கல்வி நிலையங்களிலும் மாணவர்கள் தவறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்றால் அதற்குக் காரணம் அவர்களுக்கு நற்பழக்கங்கள் குறித்து எடுத்துக் கூறாமையே ஆகும்.

புத்தகப்பூச்சிகளாகவே மாணவர்கள் தொடர்ந்தும் கல்வியைப் பெற்று வருகின்றனர். அந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்பதுதான் இன்றைய புண்ணிய நாச்சியம்மையார் நினைவு நாளில் நாம் எடுத்துக் கொள்ளும் சபதமாக இருக்கவேண்டும்.

இன்று எல்லோரும் பேசிக்கொள்வது நாளைய சமுதாயத்தைப் பற்றியே. நாளைய சமுதாயம் எப்படி இந்த மண்ணிலே வாழப்போகின்றது. அவர்களின் செயற்பாடு எப்படி அமையப்போகிறது? எப்படி எமது சமயத்தையும், மொழியையும் அவர்கள் கட்டிக்காக்கப் போகின்றனர் என்பதையேயாகும். இந்த நேரத்தில் நாங்கள் அவற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இதன்மூலம் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் - என்றார்.

சைவபரிபாலன சபையின் ஆயுட்கால உறுப்பினர் வி.இராமநாதன், யாழ். இந்து முன்னாள் பிரதி அதிபர் க.சிவராமலிங்கம், சைவப்புலவர் வ.கந்தசாமி ஆகியோரும் இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தினர். (எ-ரி)



கந்தர்மடம் ஆத்திசூடி வீதியிலுள்ள கலைமகள் சனசமூக நிலையத்தின் பொன்விழாவை முன்னிட்டுப் புதிதாக அமைக்கப்பட்ட நூலகத்தை யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் கணக்காளர் க.இராஜேஸ்வரன் நாடாவை வெட்டித் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)

## பரமேஸ்வரன் ஆலயத்தின் புதிய நிர்வாகிகள்

யாழ். பல்கலைக்கழக வளவில் அமைந்துள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலய புதிய நிர்வாகசபை அண்மையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

தலைவராக பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் இ.ஜெகதீசனும், இணைச் செயலாளர்களாக கலாநிதி மா.வேதநாதன், கலாநிதி என்.சண்முகலிங்கன் ஆகியோரும் பொருளாளராக பேராசிரியர் சு.பவானியும் தெரிவாகியுள்ளனர். (எ-10-85)

## கட்டுரைப் போட்டி முடிவுகள்

'யுனிசெவ்' நிறுவனத்தின் அனுசரணையுடன் வெண்புறா செயற்கை உறுப்புத் தொழில் நுட்ப நிறுவனத்தினால் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் மருதங்கேணிக் கல்விக் கோட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர்கள் வருமாறு:-

க.சுதர்சினி (உடுத்துறை ம.வி.), பி.செல்வப்பிரான்சினி (மருதங்கேணி இ.த.க.பாடசாலை), யோ.வின்சிகா (உடுத்துறை ம.வி.). (எ-10-182)

# துன்னாலையில் தனிநபர் காணிகளில் அனுமதியின்றி மணல் அகழப்படுகிறது

## தடுக்குமாறு பிரதேச செயலருக்கு மகஜர்

வடமராட்சி,பெப்.22

துன்னாலை கிழக்குப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணிகளில் இருந்து அனுமதியின்றி இரவிரவாக மணல் அகழப்படுவதைத் தடுக்குமாறு துன்னாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் கரவெட்டி பிரதேச செயலரைக் கடிதம் மூலம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக துன்னாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம் கரவெட்டி பிரதேச செயலருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இப்பகுதியில் செட்டியகாடு உட்படப் பல்வேறு இடங்களில் இருந்து தினமும் இரவு 11 மணிமுதல் அதிகாலை 4 மணிவரைக்குட்பட்ட நேரத்தில் சுமார் 10 கன்ரர் லொறிகளில் 25பேருக்கு மேற்பட்டோர் மணல் அகழ்ந்து கடத்திவருகின்றனர். இவர்களுக்கு உதவியாக இன்னொரு குழுவினர் மோட்டார் சைக்கிள்களில் செல்லிடத் தொலைபேசியையும் வைத்துக் கொண்டு பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

இதுகுறித்து அருகில் உள்ள இராணுவக் காவலரணில் புகார்செய்தபோது இதனைத் தடுக்கத் தமக்கு அதிகாரமில்லை என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்தப் பகுதியிலிருந்து தினமும் மணல் கடத்தப்படுவதால் இப்பகுதி சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதுடன் விவசாயச்செய்கைக்குரிய நிலங்களையும் இழக்கவேண்டியுள்ளது. மேட்டுநில புல்பூண்டுகளை நம்பிக் கால்நடைகளை வளர்ப்போரும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையை இழந்துவருகின்றனர்.

எனவே, இப்பகுதியிலிருந்து மணல் கடத்தப்படுவதை உடனடியாகத் தடுத்துநிறுத்துமாறு வேண்டுகிறோம் - என்று அதில் உள்ளது. (எ-173)

## இருளில் மூழ்கிய பிரதான வீதி

கரவெட்டி,பெப்.22

நெல்லியடி மத்தியமகா வித்தியாலய வீதி கடந்த பல மாதங்களாக இருளில் மூழ்கிக் காணப்படுகிறது.

அங்கு பொருத்தப்பட்டிருந்த மின்குமிழ்களில் சில பழுதடைந்தும், சில விஷமிகளால் அடித்து நொறுக்கப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன. (எ-10-70)

## விபத்தில் இருவர் படுகாயம்!

தென்மராட்சி,பெப்.22

ஓட்டோ மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த இருவர் காயமடைந்த சம்பவம் அண்மையில் மருதனார்மடம் - கோப்பாய் வீதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் தலையில் காயமடைந்த சுன்னாகத்தைச் சேர்ந்த சத்தியசீலன ஞானசீலன் (வயது 30) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-10-117)

# நற்பண்புடன் ஒழுக்க சீலர்களாக வாழ வழிகாட்டும் சாரணியம்

சாரணிய இயக்கத்தின் ஆரம்பகர்த்தர்களான பேடன் பவல் பிரபு மற்றும் அவரது துணைவியார் ஒலேவ் சோம்ஸ் ஆகியோரது பிறந்த தினமும், சாரணியத்தின் ஸ்தாபகர் தினமும் உலகெங்கும் இன்று கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

பெப்ரவரி 22 ஆம் திகதியான இன்று உலகமெங்கும் உள்ள பல்லாயிரக்கணக்கான சாரணர், சாரணியர்களுக்கு மகிழ்ச்சி நிறைந்த தினமாகும். 150 இற்கும் மேற்பட்ட நாடு




களில் பரவியுள்ள சாரண இயக்கத்தை ஸ்தாபித்த பேடன் பவல் பிரபு மற்றும் அவரது பாரியார் ஒலேவ் சோம்ஸ் ஆகியோரின் பிறந்த தினம் இன்று என்பதே மகிழ்ச்சிக்குரிய காரணமாகும். ஆண்டுகள் வேறுபட்டாலும் அவர்கள் பிறந்த மாதம் திகதி என்பவை ஒன்றாக இருந்தன. சாரணர்கள் இத்தினத்தை "ஸ்தாபகர் தினம்" என்றும், சாரணியர் நினைவு தினம் என்றும் கொண்டாடி மகிழ்கிறார்கள். இன்று பேடன் பவல் பிரபுவின் 147ஆவது பிறந்த தினமும் சீமாட்டி பேடன் பவலின் 115 ஆவது பிறந்த தினமும் ஆகும். பேடன் பவல் படைத் தளபதியாகப் பல நாடுகளில் சேவையாற்றியவர். அந்த அனுபவங்களைத் திரட்டி இளைஞர், யுவதிகள், சிறுவர், சிறுமியர் ஆகியோருக்கான பிரிவுகள் அடங்கிய சாரண இயக்கத்தை ஆரம்பித்தார். இவரது அயராத உழைப்பினாலும் அவரது துணைவியாரும், பிரபுவின் சகோதரி செல்வி அக்னஸ் ஸ்மித்தும் வழங்கிய ஒத்தாசையினாலும் சாரண இயக்கம் வளர்ந்தது. இவர்களைப் பின் தொடர்ந்து வந்த சாரணத் தலைவர்கள் மற்றும் வழிகாட்டிகளினால் இன்று பரந்து பாரிய விருட்சமாகத் திகழ்கிறது.

ஒருவர் தன்நாட்டின் சிறந்த பிரஜையாகவும் மனிதர் மீது மட்டுமல்லாது பிராணிகள் மீதும் அன்பும் பரிவும் கொண்டு எக்காலத்தும் எவர்க்கும் உதவிபுரியும் நற்பண்புகள் நிறைந்து நல்லொழுக்க சீலராக வாழச் சாரணியம் வழிகாட்டுகிறது.

எமது இளைய சமுதாயத்தார் எதிர்காலத்தில் எமது பண்பாட்டு விழுமியங்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமெனில் சாரணியம் போன்ற அமைப்புகளில் அவர்கள் தம்மை ஈடுபடுத்த வேண்டியது அவசியம். ஏனெனில், சாரணருக்கு வழங்கும் பயிற்சிகள் ஒருவரைப் பூரண மனிதராக்கும் என்பதில் ஐயமில்லை.

சர்வகலாசாலைப் பேராசிரியரும், விஞ்ஞானியும் மதகுருவுமான றொபேட் பேடன் பவல் அட்மிரல் வில்லியம் சிமித் என்பவரது மகள் கென் றீற்றா கிறேசி ஆகியோருக்கு ஆறாவது பிள்ளையாகப் பிறந்தவர் பேடன் பவல் பிரபு. அவர் தன் மூன்றாவது வயதில் தந்தையை இழந்தார். தாய்ப்பாசமும், சகோதர ஒற்றுமையும் மிளிர்ந்த குடும்பத்தில் வளர்ந்தார். படிப்பில் ஆர்வம் குறைந்தவராயிருந்தாலும் புறக்கலைகளில் வல்லவர். தனது 19ஆம் வயதில் பட்டப்படிப்பினை முடித்து இராணுவத்தில் இணைந்து இந்தியா, ஆப்கானிஸ்தான், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் பேடன் பவல் பணிபுரிந்தார்.

இராணுவச் சேவைக்கால அனுபவத்துடன் 'சாரணியத்திற்கு துணை' எனும் நூலை வெளியிட்டார். சாரண வளர்ச்சிக்கான உலகச் சுற்றுப்பயணத்தின்போதுதான் இவர் தனது துணைவியைச் சந்தித்தார். இருவரும் இணைந்து செயற்பட்டதனாலும் அவரது சகோதரியின் ஆர்வத்தினாலும்

**திருமதி ஆர்.ஜே.பி.சேவியர்**
(பயிற்றுநர், தலைவர் மற்றும் மாவட்ட உதவி ஆணையாளர்)

சாரணியம் நன்கு வளர்ந்தது. தனது வாழ்வில் தனக்கு மிகப்பிடித்தமான இடமாகிய ஆபிரிக்காவில் கென்யா மலையடிவாரத்தில் உள்ள 'நயயெரி' எனும் கிராமத்தில் தன் இறுதி வாழ்க்கையினைக் கழித்துவந்த பேடன் பவல் 1941ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி காலமானார்.

உலகை விட்டு மறைந்தாலும் புகழுடம்புடன் தொடர்ந்தும் சாரண வளர்ச்சியைப் பார்த்துக்கொண்டேயிருக்கும் பேடன் பவல் பிரபுவுக்கு நாம் என்ன கைம்மாறு செய்யலாம்?

பெற்றோரே உங்கள் அன்புச் செல்வங்களை இணையுங்கள் சாரணியத்தில்!

செல்வச் சிறார்களே! நாட்டின் வருங்காலச் சிற்பிகளே! சேருங்கள் சாரணராக.

★

# மக்கள் முகம்



துன்னாலை தெற்கைச் சேர்ந்த கனகசிங்கம் சதானந்தம் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக யாழ்.மாவட்ட நீதி மன்றத்தில் நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஓய்வுபெற்ற நீதிமன்ற வெலியாத்து உத்தியோகத்தரான இவர், துன்னாலை ஸ்ரீ பூதேஸ்வரர் சிவன்கோவில் ஆதீன தர்மகர்த்தாவுமாவார். (எ-173)



சுண்டிக்குளியைச் சேர்ந்த சுப்பிரமணியம் குணபாலசிங்கம் அகில இலங்கை சமாதான நீதிவானாக நீதிவான் திருமதி எஸ்.நந்தசேகரன் முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் சுண்டிக்குளி சாயி சமித்தியின் தொண்டரும் பஜனைப் பாடகரும் யாழ்.இந்துப்பேரவை உறுப்பினரும் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழையமாணவர் சங்க நிர்வாக உறுப்பினரும் ஆவார். (எ-30)



மேற்கத்திய சங்கீத பேச்சு நிறுவனத்தினால் நாடளாவியரீதியில் 2003 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சங்கீத, பேச்சுப் போட்டியில் சித்தியடைந்த யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ பாடசாலையின் 2 ஆம் ஆண்டு மாணவி செல்வி அஞ்சலின் அலண்டினா தேவதாஸ் நற்சான்றுப் பத்திரமும் வெற்றிக் கிண்ணமும் பெற்றுக்கொண்டார். மேற்படி பரிசளிப்பு நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 07-02-2004 இல் நடைபெற்றது.

இவர் யாழ்ப்பாணம் சுண்டிக்குழி கோவில் வீதியைச் சேர்ந்த திரு.திருமதி அ.செ.தேவதாஸ் தம்பதிகளின் ஏகபுத்திரியாவார். (எ-17)



சிவபுரம், கிராஞ்சியைச் சேர்ந்த செல்லன் சுப்பிரமணியம் அண்மையில் அப்பகுதிக்கான சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

கடந்த 09.01.2004 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதி மன்றத்தில் நீதிபதி பா.சுப்பிரமணியம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவர், சமூக சேவையாளரும் கூட. (எ-15)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட காணி ஆணையாளர் திணைக்கள முன்னாள் வெளிக்களப் போதனாசிரியரான இராமலிங்கம் கந்தையா 09.01.2004 அன்று யாழ். மேலதிக் நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நெடுந்தீவு நெழுவினி சித்திவிநாயகர் ஆலயத்தின் பரிபாலன சபைத் தலைவரான இவர், கடந்த 30 வருடங்களுக்கு மேலாக மேற்படி ஆலயத்தில் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகித்து வருவதுடன்,

நெடுந்தீவுக் கூட்டுறவுச் சபையின் செயலாளராகப் பணிபுரிந்த இவர், தமது காலத்தில் 'சமுத்திரதேவி' என்னும் படகினைக் கட்டுவித்ததுடன், அதனை நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்திருந்தார். (எ)



தும்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த இராஜரத்தினம் சிவபுண்ணியம் 23.01.2004 அன்று பருத்தித்துறை மாவட்ட நீதிவான் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் பொது எழுதுநர் சேவையில் கொழும்பு பொது வேலைத் திணைக்களத்தில் முதல் நியமனம்பெற்றுப் பின்னர் வவுனியா நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பிரதம எழுதுநராகக் கடமைபுரிந்து 1993இல் இடமாற்றலாகி வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) உதவி அரசாங்க அதிபர் பணிமனை பதவிநிலை உத்தியோகத்தராகவும் உதவி அரச அதிபராகவும் கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக அதிகாரியாகவும் உதவிப் பிரதேச செயலராகவும் கடமைபுரிந்து 31.07.2003இல் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

தும்பளை நாவலர் விளையாட்டுக்கழகத்தின் கல்விப் பிரிவின் தலைவராகச் செயற்பட்டுவரும் இவர், அப்பகுதி இளைஞர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பல சேவைகளையும் ஆற்றி வருகிறார். (எ-5)

# 28 மாதங்களில் நீங்களும் ஒரு பட்டதாரியாகுங்கள்

## இங்கிலாந்தில் ஒரு வருட தொழிற்பயிற்சி

**உங்களோடு சில நிமிடங்கள்......**

கடந்த பல வருடங்களாக கணணித்துறையில் பல்வேறு கற்கை நெறிகளை வழங்கிவந்த **BRITISH COLLEGE OF APPLIED STUDIES** தற்போது **BTEC HND** எனும் உயர் கற்கை நெறியொன்றினை வழங்கும் வல்லமை பெற்றுள்ளது.

இந்நிலையில் நீங்கள் க.பொ.த சாதாரணம் அல்லது உயர்தரம் பயின்றுவிட்டு இங்கிலாந்து,அமெரிக்கா,அவுஸ்திரேலியா,கனடா போன்ற நாடுகளில் உயர்கல்வியைத் தொடரும் எண்ணம் கொண்டிருந்தால் உங்கள் இலட்சியத்தினை இலகுவாக அடைந்து கொள்ள **BTEC HND** மூலம் **BRITISH COLLEGE** வழிகாட்டுகின்றது.

வெளிநாடுகளில் உங்கள் உயர்கல்வியைத் தொடர்வதில் சில சிக்கல்களை நீங்கள் எதிர் நோக்கியிருக்கலாம்.
VISA பெறுவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் என்பனவே உங்களது வெளிநாட்டு உயர்கல்விக்கு தடைகளாக அமைகின்ற பிரதான காரணிகளாகும்.

இவற்றை நிவர்த்தி செய்ய நாம் சில வழிமுறைகளை வகுத்துள்ளோம்.

இந்த வழிமுறைகள் உங்களை வெற்றிப்பாதையினை நோக்கி கொண்டு செல்லும் என்பதில் எங்களுக்கு திடமான நம்பிக்கை உண்டு.

**British College of Applied Studies**
32 Dharmarama Road, Colombo 06

## BTEC HND
### உங்கள் உயர்கல்விக்கான தடைகளை எவ்வாறு தகர்க்கின்றது?

தற்போது உயர்கல்விக்காக UK செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை மிக துரிதமாக அதிகரித்து வருவதனால் பிரித்தானிய உயர்ஸ்தாநிகராலயம் இதனைக் கட்டுப்படுத்தும் முகமாகவும், பொருத்தமான மாணவர்களுக்கு மாத்திரமே VISA வழங்குவதற்காகவும் நாளுக்கு நாள் புதிய நடைமுறைகளை அறிமுகப்படுத்திவருகின்றது.

இந்நிலையில் A/L தராதரத்துடன் மாத்திரம் UK இல் பட்டப்படிப்பிற்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் VISA பெறுவதற்கான உத்தரவாதம் குறைந்து வருகின்றது.

ஆனால் BTEC HND தராதரத்தோடு தனது இறுதியாண்டு பட்டப்படிப்பிற்காக STUDENT VISA விற்கு விண்ணப்பிக்கின்ற மாணவர் VISA வினைப்பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் பின்வரும் காரணங்களால் ஏறத்தாள 100% உறுதிப்படுத்தப்படுகின்றது.

1.குறித்த மாணவன் BTEC HND யை பூர்த்தி செய்வதன் ஊடாக 2/3 பங்கு பட்டப்படிப்பினை இலங்கையிலேயே நிறைவுசெய்கின்றார். எனவே அவர் தனது பட்டப்படிப்பின் இறுதியாண்டினை UK இல் தொடர VISA பெறுவதில் எந்தத்தடையும் இருக்கப்போவதில்லை. இந்த மாணவருக்கு VISA வழங்குவது பிரித்தானிய உயர்ஸ்தாநிகராலயத்தின் கடமையாகவும் மாறுகின்றது.

2.VISA பெறுவதற்கு தேவையான நிதி அனுசரணையில் (***Sponsorship***), இம்மாணவருக்கு 10 மாத காலத்திற்கான நிதி அனுசரனை (***Sponsorship***), மாத்திரமே தேவைப்படுவதால் தனது இறுதியாண்டு கற்கைநெறியினை UK இல் தொடர்வதில் எந்தப்பிரச்சினையினையும் இவர் எதிர்நோக்கப்போவதில்லை.

GCE O/L தாராதரம் கொண்ட மாணவர்களும் HND FOUNDATION எனும் கற்கை நெறி மூலம் பட்டப்படிப்பினைத் தொடர முடியும். இதற்கான ஏற்பாடுகளை BRITISH COLLEGE மாத்திரமே வழங்குவது குறிப்பிடத்தக்கது.

**இப்போது இலங்கையில்**
**18 மாதங்களில்**
**BTEC HND,**
**அடுத்து இங்கிலாந்தில்**
**10 மாதங்களில்**
**B Sc (Hons)**
**Degree**

யாழ்ப்பாணத்தில் விபரங்களைப் பெற்றுக் கொள்ள தொடர்புகளுக்கு.....

**C. Sooriyamoorthy**
**(Marketing Officer,BCAS)**
**"Theiva vasa"**
**Karanavai, Karaveddy.**

விபரங்களுக்கு: **011 2501145, 011 2559255, 0777 715 788**



இறையாசி பெற ஓர் அரிய வாய்ப்பு!

இயேசு அழைக்கிறார்

# யாழ்ப்பாணம் பிரார்த்தனைத் திருவிழா

**பெப்ரவரி 2004**
**25** முதல் **29** வரை
புதன் முதல் ஞாயிறு வரை

தினமும் மாலை 4.30 மணிக்கு
இடம் :
செல்லமுத்து மைதானம்,
**மானிப்பாய்**

அருளுரை, பிரார்த்தனை வழங்குபவர்கள்
**Dr. டி.ஜி.எஸ். தினகரன்**
**Dr. பால் தினகரன்**
**Dr. ஸ்டெல்லா தினகரன்**
**சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன்**

அனுமதி இலவசம்!



**பயிற்சி கூட்டங்கள்**
(ஆழமான ஆவிக்குரிய ஜீவியம் ஜீவிக்க)
**பெப்ரவரி 26 முதல் 28 வரை**
காலை 8.30 மணிக்கு
இடம்: **வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை**
(மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபம், மானிப்புாய்)

இறைபக்தியில், நம்பிக்கையில்,
ஆன்மீக வாழ்வில் எழுச்சிப் பெற,
அன்றாட வாழ்வில் பிரச்சினைகள், துக்கங்கள்,
சரீர நோய்கள் இவற்றிலிருந்து
இறையருளால் விடுதலை பெற
சிறப்புப் பிரார்த்தனைகள்
ஏறெடுக்கப்படும்.



தலைமை ஒருங்கிணைப்பாளர் : பாஸ்டர் சாம் ராஜசூரியர்
மேலும் விவரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
யாழ்ப்பாணம் பிரார்த்தனை திருவிழா அலுவலகம்,
சங்கரபிள்ளை ரோடு, மானிப்பாய், யாழ்ப்பாணம்.
☎ : 021-222-3204, 021-222-2659 மொபைல் : 0777174500

மும்பை (இந்தியா) நகரில் பிரார்த்தனை விழாவில் திரண்டிருந்த மக்கள் திரளின் ஒரு பகுதி!



யாழ்ப்பாணம்

# இந்த வார இராசி பலன்

| | | | |
|---|---|---|---|
| வெ. | செவ். ராகு | | சனி. |
| சூ. ▲ புதன். சந். | இராசிச் | சக்கரம் | |
| | | | வியா. |
| | | கேது | |

## 22.02.2004 - 28.02.2004

### மாற்றம்

22.02.2004 இல் நட்சத்திரம் புரட்டாதி, கும்பம் ராசியில் சந்திரன் நிற்கும்.

இரகசியப் பேச்சுக்கள் நடக்கும். அரசியல், தேர்தல் சூடு, வன்முறைகள் அதிகரித்தல், பொய்வாக் குறுதிகளை அரசியல்வாதிகள் விதைப்பார்கள். தெற்கே கட்சிமாறும் செயற்பாடுகள் அதிகரிக்கும். இந்தியாவில் தேர்தல் ஆயத்தம், அரசுப்பிரசாரம் மக்களை திசை திருப்பும். செல்வாக்கு அரசுக்கு அதிகரிக்கும். மத்திய கிழக்கில் வன்முறைகள் அதிகரிக்கும். இந்து சமுத்திரத்தில் வெப்பநிலை அதிகரிக்கும். வடக்கே பனி வீழ்ச்சி அதிகரிக்கும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

சொத்துச் சுகத்தில் போராட்டம், பணம் பற்றிச் சிந்தனை, வாக்குக்கலகம், காணிபூமியில் மாற்றநிலை, செலவுகள் அதிகம். அடிக்கடி அலைச்சல் ஏற்படும். காயங்கள் ஏற்படலாம். களைப்பு ஏற்படும். உஷ்ண பீடைகள், காய்ச்சல் வர இடமுண்டு. இடைக்கிடை குடும்பத்தில் பதற்ற நிலை ஏற்பட இடம் உண்டு. பொருள் வரவுப் பேச்சு இடம்பெறும். பாதுகாப்புத் துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்*

### இடபம்

உண்மைகள் வெளிவருவது, காலதாமதத்திற்குப் பின்புதான். அதனால் நீங்கள் மனம் சோர்ந்து விடமாட்டீர்கள். முன்னெடுக்கும் உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். இடமாற்றங்கள் வரும். பணவரவு ஏற்படும். வயிற்றில் நோ, குளிர், உஷ்ண உபாதைகள் ஏற்பட இடம் உண்டு. தூரதேசச் செய்திகள் வரும். புதிய ஆடை, ஆபரணங்கள் சிலருக்குக் கிடைக்க வாய்ப்புக்கள் ஏற்படும். சந்தைத்துறை, வியாபாரத்துறை தொடர்பானவர்களுக்கு நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்*

### மிதுனம்

சரித்திர முடிவுகள் பின் தொடர்வதில்லை என எதிர்பார்க்காதீர்கள். பணவரவு கொடுக்கும். தந்தைவழிப் புத்திரர்கள் உதவி தருவார்கள். பொருளொன்று இடம்மாறித்தவற இடம் உண்டு. இனஜனங்களால் மனக்கவலை வரும். நண்பர்கள் உதவி செய்வர். நெருப்பாலோ ஆயுதத்தாலோ கஷ்டங்கள் வரலாம். சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்யவும். கணனித்துறை, சங்கீதத்துறை, குருத்துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்*

### கடகம்

நல்லவர்களுக்குச் சோதனை அதிகமாகும். தண்டனைகள், ஆலோசனைகள் சில மனிதர்களை திருத்துகின்றதா என அறிகின்றீர்களா? உங்களின் ஆலோசனைகளை சிலர் அலட்சியம் செய்வதனைப் பார்த்து வேதனைப்படுவீர்கள். எதிர்ப்பாலார்கள் எதிர்ப்பார்கள். வயிற்றில் வருத்தம், இடது பக்க கால்விறைப்பு வரும். தூரதேசம்போய்வர யோசனை உண்டு. நிதானமாக திட்டம் இடுங்கள். அரசியல்துறை, கட்டடப பொருள்கள் விற்பனை என்பன தொடர்பானவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்*

### சிங்கம்

மனித வாழ்வு நம்பிக்கையின ஓட்டத்தைப் பொறுத்தது. தொழில்ஸ்தானத்தில் உங்களை நம்பிப்பல பொறுப்புக்களைத் தருவார்கள். நீங்களும் வேகமான செயற்பாட்டுடன் இருப்பீர்கள். பொருள்வரவு, வீடு வாகனச் சிறப்புக் கொடுக்கும். தந்தைவழியினருடன் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். பொருள்கள் தவறலாம். கவனமாக இருக்கவும். வயிற்று உபாதை, கால் உளைவு, சளித் தன்மை என்பன இருக்கும். குருத்துறை, மருந்துத்துறை, வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன், வெள்ளி (மத்தியானம்)*

### கன்னி

உண்மைகளை அறிவதற்கு பலத்த போராட்டம் நடத்த வேண்டியுள்ளது. சில மறைக்கப்பட்ட விஷயங்களைக் கண்டறிய முயற்சிப்பீர்கள். சிலருக்கு இடமாற்றங்கள் வரும். அவசத்தில் குடும்பத்தினருடன் வாக்குக் கலகம் ஏற்படும். வருமானம் அதிகரிக்கும். இடமாற்றங்கள் நன்மை தரும். தூரத்திலிருந்து நற்செய்திகள் வரும். சளித் தொல்லை, வாய்வுத் தொல்லை, கால் உளைவு என்பன கொடுக்கும். சங்கீதத்துறை, அச்சு, பேப்பர்துறையினர்கள் நன்மை அடைவார்கள். தட்சணாமூர்த்திக்கு அர்ச்சனை செய்யவும்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், வெள்ளி (மத்தியானம்)*

### துலாம்

சிலபிரச்சினைகளை பேசித் தீர்ப்பதனால் அநாவசியமான விரயங்களைத் தடுப்பீர்கள். எதிர்ப்பாலாருடன் கருத்து வேற்றுமைகள் கொடுக்கும். வருத்தத்தால் செலவுகள் அதிகரிக்கும். அடிக்கடிகோபம், எதிர்ப்புக்களை தேடிக் கொள்வீர்கள். பொருள்கள் தவற இடம்உண்டு. நாரிநோ, சலவருத்தம், நெஞ்சுச்சளித் தொல்லை என்பன கொடுக்கும். குருத்துறை, சட்டத்துறை, சந்தைவியாபாரம், தரகுத் தொழில் உள்ளவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும். பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும்

*அதிர்ஷ்டநாள்: ஞாயிறு*

### விருச்சிகம்

வீட்டில் கலகலப்பு. பணவரவு வரும். நிரந்தரமற்ற நிலைவரும். களவுகள் போகலாம். எதை எடுத்தாலும் நிறைவேறாத தன்மை. அயலவர்கள் தொல்லைதர இடம்உண்டு. புதிய திட்டங்களால் நன்மைகள் கிடைக்கும். தொழில்ஸ்தானத்தில் பெரியவர்கள் ஆதரவாக இருப்பார்கள். மறைமுக எதிரிகள் விலகிப்போவார்கள். காதடைப்பு, சளி, சலத்தொல்லை என்பனவரும். புதிய நண்பர்கள் உதவுவார்கள் காலில் காயம் வரலாம். இரும்புக்கடை, சந்தை வியாபாரம், ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரிகள் நன்மை பெறுவர்.

*அதிர்ஷ்டநாள்: ஞாயிறு*

### தனுசு

வீட்டிற்கு இனஜனவருகை, பணவரவு, பெரியவர்களின் உதவிகள் என்பன கிடைக்கும். நண்பர்கள் நன்மைகள் செய்வார்கள் அயலவர்கள் பகைப்பர். சங்கீத கலகலப்பு இருக்கும். பொருள் வரவு ஒன்று கிடைக்கும். தூரத்துச் செய்தி வேதனைதரும். தொழில்ஸ்தானத்தில் புதிய நடைமுறைகளுக்கு வழிபிறக்கும். கால்நோ, வாய்வுத் தொல்லை, சளித தன்மை வரும். வைத்தியம் செய்வீர்கள். குருத்துறை, சட்டத் துறை, மருந்துத்துறை, பணம் அல்லது வங்கித்துறையினர்கள் நன்மை அடைவார்கள்

*அதிர்ஷ்டநாள்: ஞாயிறு, திங்கள்.*

### மகரம்

தொழில் ஸ்தானத்தில் புதிய பொறுப்புக்கள் வரும். வீடு, மனையில் செலவுகள் அதிகரிக்கும் சகோதரர்களுக்கு இடம் மாற்றம வர இடமுண்டு. குடும்பத்தில் வைத்திய செலவுகள் அதிகரிக்கும். வாக்குக் கலகம் ஒன்றால் வேதனைப்படுவீர்கள். காயங்கள், வயிற்று வலி, கால் நோ வரும். வைத்தியம் செய்வீர்கள். இடமாற்றங்களை அவதானமாக செய்யுங்கள் அல்லது பண இழப்பு, பொருள் இழப்பு வரலாம். கடல தொழில், இரும்புத் தொழில் விளைவுப் பொருள் வியாபாரம் செயபவர்களுக்கு இலாபங்கள் அதிகரிக்கும்

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### கும்பம்

உண்மையானவர்கள் அடிக கடி விலகி நடப்பார்கள் அடிக்கடி அலைச்சல் உண்டு. உதவிகள் கிடைக்கும். வீட்டிலும் தொழில் ஸ்தானத்திலும் மாற்றங்களைச் செய்வீர்கள் தூர தேசத்தில் இருந்து புதிய செய்திகள் வரும். புதிய பொறுப்பு வரும். புதிய நண்பர்கள் வருவார்கள். வீடு பற்றிய புதிய திட்டமொன்று கால தாமதமாகும் கால்வருத்தம், வாய்வுத் தொல்லை, நெஞ்சுப் படபடப்பு என்பன ஏற்படும். சட்டவாதிகள குருத தொழில் செய்பவர்கள் நன்மைகள் அடைவார்கன்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்*

### மீனம்

திட்டமிட்டது மெல்ல மெல்ல தேடிவந்து நிறைவேற வாய்ப்பு உண்டு. அவசரத்தில் எதையும் கொட்டிக் காரியத்தை குழப்பி விடா தீர்கள். வீடு, வாகன யோகம் கொடுக்கும். வாய்வு, சளித் தொல்லைகள் இருக்கும். போக்கு வரத்துத் துறை, கடல் தொழில், செய்தி, சங்கீதத் துறையைச் சேர்ந்தவாகள் நன்மை அடைவார்கள். தூரத்துப் பிரயாணங்களை தவிர்க்கவம். பொருள் வரவு திடீரென நடக்கும், சனீஸ்வரனுக்கு அர்ச்சனை செய்யவும்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

**மகாதேவா ஜோதிடம்**

---

# இறையன்பு, நம்பிக்கை உருவானால் வாழ்வில் தென்றல் வீசுவது உறுதி

**ஞாயிறு நற்பிரசாதம்**



"மனிதன் மனிதனை விழுங்க விரும்புவது ஏன்?

"நாட்டை நாடு பிடிக்க நினைப்பது ஏன்?

"கணவன் மனைவியையும் மனைவி கணவனையும் பகைப்பது ஏன்?

"மாமியார் மருமகளையும், மருமகள் மாமியாரையும் துன்புறுத்துவது ஏன்?"

மனித வாழ்க்கை வட்டத்தில் உருவாகும் சில புயல்கள் இவை. மனிதன் இந்த உலகிலேயே பிறந்தது தொட்டு பல இலட்சியங்களோடு நடைபோடுகின்றான். இந்தப் பயணத்தில் நடை பயிலுகின்றபோது இலக்கை அடைவதற்கு முன் பல கோணங்களிலிருந்து பல புயல்கள் அவனை மோதுகின்றன. இவற்றால், அலைக்கழிக்கபபடுகின்ற மனிதன் தத்தளிக்கும் படகாக, கரைகாணாது உலகக் கடலிலே வேதனையுறுகிறான். இந்தப் புயல் ஓயாத மனத்திற்கு நிம்மதி வராதா? என்று துடியாய் துடிக்கின்றான் அமைதி தேடி அலைகின்றான். ஆனால், பல வேளைகளில் இறைவன் அன்பில் தான் அந்தப் புயல்கள் ஓயுமென மறந்துவிட்டு, மனித பலத்திலும், மனித திறமைகளுக்குள்ளும் தன்னை புதைத்துக்கொள்வதும் கண்கூடு.

இன்று மனித சத்தியால் குன்றுகள் பெயர்க்கப்படுகின்றன. கற்பாறைகள் பிளக்கப்படுகின்றன. நில நடுக்கம் ஏற்படுத்தப்படுகின்றது. தீ கிளப்பப்படுகிறது. இவற்றின் நடுவே இறைவன் இல்லை. மாறாக இறைவன் எங்கேயிருந்தார்? அவர் அன்புத் தென்றலில் இருந்தார். இதிலிருந்து நாம் அறிவது நம இறைவன் அன்பின் இறைவன்; அமைதியின் இறைவன்; தம் மீது அன்பு கொண்டு, அந்த அன்பில் வாழ்பவரின் வாழ்வில் வரும் புயல்களையெல்லாம நொடிப்பொழுதில் அழித்துவிடக் கூடிய வல்லவர். அதனால்தான், உரோ 9:35 'கிறிஸ்துவின அன்பிலிருந்து நம்மை பிரிக்கக்கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா, பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எதுதான நம்மைப் பிரிக்கமுடியும்... என்று வாசிகின்றோம். இவற்றின்மூலம் இறைவன ஆக்கும் சக்திகளோடு உள்ளார் என்பது துல்லியமாகின்றது.

ஆனால், இன்று நம் நடுவே காண்பது என்ன?... அழிவுகளும், அக்கிரமங்களும் ஆக்கிரமிப்புக்களும் அதிகரிக்கின்றன. லஞ்சமும் வஞ்சகமும் தலை தூக்குகின்றன. பணத்திற்கு பல உயிர்கள் பறிபோகின்றன. ஒழுக்கக்கேடுகள் தெருவோரங்களுக்கு வந்துவிட்டன. எம் சமூகத்தில வீசும் புயல் ஓயுமா?..... ஓய வேண்டுமென்றால் என்றுமோ ஆமோஸ் இறைவாக்கினர் உதிக்க வேண்டும். அவரும் இவ்வாறே கூறுவார். சிலவேளை இதிலும் பலமான வார்த்தைகளைக் கூறுவார்.

'வறியோரை நசுக்கி, நாட்டில் உள்ள ஒடுக்கப்பட்டோரை அழிக்கின்றவர்களே.... மரக்காலைச் சிறிய தாக்கி, எடைக்கல்லைக் கனமாக்கி, கள்ளத்தராசினால் மோசடி செய்யலாம்; வெள்ளிக் காசுக்கு ஏழைகளையும் இரு காலணிக்கு வறியோரையும வாங்கலாம். கோதுமை பதர்களையும் விற்கலாம்'.... எனத் திட்டம் தீட்டுபவர்களே உங்கள் திருவிழாக்களை அழுகையாகவும், பாடல்களை எல்லாம் புலம்பலாகவும் மாற்றுவேன்; எல்லாரும் இடுப்பில் சாக்கு உடை உடுத்தவும், அனைவரின் தலையும் மழிக்கப்படவும் செய்வேன். ஒரே பிள்ளையை பறிகொடுத்தவர் புலம்புவது போல நீங்களும் புலம்புமாறு செய்வேன். அதன் முடிவு கசப்புமிக்க நாளாய் இருக்கும்' (ஆமோஸ் 8:4-6,10) அப்படியானால் புயலுக்கு முடிவில்லையா! மனிதத்துக்கு அமைதியில்லையா!!

மலர் மணத்தை சந்திப்பதில் அமைதி காண்கிறது,வானம் நிலவைச் சந்திபபதில் அமைதி காண்கிறது, நிலம் நீரைச் சந்திப்பதில் அமைதி காண்கின்றது, கடல் கரையைச் சந்திப்பதில அமைதி காண்கிறது, மயில் மேகத்தை சந்திப்பதில அமைதிகாண்கிறது, குயில சோலையை சந்திப்பதில் அமைதி காண்கிறது.

ஆனால், மனிதம் அமைதி காண்பது எங்கே? அதுதான் முழு இறையுறவில்.

எனவே, நமக்குள் இறையன்பும், நம்பிக்கையும், ஊற்றெடுத்தால் நம் வாழ்வில் தென்றல் வீசுவது உறுதி! வீசும் புயல் ஓயும் என்பது நிச்சயம்.

**ச. சத்தியராசா**

---

## அதாவுல்லாவின் கட்சித் தலைவர் கவலை

முன்னாள் அமைச்சரும் அஷ்ரப் காங்கிரஸின் தவிசாளருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா அம்பாறை மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்சியின் தலைவருக்கோ அன்றி செயலாளர் நாயகத்துக்கோ தெரிவிக்காமல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் சென்றிருப்பது குறித்து அஷ்ரப் காங்கிரஸ் தலைவர் சுபைதீன் ஹாஜியார் கவலை தெரிவித்துள்ளார்.

கட்சியின் உயர்பீடத்துக்குக் கூடத் தெரியாமல் அதன் முக்கிய உறுப்பினர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிடம் சென்றது பற்றிச் செய்தியை ஊடகங்கள் வாயிலாகவே தாம் அறிந்துகொள்ள முடிந்தது என்று கட்சியின உயர்பீட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் மற்றும் முஸ்லிம் அமைப்புக்களையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கைகளில் அஷ்ரப் காங்கிரஸ் தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயத்தில் ஏ.எல்.எம்.அதாவுல்லா எடுத்த முடிவு ஆச்சரியத்தையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது என அக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் தெரிவித்தனர்.

## நெருப்புக் காய்ச்சல் தொற்று பரிசோதனையில் கண்டுபிடிப்பு

வலி.தெற்மேற்கு,பெப்.22

பண்டத்தரிப்பு சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் அண்மையில் ஏழு பேருக்கு நெருப்புக் காய்ச்சல் நோய் தொற்றியிருப்பது பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை பெறுவதற்கு வைத்தியசாலைகளுக்கு சென்ற மேற்படி ஏழுபேருக்கும் இந்நோய் ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டதை அடுத்து பொதுச் சுகாதாரப் பரிசோதகர் இவர்களுடைய வீடுகளுக்குச் சென்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

உணவு வகைகளை ஈக்கள் மெய்ககாது மூடி வைக்கவேண்டும், மலசலகூடங்களை சரிவரப் பயன்படுத்தவேண்டும் சுத்தமான குடி தண்ணீரைப் பருக வேண்டும் என்று இந்த நோயாளர்களின் குடும்பத்தினருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. (எ-135)

## தென்மராட்சியில் தொழிற்பயிற்சிகள்.

தென்மராட்சி,பெப்.22

புனர்வாழ்வு, புனரமைப்பு மீள் குடியமர்வு அகதிகள் அமைச்சின் மனித வள அபிவிருத்திப் பிரிவின் அனுசரணையுடன் தென்மராட்சி பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான தொழிற் பயிற்சி வகுப்புகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கணனி, வீட்டு மின்னிணைப்பு, குழாய் பொருத்துதல் ஆகிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் தலா 20 பயிலுநர்கள் பயிற்சி பெற்று வருவதாக பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (எ-117)

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு!

வலி.தென்மேற்கு,பெப்.22

பண்டத்தரிப்பு நகர்ப்பகுதியிலும் சாந்தைக் கிராமத்திலும் கட்டாக்காலி நாய்களை அழிக்கும்பணி நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்புப் பட்டின உப அலுவலகத்தின் அனுசரணையுடன் பண்டத்தரிப்பு பொது சுகாதாரப் பரிசோதகரினால் இந்தப் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. (ஏ-135)

நீங்கள்,
நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா? இதோ உடன் நிவாரணி

"மதுமேகரணி"

"MADHUMEAHAHARANEE"

இந்த மருந்தின் பலாபலனை குறுகிய காலத்தில்அறிந்துகொள்ளலாம்.
உங்கள் அண்மையில் உள்ள சித்தஆயுர்வேத டாக்டரிடம் ஆலோசித்துப் பாவிக்கவும்.
இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பு
யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும். பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள
சிவா நறுமணப்பூங்கா
288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம.

SRI LANKA AYURVEDIC-CORPORATION
PO BOX 20 NAWINNA
MAHARAGAMA.

குறிப்பு: சத்திரச்சந்திக்கு அருகில்



## இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-33076)



சட்டநாதர் வீதி, நல்லூர்

## இளங்கலைஞர் மன்ற இசைவிழா

இன்றைய நிகழ்ச்சிகள்

மாலை 4.30 மணிமுதல் இரவு 9.30 மணிவரை.

| | |
|---|---|
| மங்கள இசை | - N.R.கோவிந்தசாமி புதல்வர்கள் |
| குழுப்பாடல் | - சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவிகள் |
| பாட்டு | - சிவசக்தி அருணகிரிநாதன் |
| குழுப்பாடல் | - இளங்கலைஞர் மன்ற மாணவர்கள் |
| புல்லாங்குழல் | - J.புவனேந்திரராஜா |
| பாட்டு | - துகாரதி கனகேஸ்வரன் |
| வீணை | - கல்பனா சர்வேஸ்வர சர்மா |
| பாட்டு | - சிவாஜினி பத்மராஜா |
| இசைக்கச்சேரி | - பரமேஸ்வரி கணேசன் |

இசை ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சட்டநாதர் வீதி, நல்லூர். - இளங்கலைஞர் மன்றத்தினர்.

(28726) (24-21-16)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 03 - 05 - 1944



இறைவன் அடியில் 25 - 01 - 2004

### திருமதி கணேசராசா இந்திராணி

திதி: பூர்வபக்கச் சதுர்த்தி

"திங்கள் ஒன்று சென்றாலும் தீராது எங்கள் துயரம்
மங்காத குலவிளக்கே எங்கள் ஆருயிர்த் தாயே
காலமெல்லாம் கடமைசெய்து காத்து வந்தீர் எம்மை – ஓலமிட
வைத்துவிட்டுச் சடுதியாக எங்கு ஓடி மறைந்தீர்?
ஞாலமிதில் அம்மா, அம்மம்மா, மாமி, ராணி என்றழைக்க
எமக்கினி யாருமிலரே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்"

அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு 24.02.2004 செவ்வாய்க் கிழமை மு.ப. 10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு நண்பகல மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முளாய், சுழிபுரம்.
(28647) (34-16-21)

அன்புக் கணவர், மக்கள், மருமக்கள், பேர்த்திமார்.

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் எழுதுநராகக் கடமையாற்றும்

திரு.தவச்செல்வம் முகுந்தன்

அவர்களது அன்புத் தாயார்

### அமரர் தவச்செல்வம் இராஜேஸ்வரி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்,
தீவக வலயக் கல்வி அலுவலகம்
.வேலணை.

(28737) (21-16)

## பஸ்ஸில் இருந்து தவறி வீழ்ந்தவர் படுகாயம்

தென்மராட்சி,பெப்.22

பஸ் புறப்பட்ட வேளையில் ஏற முயன்ற வயோதிபர் தவறி வீழ்ந்ததில் சில்லுக்குள் கால் அகப்பட்டு காயமடைந்த சம்பவம் அண்மையில பளையில் இடம்பெற்றது.

(முகமாலையைச் சேர்ந்த பாவிறு யோசப் (வயது 79) என்பவரே கால் முறிந்த நிலையில் பளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

(எ-10-117)

## ஒரே நாளில் ஐவரை விசர்நாய் கடித்தது

கொடிகாமம்,பாலாவி தெற்கில் ஒரே நாளில் விசர்நாயினால் கடியுண்ட ஐவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதே இடத்தைச் சேர்ந்த கந்தசாமி கௌசிகா (வயது 14), தங்கராசா சரஸ்வதி (வயது 42), தங்கராசா சுகந்தினி (வயது 20), சுதாகரன் சுதர்சினி (வயது 23),சிவராசா வசந்தி (வயது 33) ஆகியோரே விசர்நாயினால் கடியுண்டவர்களாவர். (எ-10-117)

## வேலணையில் கணனிப் பயிற்சி

வேலணை பிரதேச செயலர் பிரிவில் மனிதவள, கல்வி அபிவிருத்திப் பிரிவினால் இலவச கணனிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சியில் அப்பிரதேச இளைஞர், யுவதிகள் இணைந்து கற்று வருகின்றனர். (எ-10-ரி)

## ஞானச்சுடர் வெளியீட்டு விழா

வடமராட்சி,பெப்.22

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான 'ஞானச்சுடர்' ஆத்மீக சஞ்சிகையின் மாசி மாத இதழ் வெளியீட்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறும்.

இச்சஞ்சிகையின் வெளியீட்டுரையை ஆசிரியர் துரை கணேசமூர்த்தியும், மதிப்புரையை வயாவிளான் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் செ.பரமேஸ்வரனும் நிகழ்த்துவர். (எ-173)


## தேவை

பிரபல கலர் லாப் ஒன்றிற்கு
ஆள் தேவை

கணக்காளர் 45 வயதுக்குட்பட்ட ஆண், காசாளர் 20 வயதிற்கு மேல் பெண், அலுவலக உதவியாளர் ஆண், உட்புற, வெளிப்புற படப்பிடிப்பாளர் ஆண். தகைமை G.C.E. A/L. விண்ணப்ப திகதி 05.03.2004இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

(சி-33374) C/o உதயன். (21)



க.பொ.த.உயர்தரத்தின் பின்னர்
உங்கள் எதிர்காலத்தைத்
திட்டமிடுங்கள்

**Brindavan College**

Formerly
**National First Grade College**

இந்தியாவின் பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது.

1. 41 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் சேர்ந்து ஸ்ரீ லங்காவைச் சேர்ந்த 300 மாணவர்கள் கற்கை நெறிகளை மேற்கொண்டுள்ளனர்.
2. கடந்த 10 ஆண்டுகள் காலத்தில் இக் கல்லூரியில் கற்கைநெறிகளை மேற்கொண்ட ஸ்ரீலங்காவைச் சேர்ந்த 250 மாணவர்கள் பெங்களூர் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றுள்ளனர்.
3. 2004 பெப்ரவரி 29ஆம் திகதிக்கு முன்னா பதிவுகளை மேற்கொள்வோர் பதிவுக் கட்டண விதிவிலக்குடன் புலமைப்பரிசில், கட்டணச் சலுகை, தவணைக் கட்டணச் சலுகை ஆகியவற்றுக்கு உரித்துடையவராவர்.
4. 2004 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

மேலதிக விவரங்களுக்கு:
இணையத்தளம்
www.nfg college.Com.
மின்னஞ்சல்:
nfgc@bgl.vsnl.net.in

கம்பெனி செக்ரற்றேரியல் சர்விசஸ்
பிறைவேட் லிமிட்டெட்
Company Secretarial Services
Private Ltd
286, C - 1/1, ஸ்ரான்லி திலகரத்ன
மாவத்தை, நுகேகொட
தொலைபேசி - 011 - 2854438

(சி-33343) (21-14)



## சிறிமாதவன்

தற்காலிக இடம்மாற்றம்

T.V.டெக், வீடியோ, ஓடியோ கசெட், கசெட் றேடியோ, சங்கீத ஓகன்கள், சகலவித கைக்கடிகாரங்கள், சுவர் மணிக்கூடுகள், பிலிம்றோல் மற்றும் அன்பளிப்புப் பொருள்கள் பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்:

இதுவரை நாளும் இல.97 கஸ்தூரியார் வீதியில் இயங்கிய
சிறீ மாதவன் திங்கள் முதலாக
ஜ"ம்மா பள்ளிலேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம
என்ற விலாசத்தில் இயங்கிவருகிறது என்பதை
அன்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

சிறிமாதவன்

ஜ"ம்மா பள்ளிலேன்,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
☎ ௦௨௧ ௨௨௨ ௬௩௬௫.

(சி:33339)(32-12-39-21)


## நெஞ்சை விட்டகலாத
## ஓராண்டு நினைவலைகள்



### அமரர் கந்தசாமி மோகனதாஸ் (கட்டி)

மலர்வு 25.01.1955

உதிர்வு 05.03.2003

திதி:- 22.02.2004

கணவனாய் வாழ்வு தந்து
தந்தையாய் உயர்வுதந்து
எம்மை அன்பால் அரவணைத்த
அன்புத் தெய்வமே!
தாளாத வேதனையில் தவிக்கவிட்டு போனீரகளேயப்பா!
பாசமான நினைவலைகளுடன்
பரிதவித்து நிற்கின்றோம்
சொல்ல வார்த்தை இன்றி
சோர்ந்து போய் நிற்கின்றோம்ஐ
ஓராண்டு கடந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சை விட்டு அகலவே அகலாது!

தலங்காவல் பிள்ளையார் கோவிலடி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்

(28709)(35)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 15 - 03 - 1925



மறைவு 24 - 01 - 2004

அமரர்

### சரவணமுத்து பொன்னம்பலம்

நாளை (23.02.2004) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்தில் பங்கேற்று ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், மதிய போசனநிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அச்செழு, நீர்வேலி.
(28681) (34-21-16)

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# திடீர்ப் பொதுத் தேர்தலால் கிடைக்கப்போவது என்ன?



**தீடீர்ப் பொதுத்தேர்தலால் நாட்டுக்கு என்ன நடக்கும் என்பதை ஆராய்கிறார் கொழும்பு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அரசியல் விரிவுரையாளர் தயான் ஜயதிலகா. இக்கட்டுரை 17.02.2004ஆம் திகதிக்கு முன்னர் எழுதப்பட்டது. அவரது கருதத்துக்களை அப்படியே இங்கு தமிழில் தருகின்றோம். 'லங்காதீப' நாளிதழில் இது வெளியாகியிருந்தது.**

நாடாளுமன்றம் எடுத்த எடுப்பில் கலைக்கப்பட்ட சம்பவமானது அரசமைப்பால் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு உட்பட்டதாயினும் அதை நேர்மையான செயல் எனக்கூறமுடியாது. ஆளும் கட்சி, அரசமைப்புக்கு 19ஆவது திருத்தம் கொண்டுவரவிருந்தது. அந்தத் திருத்தத்தில் ஜனாதிபதிக்கு மக்கள் வழங்கிய ஆணைக்குச் சவால் விடுத்து மக்கள் ஆணையை மீறும் விதத்தில் விடயங்கள் அடங்கியிருந்தன. அந்தநேரத்தில் அந்த அரசமைப்புத் திருத்தம் குறித்து நானும் எதிர்ப்பினைத் தெரிவித்திருந்தேன் அதேபோலவே, 2001ஆம் ஆண்டில் ஐ.தே.முன்னணக்கு மக்கள் வழங்கிய ஆணையை அவமதித்துத் திடீரென நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதையும் கண்டிக்கின்றேன்.

இரு சந்தர்ப்பங்களில் மாத்திரமே நாடாளுமன்றம் கலைக்கப்படும். நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி தனது பெரும்பான்மையை இழக்கும் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம். நாடாளுமன்றத்தின் ஆயுட்காலம் முடிவடைவதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னராக நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம். இவ்விதத்திலேயே தற்போது இந்திய நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. ஆனால், எமது நாடாளுமன்றமோ இவ்வாறான சந்தர்ப்பங்களில் கலைக்கப்படவில்லை. இது நாகரிகமான ஜனநாயக உலகில் மேற்கொள்ளப்படாத ஒரு நடவடிக்கையாகும்.

**நாடாளுமன்றக் கலைப்பு நாகரீகமான செயல் அல்ல**

ஜனாதிபதி தரப்பினர் தெரிவிப்பதுபோல் இது அரசமைப்பால் வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு உட்பட்டது என்பது உண்மையே. இருப்பினும், இது ஓரளவு அச்சுறுத்தலுக்கு ஒப்பான செயலாகும். தற்போதுள்ள அரசமைப்பில் குளறுபடிகள் உள்ளன எனவும் - எனவே, இந்த அரசமைப்பை நீக்கி புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் எனவும் - ஜனாதிபதி முன்னர் தெரிவித்திருந்தார். ஆனால், அதே அரசமைப்பினால் வழங்கப்பட்ட அதிகாரத்தையே தாம் பயன்படுத்தியுள்ளார். தான் விரும்பும் வேளையில் அரசமைப்பை அப்பழுக்கின்றிக் கடைப்பிடிப்பதும், தான் விரும்பாத வேளையில் அரசமைப்பைக் கிழித்து வீசி எறிவதும் நாகரிகமான அரசியல் நடவடிக்கை அல்ல. இதை மிகக் கெட்ட நடவடிக்கை எனக் கூறினால் அது மிகையாகாது.

நாட்டின் முக்கிய கட்சிகள் இரண்டுக்குமிடையில் ஏதாவது இணக்கத்தைக் காணும் நோக்கில் மனோ - மலிக் பேச்சுக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையிலேயே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. சில வேளை இணக்கங்காண வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கவும் கூடும். மனோ - மலிக் பேச்சுக்களின் முதற்கட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கடுமையான நிலைப்பாடு காரணமாக வெற்றிபெறவில்லை. ஆனால், அதன்பின்னர் ஐதே. கட்சியின் நிலைப்பாடு யதார்த்தமாகவும் நம்பிக்கை அளிப்பதாகவும் அமைந்தது. ஜே.வி.பி. - ஸ்ரீல.சு. கட்சி ஆகியவற்றுக்கிடையே உடன்பாடு கைச்சாத்தான பின்னர் ஜனாதிபதி தரப்பினாலேயே மனோ - மலிக் பேச்சுக்கள் பிற்போடப்பட்டன.

ஐதே.முன்னணியின் தற்போதைய நிலைப்பாடு போலியானதென்றோ அல்லது நம்பகத்தன்மை உள்ளது என்றோ எமக்கு உறுதிப்படுத்தமுடியாது. இருப்பினும், தனது கணவனை மிலேச்சத்தனமாகப் படுகொலை செய்த ஜே.வி.பியுடன் பத்து மாதங்களாகப் பேச்சுக்களை மேற்கொள்ளும் அளவுக்கு ஜனாதிபதிக்குப் பொறுமை இருக்கமாயின், நாட்டில் ஜனநாயக வழியிலமைந்த முக்கிய கட்சியான ஐ.தே. கட்சியுடன் ஆறு மாதங்களாவது பேச்சுக்களை மேற்கொள்ளும் அளவுக்கு ஜனாதிபதியிடம் பொறுமை இல்லாமற்போனது புதுமையான விடயமே.

**தேர்தல் நேரம் பொருத்தமானதல்ல**

தேர்தல் நடைபெறவுள்ள நேரமும் அவ்வளவுக்குப் பொருத்தமானதாகத் தெரியவில்லை. எமது நண்பனும் அயல்நாடுமான இந்தியாவிலும் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தியாவில் தேர்தல்கள் முடிவுற்று அந்த நாட்டுடன் ஏற்கனவே பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர், ஸ்ரீலங்காவில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தால் அது புத்திசாலித்தனமாக அமைந்திருக்கும்.

பெப்ரவரி 17 ஆம் திகதி சமாதான முயற்சிகளில நான்கு இணைத் தலைவர்கள் உட்பட ஸ்ரீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் வாஷிங்ரனில் நடைபெறவிருந்தது. அந்த மாநாடு நடப்பதற்கு ஒரு சில நாள்களே இருந்த வேளையில், அந்த மாநாட்டைத் துச்சமாக மதித்து நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலுக்குச் சென்றது புத்திசாலித்தனமான செயலாகாது.

**கஜனி**

ஆனால், பதவி ஆசை காரணமாகவே மேற்கண்ட சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சி தோல்வியடைந்து ஸ்ரீல.சு.கட்சி - ஜே.வி.பி.கூட்டு ஆட்சியமைக்கவும் கூடும். இருப்பினும், சிறு வயதில் எமது பெற்றோர் கூறிய ஆலோசனை ஒன்று தற்போது ஞாபகத்திற்கு வருகின்றது. அதாவது 'கண்டதையும் தின்று அஜீரணத்தை உண்டாக்க வேண்டாம்' என் பதே அந்த ஆலோசனை கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றினாலும் எம்மால் கூறமுடிந்தது அதுவே ஆகும்.

நாட்டின் முக்கிய பிரச்சினை குறித்து கூட்டமைப்பு முன்வைத்துள்ள கருத்துக்கள் செயற்படுத்த முடியாதவை; யதார்த்தமற்றவை. இதைப் பஞ்சசீலக் கொள்கைகள் என்பதற்குப் பதிலாக பஞ்சபாவக் கொள்கைகள் என்றே கூறவேண்டும். அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்போது நாட்டிற்கு அழிவே ஏற்படும்.

நவம்பர் 4ஆம் திகதி ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் சமாதான நடவடிக்கைகளை சமபலத்துடன் முன்னெடுத்துச் செல்ல வாய்ப்புக்கள் இருந்தன. அவ்வாறு சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதாயின் ஐ.தே. கட்சி அரசுடன் தொடர்புகளை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்லவேண்டியிருந்தது. ரணில் விக்கிரமசிங்கவின் அரசின் சமாதான முயற்சிகளில் பல குறைபாடுகள் இருந்தன; சமபலம் இருக்கவில்லை.

**குண்டுகள் வெடிக்காத அமைதிச் சூழல்**

ஆனால், 20 ஆண்டுகளுக்குப் பின்னர் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் குண்டுகள் வெடிக்கவில்லை என்பதை நாம் ஞாபகத்தில் கொள்ள வேண்டும். யுத்தம் முடிவுக்கு வரவில்லை என்பதும், நிரந்தர சமாதானம் ஏற்படவில்லை என்பதும் உண்மையே. இருப்பினும், ஆயுத மோதல்கள் பெருமளவில் குறைந்து மக்கள் மூச்சுவிடக்கூடியதாய் உள்ளது. 20 வருடங்களுக்குப் பின்னர் மக்கள் நாளாந்த வாழ்க்கையை மேற்கொள்ளக்கூடியதாக உள்ளது.

சமாதான முயற்சிகளால் ஏற்பட்ட பொருளாதார நன்மைகளை ஐ.தே. கட்சியால் பொதுமக்களுக்கு கிடைக்கச்செய்ய முடியாமற் போயிற்று. விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத் திட்டம் குறித்து மீண்டும் அவர்களுடன் பேச்சுக்களை மேற்கொண்டு தீமானத்தை மேற்கொண்டிருந்தால் டோக்கியோ உதவிவழங்கும் கூட்டத்தில் வாக்குறுதி அளிக்கப்பட்ட 45லட்சம் டொலர் உதவிகள் படிப்படியாக எமது நாட்டிற்குக் கிடைத்திருக்க வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கும்.

ஆனால், மனோ - மலிக் பேச்சுக்கள் மூலமாக மாத்திரமே இதை முன்னெடுத்துச் செல்லக்கூடியதாய் இருந்தவேளையில், திடீரென தேர்தலுக்குச் செல்ல நேரிட்டதால் கூட்டமைப்பு வெற்றி பெற்றாலும் நாட்டினதும் மக்களினதும் நிலைமை தாச்சியிலிருந்து அடுப்புக்குள் வீழ்ந்த நிலைமையாகவே அமையும்.

**மூன்று தரப்புக்கு லாபம்**

உருவாகப்போகும் இந்த நிலைமைகளால் மூன்று தரப்பினர் லாபம் அடைவர். இதில் ஒரு தரப்பு புலிகள் அமைப்பாகும். அமையப்போகும் கூட்டமைப்பு, அரசு மீது மிகவும் சுலபமாகத் தாக்குதலை மேற்கொள்ளும் ஆற்றலை அவர்கள் பெறுவர். அதற்குக் காரணமும் உள்ளது. அதாவது, அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகளுக்கு எதிராக இந்தக் கூட்டமைப்புச் செயற்படுகிறது. இந்தக் கூட்டமைப்பைச் சர்வதேச மட்டத்தில் மிகவும் சுலபமாக ஓரங்கட்ட முடியும். சர்வதேச நிதி நிறுவனம் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு எதிராகத் தமது கொள்கைகளை வெளியிடும்போதே திட்டித் தீர்க்கும் கூட்டமைப்பின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும்.

கூட்டமைப்மைப்பிலுள்ள கட்சிகளில் ஒன்றான ஜே.வி.பியின் கருத்துப்படி எமது நாட்டில் இயற்கை வளங்களும், மனித வளங்களும் போதிய அளவில் உள்ளன. இருப்பினும், உண்மை நிலைமை அதுவல்ல. மூலாதாரப் பொருள்களான எண்ணெய் வளம் எம்மிடமில்லை. மரங்களின் இலைகளை மாத்திரம் வைத்துக் கொண்டு நாட்டை முன்னேற்ற முடியாது. வெளிநாட்டு முதலீடுகளும் வளங்களுமின்றி கூட்டமைப்பு எவ்வாறு நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் அவர்களால செய்யக்கூடியது 'வயிற்றைக் கட்டுங்கள்; வாயைக் கட்டுங்கள்' என மக்களுக்கு வேண்டுகோள் விடுவதேயாகும். 1970 - 1977 காலத்தில் அவர்களது ஆட்சியின் போதே மக்கள்பட்ட நிலைமையே மீண்டும் தொடரும்.

எனவே, விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய அளவில் நிதியோ அல்லது பொருளாதாரமோ எம்மிடம் இருக்கமாட்டா.

உலகமே நிராகரித்த ஜே.வி.பி. - ஸ்ரீல.சு.க. கூட்டு.

அதுமாத்திரமன்றி, நியாயமான நிபந்தனையின் கீழ் பேச்சுக்களை மேற்கொள்ளலாம் எனக் கூட்டமைப்புக் கூறுகிறது. ஆனால், பேச்சுக்களின்போதே நியாயமான நிபந்தனைகள் குறித்த விடயம் உருவாகுமே தவிர, பேசசுக்களுக்கு முன்பு அல்ல. விடுதலைப் புலிகளின் பல்வேறு கோரிக்கைகளின் மத்தியில் நியாயமான நிபந்தனைகளை நாம் வதிக்க முடியும். ஆனால், முன் நிபந்தனைகளின்றியே நாம் பேச்சுக்களுக்குச் செல்லவேண்டும். நியாயமான நிபந்தனைகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்ற கூட்டமைப்பின் கூற்றை முழு உலகமுமே நிராகரித்துவிட்டது.

கூட்டமைப்பின் கொள்கைகளைப் பார்க்கும்போது ஈழத்திற்கு மாற்றீடான எவையும் அதில் குறிப்பிடப்படவில்லை. ஒன்றுபட்ட நாட்டிற்குள் நிர்வாகங்களை மாத்திரம் பன்முகப்படுத்துவதே தமது நிலைப்பாடு என ஜே.வி.பி. கூறுகிறது. ஆனால், ஸ்ரீல.சு.கட்சி 2000 ஆம் ஆண்டு தாங்கள் முன்வைத்த தீர்வுத் திட்டம் குறித்துக் கூடப் பேசுவதில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. எனவே, தனியான நாட்டிற்குப் பதிலாக மாற்றீட்டுத் திட்டம் எதனையும் முன்வைக்காத அரசுடன் மோதுவது விடுதலைப் புலிகளுக்கு மிகவும் இலகுவாகவும், லாபமானதாகவும் அமையும். ஒட்டுமொத்தமான தமிழ் மக்களும் சர்வதேச சமூகமும் ஒன்றில் எமது தரப்பைக் கைவிட்டு விடுதலைப் புலிகளை ஆதரிப்பர். இன்றேல் மௌனமாக வாழாவிருப்பர்.

உருவாகும் நிலைமை ஜே.வி.பிக்கும் சாதகமாக அமையலாம். 2001ஆம் ஆண்டு தகுதிகாண் அரசின் ஆட்சியில் ஒருபுறம் ஜே.வி.பியும் மறுபுறம் ஐ.தே.கட்சியும் ஆதாயத்தைப் பெற்றன என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஸ்ரீல.சு.கட்சியுடன் ஒப்பிடுகையில் சிறிய கட்சியான ஜே.வி.பிக்கு கூட்டமைப்பில் சமமான இடமளித்திருப்பது ஏற்புடையதல்ல. அவர்கள் தலைவர், உபதலைவர், உபசெயலாளர் பதவிகளைப் பெற்றுள்ளனர். இந்நிலையில், ஸ்ரீல.சு.கட்சி குதிரையாகும். அதில் ஏறிச் சவாரி செய்பவர் ஜே.வி.பி. ஆகும்.

அமையப்போகும் அரசில் ஜே.வி.பி. இடைக்கால நிர்வாக அதிகார சபையாக விளங்கும். ஆனால், அது கைகூடாதென்பதை ஜே.வி.பினர் நன்கு அறிவர். ஆனால், அவர்கள் விரும்புவது என்ன? ஸ்ரீல.சு.கட்சியின் இரத்தத்தை உறிஞ்சி ஐ.தே. கட்சிக்கு நிகரான கட்சியாக விளங்குவதே ஆகும்.

**ஜனாதிபதித் தேர்தலை எதிர்பார்க்கும் ரணில்**

பரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இதனால் பெருமளவில் லாபம் கிட்டும். எதிர்வரும் தேர்தலில தனது கட்சியை வெற்றிபெற வைப்பது தொடர்பாக அவர் முயற்சிகளை மேற்கொள்ளாதுவிடினும், அவர் முழு மனதுடன் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலையே எதிர்பார்த்த வண்ணமுள்ளார்.

எதிர்காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றாலென்ன? நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றாலென்ன? ஒரே நிலைமையே உருவாகும். இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் கூட்டமைப்பின் ஆட்சி மக்களுக்குக் கசக்கும்; 1977இல் இடம் பெற்றதுபோல் ஐ.தே.கட்சி சார்பான அலைவீசும்; அவர்கள் சுலபமாக வெற்றியடைவர். ஆனால், அதன் மூலம் உருவாகும் வலது சாரி அரசின் மூலம் இந்நாட்டு மக்களுக்கு சுபீட்சமும் கிட்டாது.

எனவே, இந்த மூன்று தரப்பினரும் (விடுதலைப் புலிகள், ஜே.வி.பி. மற்றும் ஐ.தே.கட்சி) வெற்றிபெற்றாலும் நாடோ மக்களோ வெற்றிபெற மாட்டார்கள். கிரேக்க நாடகத்திலோ, ஜாதகக்கதைகளிலோ, பைபிளிலோ அல்லது ஷேக்ஸ்பியரின் நாடகங்களிலோ இவ்வாறான கதாபாத்திரங்களின் முடிவு துன்பியலிலும் அழிவிலுமே முடிந்துள்ளனவே தவிர வேறு எவ்விதத்தில் முடிவுற்றன?☆

# 'மன்னவன்' கந்தப்புவின் இழப்பு தமிழ்க்கவிதை உலகுக்குப் பேரிழப்பு

## அஞ்சலி நிகழ்வில் முன்னாள் பிரதி அதிபர் சிவராமலிங்கம்

வடமராட்சி,பெப்.22

ஈழத்தின் மூத்த தமிழ் கவிஞர் மன்னவன் கந்தப்பு தமிழருக்கு, தமிழர் உள்ளங்களுக்கு, தமிழன் ஊருக்கு என்றும் மன்னவன்தான். கவித்துவத்தில் மட்டுமன்றி நகைச் சுவையாகப் பேசுவதிலும் அவர் மன்னவன்தான். அவரது இழப்பு தமிழ்க் கவிதையுலகுக்குப் பேரிழப்பு.

- இவ்வாறு கவிஞர் மன்னவன் கந்தப்புவின் இறுதிக்கிரியைகள் கரவெட்டி மத்தியில் உள்ள அன்னாரின் சிறுகுடிலில் நடைபெற்றபோது அஞ்சலி உரையாற்றிய யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபரும் அகில இலங்கைக் கம்பன் கழகத்தின் போஷகருமான சி.சிவராமலிங்கம் கூறினார்.

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ.இராகவன் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னவனை ஒரு தனிமனிதனாக நாம் கருதியதில்லை. அவர் ஒரு நிறுவனமாகத் திகழ்ந்தவர். அகில இலங்கைக் கம்பன் கழகச் செயற்பாடுகளில் நூறு வீதம் பங்கு கொண்டு உழைத்த பெருமை அவருக்குண்டு. வடமராட்சியில் கம்பன் கழகத்தை நிறுவுவதில் முன்னின்று உழைத்தவர் அவர் - என்றார்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா அஞ்சலி உரையாற்றுகையில் கூறியதாவது:-

வடமராட்சியில் கரவெட்டிக்கு சில தனித்துவங்கள் உண்டு. கரவெட்டிக்கு மாத்திரமல்ல யாழ்ப்பாணத்துக்கு மட்டுமல்ல, முழு இலங்கைக்கு மாத்திரமன்றி உலகத்துக்கே, அங்கெல்லாம் வாழ்ந்த - வாழும் தமிழ் அறிஞர்கள், விற்பன்னர்கள் முன்னிலையில் பெருமையைத் தேடித்தந்தவர்கள் நான்கு அறிஞர்கள். நாடகக் கவிமணி எம்.வி.கிருஸ்ணாழ்வார், சிரித்திரன் சுந்தர், மதிநுட்பவாதியும், உலகப் பேராசிரியருமான பேராசிரியர் வீரகத்தி, இம்மூவருடன் மன்னவன் கந்தப்புவும் இந்த நால்வரில் அடங்குவர். இந்நால்வரும் நாடகம், நகைச்சுவை, கவிதை, இலக்கியம், செந்தமிழ் ஆகிய துறைகளில் பெயரும் புகழும் மிக்கவர்கள்.

மன்னவனுடன் எனது நட்பு, உறவு என்றும் தொடர்ந்து இருந்து வந்தது. சிறந்ததொரு ஈழத் தமிழ் மரபுக் கவிஞர். நகைச்சுவை நிரம்பப் பெற்றவர். மன்னவனின் படைப்புக்களை நூலுருவில் பார்க்காதது ஒரு குறையே. மன்னவன் ஓர் ஆய்வுக்கு உரியவர். எனது மாணவர்களைக் கொண்டு கவிஞர் மன்னவனை ஆய்வு செய்து, அவரைப்பற்றிய விவரங்களை எல்லாம் சேகரித்து யாழ்.பல்கலைக் கழகத்தில் பேணிப்பாதுகாத்து வைத்துள்ளோம்.

சிறந்த மனிதாபிமானப் பண்புடன் எம்மையெல்லாம் சிரிக்கவைத்து கவலையை மறக்கச் செய்த கவிஞர் மன்னவனின் இழப்பு எமக்கு மட்டுமல்ல எமது மண்ணுக்கே பேரிழப்பாகும்.

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையிடம் பாராட்டைப் பெறுவது என்பது ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் பரிசு பெற்றது போன்ற பெருமையும், மதிப்புக்கும் சமமானது! பண்டிதமணி இவருக்கு 'மன்னவன்' எனப் பட்டம் சூட்டினார்.

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மறைந்தபோது கவிஞர் கண்ணதாசன் "வெற்றிலையும் வாயும் விளையாடிக் கொண்டிருக்கும் பட்டு" எனப்பாடியது போல மன்னவன் கந்தப்புவையும் பாடலாம் - என்றார்.

மூத்ததமிழ் நாவலாசிரியர்களில் ஒருவரான தெணியான் பேசுகையில்:-

கவிஞர் மன்னவன் மக்களோடு நின்றார். மக்களோடு மக்களாக வாழ்ந்தார். அவர் மறைந்த செய்தியை எனக்கு தெரிவித்தவர்களிடமிருந்து இதனை என்னால் உணரக்கூடியதாக இருந்தது.

பழமைக்கும், புதுமைக்கும் இடையில் உள்ள இலக்கியவாதி மன்னவன். பண்டிதமணி சு.கணபதிப்பிள்ளையும் அப்படித்தான். ஆனால், பண்டிதமணியிடம் முதலாம் பிரிவில் படித்த சில மாணவர்கள் தொடர்ந்தும் பழைமைவாதிகளாக இருந்து வருகின்றனர்.

கற்றல் மிக்க பெரியவன் மன்னவன். மன்னவனின் படைப்புக்கள் எழுத்தில் வரவேண்டும் - என்றார்.

அதிபர் இ.ராகவன் உட்பட மற்றும் பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (எ-173)

## மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி இராசா மலர்

தோற்றம் 03.02.1950 — மறைவு 24.02.2001

திதி: 22.02.2004

எங்கள் குடும்பத் தலைவியே! குல விளக்கே!
நாவலர் சனசமூக நிலைய பொன்விழா நன்னாளில்
கணவனின் தலைமைத்துவங்கண்டு பூரிப்படைந்த
வேளையில் காலன் கவர்ந்தானோ?
இன்று உங்கள் நினைவு கூர்ந்து அஞ்சலி செய்கின்றோம்.

*"இன்ப பவனம்"*
*நாவலடி, உடுப்பிட்டி.*

இ.இராஜேஸ்வரன் குடும்பத்தினர்.
(யா/சுகாதாரத்திணைக்கள உத்தியோத்தர்)

(28740)(35-14)

## அத்தியார் இந்துவில் நீர்த்தாங்கி அமைப்பு

நீர்வேலி,பெப்.22

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் தண்ணீர்த்தாங்கியொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் வசித்துவருகின்ற மேற்படி கல்லூரியின் பழைய மாணவர்கள் நீர்வேலி நலன்புரிச் சங்கம் என்ற அமைப்பின் ஊடாக இந்த நிதியை வழங்கியுள்ளனர்.

அத்துடன், தண்ணீர் விநியோகதத்துக்குரிய குழாய் பொருத்துவதற்கான நிதியையும் இவர்களே வழங்கியுள்ளனர். இதனையடுத்துக் கல்லூரியில் நீர்விநியோகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(எ-10-110)

## கண்ணீர் அஞ்சலி



யாழ். காங்கேசன்துறை வீதியிலுள்ள *"சிங்கம்ஸ்"* புடைவையக உரிமையாளர்

### இராமசாமி பரராசசிங்கம்

அவர்கள் 18.02.2004 இல் இயற்கையெய்தியதையிட்டு பேரதிர்ச்சியும், கவலையும் அடைகின்றோம். அன்னாரது இழப்பு ஈடுசெய்யமுடியாதது. பிரிவால கலங்கிநிற்கும் குடும்பத்தினருக்கு அனுதாபந்தெரிவித்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர்,
ஏகாம்பரம் புடைவை மாளிகை,
72, பெரியகடை, யாழ்ப்பாணம். T.P.:2151.

(C/33396)(34-14)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் K.P.புலவர்

*(ஸ்தாபகர், புலவர் வீடியோ)*

*தோற்றம் 09-12-1944* — *மறைவு 18-02-1999*

திதி: வளர்பிறை துதியை

*பண்பிலே தெய்வமாய் பாரினில் வாழ்ந்தவரே!*
*அன்புக்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்தவரே!*
*எமைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஐந்து ஆனதுவோ?*
*நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்தாலும்*
*உங்கள் அன்பும் வழிகாட்டலும் என்றும்*
*எம் நினைவினிலே நீங்காது நிலைத்திருக்கும்!*

*"புலவர் வீடியோ",*
*கோண்டாவில் வடக்கு,*
*கோண்டாவில்.*
T.P.:060 2212973.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

(28757)(34-14)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 06.04.1925 — உதிர்வு 05.03.2003

### அமரர் வெள்ளையன் கந்தையா

திதி – 22.02.2004

கண்விழிப்பாய் என்று நாமெல்லாம் காத்திருக்க
கண்மூடி நீ சென்று ஆண்டொன்று ஆனதையா
ஆண்டொன்று தானென்ன ஆயிரமாய் ஆனாலும்
ஆறாது எம்இதயம் மாறாது உம்நினைவு.
உங்கள் ஆத்மா சாந்திபெற
ஆண்டவனை வேண்டுகிறோம்.

அச்சுவேலி தெற்கு. (28719) குடும்பத்தினர்.

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 02 – 06 – 1917



மறைவு 22 – 02 – 1984

### 'கலைக்கவி' நீ. எஸ்தாக்கி

(முன்னாள் அதிபர், யாழ். நாவாந்துறை மகாவித்தியாலயம்)

*உயிர்ப்பும் உயிரும் நானே என்னுள் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான் என்று கூறிய இயேசுவே! உம்மிடம் அழைத்துக் கொண்ட எங்கள் அன்புத் தந்தைக்கு நித்திய இளைப்பாற்றினையும் முடிவில்லாத வாழ்வையும் அளித்தருள வேண்டுகின்றோம்.*

அவரது பிரிவால் வாடி நிற்கும்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

*2ஆம் குறுக்குத்தெரு,*
*நாவாந்துறை வடக்கு, யாழ்ப்பாணம்.*

(28687)(34-14)

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை நாகராசா (கிளி)

பாடசாலை வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை நாகராசா அவர்கள் 19.02.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் கனகம்மாவின் அன்பு மகனும் இராசாத்தியின் அன்புக் கணவரும் ரஞ்சித் (இத்தாலி), ரஜிதா, ரஜிக்குமார், யனோஜா, ஜெனிசன் ஆகியோரின் அருமைத் தந்தையும் தவராசா, கமலநாதன் (இத்தாலி), நிர்மலா (கனடா), ஜெயநாதன் (கனடா), யுவதாசன்(இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் புவனேஸ்வரி, நீலா (இத்தாலி), தவராசா(கனடா), விஜயா(கனடா),ஜாமினி(இத்தாலி) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி,*
*ஆறுகால் மடம், ஆனைக்கோட்டை.*

தகவல்:
செல்லத்துரை கனகம்மா
(தாய்).(28748)(34-14)




பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

## பரராஜசிங்கம் திருநாவுக்கரசு

(ஆவரங்கால்)

(பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.)

தவப்பேறு 23.11.1953

சிவப்பேறு 23.01.2004

ஆவரங்கால் சிவன்கோயில் திருத்தொண்டன் "அரசு"
ஊருக்கு உழைப்பதையே வாழ்வாக்கிய "அரசு"
யாவருக்கும் நல்லவர், வல்லவர் "அரசு"
நாதஸ்வர மேதைகளின் நாவில் நிறை "அரசு"
பர்வத பத்தினியாள் ஏழாம் நாள் விழாவை
பலர் வியக்க ஒழுங்கமைக்கும் திருநாவுக்கு "அரசு"
நடராச ராமலிங்கன் தேவஸ்தான சபையும் உறவினரும்
உருகிடவே எமைப்பிரிந்து சென்ற
ஒரு திங்கள் நிறைநாளில் நினைவு கூர்கின்றோம்.

*"மாசில் அகம்"* சி.கிருஷ்ணபிள்ளையும்,
*ஆவரங்கால்.* (28761)(35) குடும்பத்தினரும்.

# உலக சாரணர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.22

காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச்சங்க உலக சாரணர் நாள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் கொண்டாடப்படவுள்ளது.

மாவட்ட ஆணையாளர் எஸ்.சிவபாதரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், முதல்மைவிருந்தினராக காங்கேசனதுறை மக்கள் வங்கியின் முகாமையாளர் பொன்.கணேசமூர்த்தி கலந்துகொள்வார்.

(எ-8)

## தொலைபேசி இயக்குநர்கள் தேவை

*யாழ்.பஸ் நிலையத்துக்கு அண்மையில் இயங்கும் தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றுக்கு தொலைபேசி இயக்குநர்கள் (பெண்கள் மட்டும்) தேவை. வயது 25–40 சுயவிவரக் கோவையுடன் தொடர்பு கொள்க.*

விளம்பர இல.2174
C/O உதயன்,
யாழ்ப்பாணம். (28764)

# ஈரவிழிகளினால் இதய அஞ்சலி



"சிங்கம்ஸ்" புடைவையகம்,
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்

## இராமசாமி பரராசசிங்கம்

*அவர்கள் 18.02.2004 இல் காலமாகியதையிட்டு நாம் மிகவும் கவலையும் வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு அனுதாபந்தெரிவிப்பதுடன், ஈரவிழிகளினால் இதய அஞ்சலியும் செலுத்துகின்றோம். ஆத்மா சாந்தி அடைவதாக.*

இல. 65 (203), கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (C/33397)(35-21-14) உரிமையாளர், பாஷன் ஹவுஸ்.

# துயர் பகிர்வு

எமது நிறுவன ஆசிரியை
செல்வி ம.துளசி அவர்களின்
அன்புச் சகோதரியும், நிறுவன பழைய மாணவியுமான

## செல்வி தயாவாணி மயில்வாகனம்

அவர்களின் பிரிவினால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்,
*The Express Institute* ஆசிரியர்கள், ஆளணியினர்,
Irupalai, Kopay. (28768)(35-21-14) மாணவர்கள்.






# Dialog GSM

இன்
அங்கீகரிக்கப்பட்ட
யாழ்.மாவட்டத்திற்கான
ஏகமுகவர்

# Dial Links The PhoneShop

NO: 204, K.K.S. Road, Jaffna

எம்மிடமும் எமது கிளை முகவர்களிடமும் Sim Card, (Cli+50/=)Kit Card
கையடக்கத் தொலைபேசிகள் என்பன
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

*எமது கிளை முகவர்கள்:*




01) **The Phone Shop**
திருநெல்வேலி.
தொ.பே: 0777 - 110525

02) **The Phone Shop**
சுன்னாகம்.
தொ.பே: 077 - 7609859

03) **The Phone Shop**
நெல்லியடி.
தொ.பே: 226 - 3770

04) **The Phone Shop**
மானிப்பாய்.
தொ.பே: 077 - 6171500

05) **The Phone Shop**
மல்லாகம்.

06) **The Phone Shop**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
நல்லூர்.
தொ.பே: 0777 - 110160




(சி33394) (23-14)

யாழ்.மண்ணில் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் Dialog GSM இன்
சேவையை ஆரம்பித்து என்றும் உங்கள் தேவையை நிறைவு செய்து தரும்
Dial Links (எம்மிடம் நேரடியாகத் தொடர்புகொள்பவர்களுக்கு மேலும் விஷேட
விலைக்கழிவு வழங்கப்படும்.)
உடன்தொடர்புகொள்வதற்கு 021 - 222 - 5485

# கண்ணீர்க் காணிக்கை

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி
"சிங்கம்ஸ்" புடைவைக உரிமையாளர்

## இராமசாமி பரராசசிங்கம்



அவர்கள் 18.02.2004இல் காலமானதையிட்டு நாம் மிகவும் துயரமடைகின்றோம். இவரது மறைவால் துன்பக் கடலில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரருக்குக் கண்ணீர்க் காணிக்கை செலுத்தி அஞ்சலிக்கின்றோம். ஆத்மாசாந்தி அடைய ஆண்டவனை இறைஞ்சுகின்றோம்.

*58, பெரியகடை,* நியூ சண்முகானந்தா
*யாழ்ப்பாணம்.* (C/33398)(35-14-21) ரெக்ஸ்ரைலஸ்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 08 1921



மறைவு 05 03 2003

அமரர் **அப்பாக்குட்டி தாமோதரம்பிள்ளை**

திதி: 22.02.2004

ஆண்டு ஒன்று ஆனபோதும் ஆறவில்லை எம்மனம்
மீண்டு ஒருமுறை வந்த திருமுகத்தைக் காட்டீரோ?
ஈண்டு உமது நினைவுடனே இங்கு நாம் வாழ்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

மட்டுவில் தெற்கு, மனைவி, பிள்ளைகள்,
சாவகச்சேரி. மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(28767) (26-21-14)

## ஆங்கிலக்கல்வி

மிகவும் இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து இலக்கணத்துடன் ஆங்கிலம் கற்பிக்கப்படும். வீடுகளுக்கு வந்தும் கற்பிக்க முடியும்.

தொடர்பு:
இ.தேவதாஸ்,
69, B.A தம்பிலேன்,
(28765) யாழ்ப்பாணம்.

## விற்பனைக்கு

CB 125 - 154 xxxx **Honda**
மோட்டார் சைக்கிள்
விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**ஆம்ஸ்ரோங்**
39, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (28760)




உலகப் புகழ் பெற்ற L.G
ABANS நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக
சேவையில் பெற்றிட

LG
Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans

141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766
(C/33276)(41)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (22.02.2004) ஞாயிறன்று வெள்ளிவிழாக் கொண்டாடும் ஆசிரியப் பெருந்தகை

உயர்திரு. **இரா.அருட்செல்வம்**

கல்வி உலகில் கல்விப் போதனையுடன் மட்டும் நின்றுவிடாது உலக அறிவு, தர்மசிந்தனை, ஒழுக்கம் என்பவற்றை மாணவர் சமுதாயத்திற்குப் போதிக்க வேண்டிய நேரம் இது என்பதை உணர்ந்து போதித்து கடந்த 25 வருடங்களாக ஒழுக்கத்துடன் இணைந்த கல்வியை வழங்கிய ஆசிரியப் பெருந்தகையை மேலும் அவர் தொண்டு வளர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:*
தரம் 11 மாணவ மாணவிகள்
அருள் கல்வி நிலையம், இணுவில்.
(C/33395)(34-16-18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பண்ணாகம் விசுவத்தனை முருகன் கோயில்
**பாஸ்கரக்குருக்கள் - பத்மஜா**
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

**பா.ஜனார்த்தனசர்மா**

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார். அவரது வெற்றிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த யாழ். இந்து ஆரம்ப அன்னையின் அதிபர், உப அதிபர், தரம் 1-5வரை கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியத் தெய்வங்களுக்கும் ஞானக்குழந்தைக் கழகத்தினருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

குறிப்பு: 15.02.2004 உதயன் நாளிதழில் வெளியான பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களின் பெயர்ப்பட்டியல் விளம்பரத்தில் இவரது பெயர் தவறாக பா.நரேந்திரசர்மா எனப் பிரசுரமாகியுள்ளது.

நன்றி நவில்வோர்:
*22, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.*
ந.பத்மநாபசர்மா - விமலா தம்பதிகள் (தாத்தா, அம்மம்மா). (28758)(34-16-18)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வளர்பிறை சேமிப்புச் சங்கத்தின் முன்னாள் தலைவரும், தற்போதைய கணக்குப் பரிசோதகருமான

**உயர்திரு. பசுபதி இராசேந்திரம்**

அவர்கள் அண்மையில் சமாதான நீதிவானாக நியமனம்பெற்றுள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியுடன அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது பணி மேன்மேலும் வளர்ந்து சிறப்புற இறையாசி வேண்டுகின்றோம்.

*ஊரெழு கிழக்கு, ஊரெழு.* (28775)(34-16-18)
- வளர்பிறை சேமிப்புச் சங்கத்தினர்.


## VACANCIES

VACANCIES EXIST IN AN ESTABLISHED CONSTRUCTION FIRM FOR THE FOLLOWING POSTS.

1) ADMINISTRATIVE OFFICER.
QUALIFICATION: BBA FROM A RECOGNISED UNIVERSITY OR EQUIVALENT.
TERMS AND CONDITIONS:
A) PROBATIONARY PERIOD - 6 MONTHS
B) PERMANENT EMPLOYMENT AFTER SUCCESSFUL COMPLETION OF PROBATIONARY PERIOD WITH EPF AND ETF.
C) SALARY NEGOTIABLE.

2) STORE KEEPER
QUALIFICATION: WITH A CONSIDERABLE EXPERIENCE IN STORE KEEPING OR CONNECTED FIELDS
ABILITY TO WORK IN ENGLISH.
SALARY NEGOTIABLE.

Advertiser No: 2173
C/o Uthayan, Jaffna.
*APPLY WITHIN 10 DAYS.* (28735)(35-17-18)


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்தவரும், ஆஸ்திரேலியாவில் வசித்து வந்தவருமான

**அருளம்பலம் கனகசுந்தரம்**

(இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர்)

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சியடையும் இவ்வேளையில் அன்னாரது பிரிவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சட்டநாதர் வீதி, நல்லூர்.* (28774)(35-17-18)
திரு.சி.மகாதேவன் குடும்பம்,
திரு.வெ.கிருஷ்ணபிள்ளை குடும்பம்.

## இளங்கலைஞர் மன்ற இசைவிழாவில் இன்று

யாழ்ப்பாணம்,பெப்.22

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசைவிழாவின் இரண்டாம் நாளான இன்று நடைபெறும் நிகழ்வுகள் பற்றிய விவரம் வருமாறு:-

மாலை 4.30 மணிக்கு என்.ஆர்.கே.இரத்தினகுமார், என்.ஆர்.கே. வாகீசன் குழுவினரின் மங்கள இசை, 5.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவிகளின் குழுப் பாடல் தொடர்ந்து சிவசக்தி அருணகிரிநாதனின் பாட்டுக்கச்சேரி.

மாலை 6.10 மணிக்கு இளங்கலைஞர்மன்ற மாணவர்களின் குழுப் பாடல், 6.20 மணிக்கு ஜே.புவனேந்திரராஜாவின் புல்லாங்குழல் இசை 6.50 மணிக்கு துகாரதி கணேஸ்வரனின் பாட்டுக்கச்சேரி தொடர்ந்து கல்பனா சர்வேஸ்வர சர்மாவின் வீணை இசை.

இரவு 7.50 மணிக்கு சிவாஜினி பத்மராஜாவின் பாட்டுக்கச்சேரி, 8.30 மணிக்கு பரமேஸ்வரி கணேசனின் பாட்டுக்கச்சேரி (எ-10)

## முதியோரைப் பராமரிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.22

கோப்பாய் தெற்கு விளையாட்டரங்க வீதியில் உள்ள சாயி முதியோர் பராமரிப்பு இல்லத்தில் முதியோர்களை பராமரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இல்லத்தில் சேரவிரும்பும் முதியோர்கள் நல்லூர், பருத்தித்துறை வீதியில், 372ஆம் இலக்கத்தில் திருமதி ஸ்ரீஸ்கந்தராஜா இராஜேஸ்வரி என்பவரிடம் பெயர்களைப் பதிவு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,பெப்.22

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்கான பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறையில் உள்ள பணிமனையின் புதிய கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

அரச திணைக்களங்களின் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை இந்தக் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு உதவி அரச அதிபர் கேட்டுள்ளார். (எ)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.22

நெடுந்தீவு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு நெடுந்தீவு உதவி அரச அதிபர் எஸ்.பேரானந்தன் கேட்டுள்ளார். (எ-8)

## பாடசாலை தரம் உயர்வு

வலி,தென்மேற்கு,பெப்.22

பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம் கடந்த ஜனவரி மாதம் முதல் தரம் இரண்டு பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து இங்கு அண்மையில் 10 ஆம்வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் வே. சிவசுந்தரம் தெரிவித்தார். (எ-135)

## நிவாரணம் பெறுவோர் சிரமம்

கோப்பாய்,பெப்.22

நீர்வேலி மற்றும் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க எல்லைக்குள் நிவாரணம் பெறுகின்ற குடும்பங்களின் தலைவர்கள் சங்கங்களினால் சங்க உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

இதற்கென அங்கத்துவப் பணமாக 100ரூபா அறவிடப்பட்டு வருகின்றது. இப்பணத்தைச் செலுத்துவதற்கு சம்பந்தப்பட்ட குடும்பத்தவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-10-72)


## தென்னிந்தியாவில் திருமண மண்டபம்

அன்பார்ந்த மக்களே!

★ உங்களது வாழ்க்கைப் பயணம் இனிதே அமைந்திட எங்களது ஸ்தாபனத்தை நாடுங்கள்!
★ உங்களது திருமண வைபவங்களை சீரிய முறையில் சிறப்பாக நடத்திக் கொடுக்கின்றோம்.

※ திருமண மண்டபம் ※ 50 பேருக்கான சாப்பாட்டு வசதி
※ நாதஸ்வரம், தவில் ※ பூமாலைகள் ※ ஐயர்
※ மணவறை ※ தாம்பூலப்பை (பெயர் அச்சிட்டு)
※ அலங்காரம் (மேக்கப்) ※ குளிர்பான வகைகள்
※ எட்டு வகையான பலகாரங்கள்

அனைத்து வசதிகளும் அளிக்கப்படும்.
உல்லாச விடுதி ரூபா 30,000/= மட்டும்
ரூபா 15,000/= மட்டும்
சுற்றுலா செல்வதற்கான குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத கார்கள் குறைந்த வாடகையில்
உள்ளூர் A/C or Non A/C கார் 1 கிலோமீற்றருக்கு 5/=
(7 இருக்கைகள்) 1 மணித்தியாலத்திற்கு 50/=
வெளியூர் A/C or Non A/C கார் 1 கிலோமீற்றருக்கு 6/=
1 நாளுக்கு 150/=

*விவரங்களுக்கு:*
G.V. CATERING & MARRIAGE CONTRACTORS
G.V. GUEST HOUSE
G.V.IN KALYANAMALAI
G.V. TOURIST SERVICE & CALLTAXI
☎ 22316366, 22316750, 55879902.
Cell: 9840074163. (28771)(34-16-18)

SRI BALAJI CONSTRUCTION
*8/12, B.V.Nagar South*
*5th Street, Nanganallur,*
*Chennai-61.*
*South India.*


## 31 ஆம் நாள் நினைவு கூர்தல்



அமரர்
**பரராசசிங்கம் திருநாவுக்கரசு**
(வீனஸ் விளையாட்டுக்கழக உதைபந்தாட்ட பயிற்றுவிப்பாளர்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 23.11.1953 | 23.01.2004 |

ஆவரங்கால் திருநிறை "அரசு" எமைப் பிரிந்து
ஓர் திங்கள் உருண்டோடியதோ?
யாருக்கும் தீங்கு எண்ணா நல்மனத்தோன்
தேவநிலகு சென்றமை ஆற்றுதற்கு எளிதோ!
"ஒன்றே குலம் ஒருவனே தேவன" எனும்
மந்திரத்தின் இலக்கணமாய் வாழ்ந்தவனே!
நின்னை யமன் கவர்ந்த கொடூர நிகழ்வின்
திங்களொன்று சென்றுவிட்ட இந்நாளில்
நெஞ்சில் கனவேந்தி நினைவு கூருகின்றோம்.

*மணற்பகுதி, புத்தூர்.*
கலையகம் சனசமூக நிலையம்,
வீனஸ் விளையாட்டுக்கழகம். (28769)(34-16-18)

## மரண அறிவித்தல்கள்

### சிற்றம்பலம் சிவபாலன்

சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் இல.64 A, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சிவபாலன் (ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) அவர்கள் 20.02.2004 வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் - அன்னமலர் தம்பதிகளின் அன்பு மகனும் குருசாமி - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் தவநாயகி(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை) அவர்களின் பாசமிகு கணவரும் மதிவதனன், சுகன்னியா, சிவாஞ்சலி(சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோகிலவதனியின் அன்பு மாமனாரும் புனிதவதி, சிவசோதி, சிவப்பிரகாசம், சிவநாதன், அமரரான சிவஞானம், சிவராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தில்லைநாயகி(லண்டன்), சிவநாயகி, செல்வி சோதிநாயகி(சுவிஸ்), நயனி(பிரான்ஸ்), அமரர் சிவசுப்பிரமணியம், மகாதேவா, தனலெட்சுமி, சிவயோகேஸ்வரி, அமரர் புவனேஸ்வரி, பூலோகநாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கந்தசாமி(U.K.) சுந்தரலிங்கம், ஜெகதீசன்(பிரான்ஸ்) ஆகியோரின் அருமைச் சகலனும் சஜீவன், நிருசாந் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி தவநாயகி சிவபாலன் (மனைவி)
(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)

*இல. 64A, புங்கன்குளம் வீதி, யாழ்ப்பாணம்.*
*077 6008046* (28779)(34-16-18)

### வட்டர் செல்லத்துரை

அம்மன் கோயில் வீதி, நாவற்குழி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வட்டர் செல்லத்துரை 18.02.2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வட்டர் - மாரிமுத்துவின் மூத்த மகனும் பிலிப் - மரியமுத்துவின்(கொக்குவில்) சிரேஷ்ட மருமகனும் தம்பிஐயாவின் சகோதரனும் மகேஸ்வரியின்(மணியக்கா) அருமைக் கணவரும் இராசநாயகம், யோகராசா (கனடா), துரைராசா, பஞ்சாட்சரம் (லண்டன்), திருச்செல்வம் (பிரான்ஸ்), குணராசா (லண்டன்), குணசீலன் (கனடா), மோகன் (லண்டன்), அன்ரன் (லண்டன்), அருந்தவராசாத்தி (கனடா), ஆகியோரின் தகப்பனாரும் இ.நாகேஸ்வரி, யோ.மல்லிகாதேவி (கனடா), து.கமலாம்பிகை, ப.சுமதி, தி.அம்மு (பிரான்ஸ்), கு.கலா (லண்டன்), அ.பாமினி (லண்டன்), கு.சுகந்தி (கனடா), சுதாகரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும் வினோத் (கனடா), விமல், விஜிதா, வினோஜா, நிசாந்தன் (கனடா), மயூரன் (கனடா), வசந்தன் (கனடா), அசோக், தயீவன், வசீகரன், வசீதரன், அஜிதா, மதுஜா (லண்டன்), லெகின் (லண்டன்), கெகின் (லண்டன்), வித்தியா, கீர்த்திகா, கார்த்திகா, அருஷா (கனடா), அசன் (லண்டன்), அனி, அனன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2004) ஞாயிறு பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

*அம்மன்கோயில் வீதி, நாவற்குழி கிழக்கு, தச்சன்தோப்பு.*
தகவல்: செ.இராசநாயகம் (மகன்). (28780)(40)

## கைத்தொலைபேசியை
### கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்

உரும்பிராயில் இருந்து உடுவில் ஊடாக சங்கானைக்கு வரும் வழியில் எனது கைத்தொலைபேசி (077-6146409) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்திற்கோ அல்லது தொலைபேசி இலக்கத்திற்கோ தொடர்பு கொள்ளவும்.

- தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

T.P: 0602-212669
தொடர்பு: கி.குணம்,
தபால்கந்தோர், சங்கானை.
(சி-33403)(37-17-12-32)



## வ/யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தின் ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டம் - 2004

**காலம்: 22.02.2004 (இன்று) நேரம் 10.30 (மு.ப)**
**இடம்: யாழ் மத்திய கல்லூரி (கேட்போர் கூடம்)**

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரும், வருவாய்த் துறையினரும், சுகாதாரப்பிரிவு பொறுப்பாளர்களும், தொழில் சங்கப் பொறுப்பாளரும் கலந்துகொண்டு கருத்துரை வழங்கவுள்ளதால் அனைத்து மருந்தக உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர் / செயலாளர்,
வ/யா/ஆ/ம/வ/மன்றம்.
(28787)(32-12-17)



## மலிவு விலையில் புத்தகங்கள்
**"சீவம்" பாலர் புத்தகங்கள்**

பாலர் வகுப்புக்கான அழகு வர்ண
புத்தகங்கள் மலிவாக விற்பனையாகின்றன!

**துர்க்கை அம்பாள் புத்தகசாலை**
**ஆசீர்வாதம் புத்தகசாலை**
23, தனங்களப்பு வீதி, சாவகச்சேரி.
(சி-33402)(32-12-17)


## ஈராண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
15
12
1944



ஆண்டவன் அடியில்
13
02
2002

### அமரர் ஐயாத்துரை கந்தையா (பப்பா)
**திதி: 22.02.2004**

*உங்களது வருத்தத்தை எங்களுக்குக் கூறாமல்*
*எங்களது வாழ்வுக்கே ஏற்றம் பெற உழைத்தீர்*
*தங்களது மனையாளும் தவியாய்த் தவிக்கின்றாள்*
*உங்களது நினைவாலே நாம் தினம் வாடுகிறோம்*
*ஈராண்டு சென்றதையா உம் நினைவில்*
*தப்பாமல் ஒரு முறைவந்து திருமுகத்தைக் காட்டிரோ?*
*நீங்கள் எமைப்பிரிந்து இரண்டாண்டுகள் என்ன எத்தனை*
*யுகம்தான் கடந்தாலும் உமது இனிய நினைவுகளை மறக்கமுடியாது.*

*பழைய வீதி,*
*ஆறுகால்மடம்,*
*ஆனைக்கோட்டை.* (சி-33408)(37-17-12-32)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை கோவிந்தர்
**(ஓய்வுபெற்ற உப தபாலதிபர்)**

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் குளப்பிட்டி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கோவிந்தர் 15.02.2004 ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பையா, பொன்னம்மா, சின்னத்துரை திரவியம், கந்தையா பாக்கியம், சின்னத்துரை பார்வதிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை சின்னையா, கணபதிப்பிள்ளை சிதம்பரநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் திருமதி திலகவதி, குணதாசன் (கனடா), யோகராஜா (கனடா), நவரட்ணராஜா (கனடா), செல்வராஜா (செல்லா), திருமதி புஸ்பவதி சண்முகராஜா (ஆசிரியை வண்.ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் பொ.குணதாசன் (கனடா), திருமதி உதயகுமாரி யோகராஜா (கனடா), திருமதி ரஜனி நவரட்ணராஜா (கனடா), திருமதி தவச்செல்வி செல்வராஜா (4ஆம் வருடம் இந்து நாகரிகத்துறை யாழ்பல்கலைக் கழகம்), கி.சண்முகராஜா (ஆசிரியர் யாழ்.இந்துக் கல்லூரி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை - சுபத்திரை தம்பதிகளின் மருமகனும் கனடாவில் வசிக்கும் அனிதா, அஜிதா, அனோஜா, சிந்துஜா, தாட்ஷாயினி, பிரசாந், சுசாந்தரம்மியா மற்றும் பிருந்தா, நிருஜா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மாணவிகள்), ஸிவாஸ்கர் (கொக்குவில் இந்துக் கல்லூரி), சபேசன், பானுஜன் (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்கள்), சானுஜன் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.02.2004) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 1 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குளப்பிட்டி ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
*தொ.பே.இல.0776108354*

தகவல்:
மனைவி - பரமேஸ்வரி,
மகன் - கோ. செல்வராஜா, (செல்லா)
மருமகன் - கி.சண்முகராஜா.
(28790)(32-12-17)

## கற்றல் உபகரணம் அன்பளிப்பு

கைதடி,பெப்.22

கைதடிப் பிரதேசத்தில் உள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 10 மாணவர்களுக்கு கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தினால் சீருடைத்துணியும், கற்றல் உபகரணங்களும் அண்மையில் வழங்கப்பட்டன. (எ-10-75)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

கம்பர்மலை அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் மா.அனந்தேஸ்வரன் தலைமையில நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.அம்பலவாணர் கலந்து கொள்ளவுள்ளார். (எ-10)

☆ ☆ ☆

மாதகல் சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை திங்கட்கிழமை ,பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திருமதி செ.தேவராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யுனிசெவ் அமைப்பின் யாழ்.மாவட்ட வதிவிடப்பிரதிநிதி திருமதி றெசானா வெகா கலந்துகொள்ளவுள்ளார். (எ-10)

☆ ☆ ☆

வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா கனிஸ்ட மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை திங்கட்கிழமை அதிபர் வீ.இந்திரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.எஸ்.நந்தகுமார் கலந்துகொள்வார். (எ-10-173-182)


## தவறிவிட்டது

**வேலணையைச் சேர்ந்த கந்தசாமி அனுஷா என்பவருடைய தே.அ.அட்டை (இல.837161282V) அம்மன் வீதி, கந்தர்மடத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் "சங்கவி ஸ்ரோர்ஸ்" இல.342, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.** (28786)



**லக்சுமி இணுவில்**
மிதுன், சார்மி, வையாபுரி, தாமு, நாசர்
இன்னும் பலர் நடிப்பில்
**ஆஹா எத்தனை அழகு**
(ரீல்ஸ்)
காட்சிநேரம் : 11.00. 2.30.7.00 .(பு.நே.)
(28738) (12)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
**ஜே**
(ரீல்ஸ்)
பிரசாந், அன்சூர் நடித்த
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
DUNGEONS DRAGONS
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

**ராஜா** யாழ்ப்பாணம்



விஜயகாந்த், வடிவேல், பிரபுதேவா, பாண்டியராஜன் நடித்த
**எங்கள் அண்ணா**
காட்சிநேரம் : 10.30, 2.30,6.30,9.30(பு.நே.) (ரீல்ஸ்)
(C-33050) (12)

**லிபேட்டி** அச்சுவேலி



அர்ஜுன், சிம்ரன், நாசர், வடிவேல் நடித்த
(ரீல்ஸ்)
காட்சிகள்: 3.00,7.00 (பு.நே.)
**ஏற்றான்**

**நாகம்ஸ் சுன்னாகம்**
புதிய டொல்பி ஒலிநயத்துடன் மகா சிவராத்திரி வெளியீடாக!



தனுஸ், அம்மா, கருணாஸ் (2 வேடம்) நடிப்பில்
காட்சிநேரம் : 11.00,3.00,7.00.(பு.நே.) (ரீல்ஸ்)
**சுள்ளான்**
(C/33048)(12)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பழைய மாணவரும்,
பழைய மாணவர் சங்கத் தலைவரும் ஓய்வுபெற்ற
கிராம உத்தியோகத்தரும் சமாதான நீதிவானும் ஆகிய
**சங்கரப்பிள்ளை யோகராசா**
அவர்கள் காலமானதால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தவர்க்கு ஆறுதல் கூறுவதுடன், அவர்தம்
ஆத்மசாந்திவேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பழைய மாணவர் சங்கம்,
அபிவிருத்திச் சங்கம்.

*யா/கோண்டாவில்*
*இந்து மகாவித்தியாலயம்.*
(28788)(32-12-17)

## கண்ணீர் அஞ்சலி



திருநெல்வேலியைச் சேர்ந்தவரும்
எமது பாசத்துக்கும் நேசத்துக்கும் உரியவரும்
எங்கள் குடும்ப வழிகாட்டியுமான அம்மம்மா
### திருமதி சின்னப்பு அன்னம்
அவர்கள் காலமானதையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம். அவரது மறைவால் துயரடைந்து கவலையில் மூழ்கியிருக்கும் குடும்ப உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
- பிரதீபன் சங்கீதா (கனடா).
(28782)(12-17-32)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னப்பு அன்னம்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பு அன்னம் அவர்கள் 20.02.2004 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - பார்வதி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் தங்கேஸ்வரி, தவமலர் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சின்னத்துரை, இராமலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் உதயகுமார் கலாநிதி (சுவிஸ்), பாலகுமார் உமா (ஜேர்மனி), தர்மகுலசிங்கம் ரேணுகா (லண்டன்), பிரதீபன் சங்கீதா (கனடா), தர்சியா, சுபாசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் மிதுனன், மிதுஷன் (சுவிஸ்), யஸ்மிதா, நிவேதா (ஜேர்மனி), றொசானி (லண்டன்) ஆகியோரின் அன்புப பூட்டியும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், செல்லம்மா, லட்சுமிப் பிள்ளை, பொன்னம்மா, செல்லையா, முத்துத்தம்பி ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22.02.2004) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்பாட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பதிவாளர் ஒழுங்கை,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.* (28781) (38-17-12-32)

தகவல்:
சின்னத்துரை, இராமலிங்கம்
(மருமக்கள்)

### சொக்கலிங்கம் மகாலிங்கம் (ஆச்சாரியார்)

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கலிங்கம் மகாலிங்கம் அவர்கள் வெள்ளிக் கிழமை (20.02.2004) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் - நாகம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - சிவபாக்கியம் மற்றும் நாகம்மாவின் அன்பு மருமகனும் இராஜலட்சுமியின் அன்புக் கணவரும் குமாரலிங்கத்தின் (லண்டன்) அன்புச் சகோதரனும் சிவசங்கர் (லண்டன்), அனுசியா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகரஜனி (லண்டன்), மணிவண்ணன் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் திவ்வியா, ஷாகிர்த்யன் ஆகியோரின் அன்புப் பேரனும் சரோஜினிதேவி (லண்டன்), விஜயலட்சுமி, யோகலட்சுமி, செல்வரத்தினம் (ஜேர்மனி), ஜெயலட்சுமி, உதயலட்சுமி (ஜேர்மனி), செல்வதாஸ் ஆகியோரின் மைத்துனரும் மகாலட்சுமியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (23.02.2004) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அரசடி வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு.*
*T.P.: 0777-112431* (28785) (40-17-12-32)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரன்.

### இராமசாமி பரராஜசிங்கம்
**(சிங்கம் புடைவையக உரிமையாளர், K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)**

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி பரராஜசிங்கம் 18.02.2004 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராமசாமி - தெய்வானைப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரனும் செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் குணபாக்கியலட்சுமியின் (குகா) அன்புக் கணவரும் நவமணி, குமாரசிங்கம் (கொழும்பு), குலசிங்கம் (U.K.), பூலோகசிங்கம் (பரிஸ்), துரைசிங்கம் (கொழும்பு), பூபாலசிங்கம் (U.K.), சிவராஜசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயலட்சுமி (கனடா), இராஜலட்சுமி (கொழும்பு), குகராஜசிங்கம் (U.K.), ரவிராஜசிங்கம் (U.K.), காலஞ்சென்ற ஜெவிராஜசிங்கம், தர்ஜலட்சுமி (மாத்தளை), விஜிதா (கொழும்பு), குலராஜசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகுணதாசன் (கனடா), சுதாகரன் (கனடா), பாலஜிதா (கவிதா,கொழும்பு), நிரோஜன் (குவைத்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தனலட்சுமி, கனகலட்சுமி (மலேசியா), இராமகிருஷ்ணன் (மலேசியா), விவேகானந்தா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுலக்சி, ஜொயினா, பிரிவிஷா, தம்பி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*170, அரசடி வீதி,*
*கந்தர்மடம்.*
*T.P.: 021 222 6768* (28789)(40-11-12)

தகவல்:
திருமதி கு.பரராஜசிங்கம் (குகா)
(மனைவி).

# அனுருத்தவுக்கு இம்முறை தேர்தலில் 'சீட்' இல்லை

கொழும்பு,பெப்.22

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு இம்முறை தேர்தலில் சந்தர்ப்பம் அளிப்பதில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முடிவு செய்துள்ளது.

கடந்த தேர்தலில் கண்டியில் அனுருத்த போட்டியிட்டு வெற்றி பெற்றார். தேர்தல் முடிவுகள் வெளிவந்த சமயம் உடத்தலவின்னவில் 10 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அனுருத்த மீது வழக்குத் தொடரப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் அனுருத்தவை கண்டியில் நிறுத்தாமல் வேறு ஒரு இடத்தில் நிறுத்த கட்சி முடிவு செய்தது. இதற்கு எதிர்ப்புக் கிளம்பியதையடுத்து அவரைத் தேசியப்பட்டியலில் இடம்பெறச்செய்வதென முடிவு செய்யப்பட்டது.

அனுருத்தவை நியமித்து கட்சியின் செல்வாக்குக்கு பாதிப்பை ஏற்படுத்த வேண்டாம்எனக் கட்சிப் பிரமுகர்கள் கோரினர். இதையடுத்து அனுருத்தவுக்கு நியமனப்பட்டியலிலும் இடம் வழங்குவதில்லை என முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-3)

# வன்னி, மட்டு. மாவட்டங்களில் மட்டும் போட்டியிட புளொட் முடிவு!

## ஈ.பி.டி.பி. கூட்டில் இணையவில்லை

மட்டக்களப்பு,பெப்.22

எதிர்வரும் தேர்தலில் புளொட் அமைப்பு வன்னி, மட்டக்களப்பு ஆகிய இரு மாவட்டங்களில் மட்டும் போட்டியிடுவது என்று முடிவுசெய்துள்ளது.

கொழும்பில் நேற்றுக் கூடிய கட்சித் தலைமைப் பீடம் தேர்தலில் போட்டியிடுவது குறித்து விரிவாக ஆராய்ந்தது.

அதன்பின் வன்னியில் கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன் தலைமையிலும் மட்டக்களப்பில் ரதன் தலைமையிலும் போட்டியிடுவது என்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

ஈபிடிபி - புளொட் - ஈபி.ஆர்.எல்எவ (வரதர் அணி) ஆகியன இணைந்து மாற்றுத் தமிழ்க் கூட்டு ஒன்றை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இறுதியில் அக்கூட்டில் இணையாது தனித்துப் போட்டியிட புளொட் முடிவு செய்துள்ளது. (ம-3-21)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் பொருட்டு கொழும்பில் உளள நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் எதிர்வரும் புதன்கிழமை, 25ஆம் திகதி கிளிநொச்சிக்குச் செல்கிறார்.

அங்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்சசெல்வனைச் சந்தித்து, வாஷிங்ரனில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் ஆராயப்பட்ட விடயங்கள், முடிவுகள் குறித்துக் கலந்துரையாடுவார் என்று நோர்வேத தூதரக வட்டாரங்களில் இருந்து அறிய வந்தது. (அ)

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளின் பிரதிநிதி கரிகாலனைச் சந்தித்துப் பேசியபோது இந்த விடயம் பற்றியும் முக்கியமாக ஆராயப் பட்டது. பின்னர் தேர்தலில் விருப்பு வாக்குகளைக் கோருவது என்று முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவுக்கு தமிழர் விடுதலைக கூட்டணி உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் எதிர்ப்புத் தெரிவித்தார். எனினும் இறுதியில் விருப்பு வாக்குக கோருவது என்றே முடிவுசெய்யப்பட்டது.

அதேபோன்று யாழ்ப்பாணத்திலும நேற்று நடைபெற்ற தேர்தல் ஆலோசனைக் கூட்டத்தில் கூட்டமைப்பு சார்பில் விருப்பு வாக்குகளைக் கோருவது என்று முடிவுசெய்யப்பட்டது. ஏனைய மாவட்டங்களிலும் இதே நடைமுறையைப் பின்பற்றுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (ம-3)


கலாசார அலுவலர் பதவிக்கான
போட்டிப் பரீட்சை
பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்:- சனி, ஞாயிறு - 12மணி- 4மணி
நியூட்டன்- யாழ்நகர்
திகழ்
K.K.S வீதி, இணுவில். (28770)(38)


## ஈ.பி.டி.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிட இருக்கின்றது. என்று கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் எம்பியுமான குகேந்திரன் தெரிவித்தார். (ம-3)

## ஐ.ம. கூட்டமைப்பு யாழ்ப்பாணத்தில் போட்டியிடாது

கொழும்பு,பெப்.22

சு.கட்சி - ஜே.வி.பி. ஐக்கிய கூட்டமைப்பு யாழ். மாவட்டத்தில் போட்டியிடமாட்டாது என்று அக்கூட்டமைப்பின் செயலாளர் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் ஈ.பி.டி.பிக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் தமது கூட்டமைப்பு அங்கு போட்டியிடவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

ஆனால், வடக்கு-கிழக்கில் ஏனைய மாவட்டங்களில் தமது கூட்டமைப்புப் போட்டியிடும் என்றும் அவர் மேலும் கூறினார். (ம-3)

## பேடன் பவல் தினம்

யாழ்ப்பாணம்,பெப்.22

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை காலை 8.45 மணிக்கு பேடன் பவல் தினம் கொண்டாடப்படவுள்ளது.

சாரணர் தலைவர் ந.பவன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட சாரண ஆணையாளர் சு.சிவபாதரத்தினம் கலந்தகொள்ளவுள்ளார். (ம-10)

## மண்டலப் பூர்த்தி விழா!

யாழ்ப்பாணம்,பெப்.22

கரணவாய் வடக்கு நவிண்டில் பூதவிநாயகர் ஆலய மண்டலப் பூர்த்தி விழா நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நடைபெறும்.

காலை 10 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று, மதியம் அன்ன தானமும் வழங்கப்படும். (ம-ரி)

## ஊழியரைச் சுட்டுவிட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளையர்கள் இராணுவச் சீருடைபோன்ற உடையில் இருந்தனர் என்றும் ஏ.கே. ரக துப்பாக்கிகளை வைத்திருந்தனர் என்றும் சம்பவத்தில காயமடைந்த சதீஸ்குமார் தெரிவித்தார்.

வழமைபோன்று காலையில் கடை உரிமையாளரின் வீட்டில் இருந்து நகைகளையும் பணத்தையும் கொண்ட பையை (பிளாஸ்ரிக் பாக்) எடுத்துக் கொண்டு கடையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

"உரிமையாளரின் வீட்டில் இருந்து புறப்பட்டு வந்து வீதியில் ஏறியவேளை, பின்னால் வந்த ஒருவர் 'ஸ்.....' என்று எழுப்பிய ஒலியைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். நான் எதிர்பாராத விதத்தில், தனது கையிலிருந்த துப்பாக்கியால் அந்த நபர் என்னை நோககிச் சுட்டார். சூடுபட்டுக் கீழே வீழ்ந்த என்னிடமிருந்து நகைப் பையைப் பலவந்தமாகப் பறித்த அந்த நபர் ஆயத்தமாக நின்ற மோட்டார் சைக்கிளில் ஏறித் தப்பிவிட்டார்" - என்றார் சதீஸ்குமார்.

"என்னைச் சுட்டவர் இராணுவச் சீருடையில் இருந்தார். கண்கள் மட்டும் தெரியக் கூடியதாக தலையை கறுப்புத் துணியால் மூடிக்கட்டியிருந்ததை நான் அவதானித்தேன். சம்பவம இடம்பெற்ற சில நிமிடங்களின் பின்னரே அப்பகுதியில் நடமாடிய பொது மக்கள் என்னருகே வந்தனர்" - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

சுமார் 50 லட்சம் ரூபாவுக்கு மேறபட்ட பெறுமதியுடைய நகைகள் தனனிடம் இருந்து கொள்ளையடிக்கப் பட்டுள்ளன என்றும் சதீஸ்குமார் தெரிவித்தார்.

சாவகச்சேரி சந்தையில் தேங்காய வாங்குவதற்காக சைக்கிளில் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த டிறிபேக கல்லூரி மாணவனான சத்தியசீலன் துவாரகனும் இச்சம்பவத்தில் காலில காயமடைந்தான்.

"நான் சாவகச்சேரிச் சந்தைக்குச சென்றுகொண்டிருந்த சமயம் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தை சைக்கிளை மெதுவாகச் செலுத்தியபடி அவதானித்தேன். இதைஅடுத்து என்பக்கம் பார்த்த கொள்ளையன் என்னை நோக்கி 'கெதியாப் போ' என்று சொல்லியபடி துப்பாக்கியால் சுட்டான். எனது தொடைப் பகுதியில் காயம் ஏற்பட்டது. அதையும் பொருட்படுத்தாமல் சைக்கிளைச் செலுத்திக்கொண்டு போய் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் தஞ்சமடைந்தேன்" - என்று கூறினார் துவாரகன்.

சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைக்காகப் பின்னர் யாழ. போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

சம்பவத்துக்கு முன்னதாக அப்பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் மறைந்து நின்றதைத் தாம் கண்டார்கள் என்று சிலர் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலீஸார் இந்தச் சம்பவம் தொடர்பாக தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். சம்பவத்தின் பின்னர் நேற்று சாவகச்சேரி நகரப் பகுதியில் பொலீஸ் மற்றும் இராணுவத்தினரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கொள்ளை தொடர்பாக யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களும் உஷார்ப் படுத்தப்பட்டுள்ளன என சாவகச்சேரிப் பொலீஸார் தெரிவித்தனர். அத்துடன் மோட்டார் சைக்கிள் பரிசோதனைகளையும் அவர்கள் தீவிரப்படுத்தியுள்ளனர். (ம-4-7-15-31-117)

## அம்பாறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னந்தன், ச.இராசநாயகம், சி.சுந்தரலிங்கம், ச.தினகரன் பிள்ளை, கோ. வில்லியம், திருமதி ச.யோகாம்பிகை, வே.கல்யாணசுந்தரம், இ.சிவகுமார். (ம-3-21)

# தேர்தலில் இருந்து சங்கரியை ஒதுங்குமாறு கோரிக்கை

## கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம் கருத்து

யாழ்ப்பாணம்,பெப்.22

எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்களின் ஒற்றுமையைக் கெடுக்காது விலகி நிற்குமாறு தமிழர் விடுதலைக கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் க.சூரியகுமாரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று இரவு 9.30 மணியளவில் ஆனந்தசங்கரியை நேரில் சந்தித்து கலந்துரையாடிய பின்னர் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழர் போராட்ட வரலாற்றில் இதுவரை 18 ஆயிரம் வீரர்களும் 82 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்களும் உயிர்த்தியாகம் செய்து பெரும் அர்ப்பணிப்பின் பின் தமிழர் தேசியம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. வரலாற்று முக்கியத்துவத்தை தமிழர்தரப்பு ஏற்படுத்தியிருக்கும் இவ்வேளையில், எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு ஒரு கொள்கையில் ஒருமித்து நின்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகத் தமது அரசியல் அபிலாஷைகளை சர்வதேச சமூகத்தின முன்னால் நிலைநிறுத்த முனைந்து நிற்கின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சிங்கள பேரினவாத சக்திகளுக்கும், துணை போகும் துரோக சக்திகளின் சதி நோக்கங்களுக்கும் தாங்கள் பலியாகாது தமிழினத்தையும் பலியாக்காது இருக்க வேண்டும்.

தமிழரின் ஒற்றுமையைக் கெடுக்காது எதிர்வரும் தேர்தலில் ஒதுங்கித் தாஙகள் விட்டுக்கொடுக்க வேண்டும் என தமிழினம் சார்பாகவும், கடற்றொழிலாளர்கள் சார்பாகவும் வேண்டி நிற்கிறோம்.

இக்கோரிக்கையை ஏற்று செயற்படுவதன்மூலம் தங்களது அரசியல் தார்மீகப் பொறுப்பை வெளிக்காட்டி நிற்பீர்கள் என்பதே எமது நம்பிக்கையாகும். - என உள்ளது. (ம-3)

## ஆனந்தசங்கரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சையாகப் போட்டியிடுவதற்கு ஆனந்தசங்கரி தீர்மானித்திருக்கிறார் என்று கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. யாழ். மாநகர சபையின் முன்னாள் மேயர் செல்லன் கந்தையன், கூட்டணி முக்கியஸ்தர்களான ச.முத்துலிங்கம், செ.விஜயரட்ணம், அரவிந்தன், செ.முகுந்தன் உள்ளிட்டோர் இந்தச் சுயேச்சைக் குழுவில் இடம்பெற்றிருக்கிறார்கள் என்றும் தெரியவந்தது.

வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும் பணியில் ஆனந்தசங்கரி நேற்றுத் தமது அலுவலகத்தில் தனது ஆதரவாளர்கள் சகிதம் ஈடுபட்டார் என்று தெரியவந்தது.

எனினும் மேற்படி சுயேச்சைக்குழு எந்தச் சின்னத்தில் போட்டியிடப் போகிறது. என்ற விவரம் தெரியவரவில்லை.

### சங்கரி கருத்து

இதேவேளை -

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியிடம் எதிர்வரும் தேர்தல் குறித்த தங்களின் நிலைப்பாடு என்ன என்று உதயன் செய்தியாளர் கேட்டதற்கு -

எமது கட்சியின் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் கட்சியின் தலைவராகிய எனக்கு இருக்கும் பங்கினை செயலாளர் நாயகமும் ஏனையோரும் மதித்து நடக்க வேண்டும் என்று நீதிமன்ற உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், இதுவரை செயலாளரோ வேறு உறுப்பினர்களோ அது குறித்து என்னிடம் எதுவும் பேசவில்லை.

தமிழ்க் கூட்டமைப்பில் எனக்கும் எனது ஆதரவாளர்களுக்கும் இடம் ஒதுக்கப்படுகிறதா என்பதை அறிய பொறுத்துப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இடம் ஒதுக்கப்படவில்லை என்றால் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து கட்சி ஆதரவாளர்களுடன் ஆலோசித்துத் தீர்மானிப்பேன் - என்று கூறினார்.

உங்களுக்கு கூட்டமைப்பில் இடம் ஒதுக்கப்படவில்லையென்றால் சுயேச்சையாகப் போட்டியிடுவீர்களா? என்று கேட்டதற்கு -

இப்போதைக்கு இதுகுறித்து எதுவும் கூறவிரும்பவில்லை. ஆனால், கடந்த தேர்தலில் எனக்கு 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். எனவே, அந்த மக்களை நான் ஏமாற்றமுடியாது. ஒரு சிலர் தான்தோன்றித் தனமான செயற்பாடுகளினால் எமது இனத்தை அவர்களிடம் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு நான் சும்மா பார்த்துக் கொண்டிருக்கமுடியாது - என்றார் ஆனந்தசங்கரி. (ஐ-4-8)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர் ஒருவரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்க் கூட்டமைப்பின் வேட்புமனுக்களும் நாளை தாக்கல் செய்யப்பட இருக்கின்றன.

போட்டியிடும் வேட்பாளர்களுக்கும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று இடம்பெற்றது. அச்சந்திப்பில் உலக வேட்பாளர்களும் வேட்புமனுவில் கைச்சாத்திட்டனர்.

இச்சந்திப்பில் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ், அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், சிரேஷ்ட உறுப்பினர் கரிகாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-3-21-14-150)

## மரண அறிவித்தல்

### சின்னையா சிவஞானசுந்தரம்

**(ஓய்வு பெற்ற கிராம அலுவலர், இணுவில்)**

புலோலி கிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவஞானசுந்தரம் நேற்று (21.02.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இணுவிலில் நடைபெற்று, இன்று (22.02.2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11 மணியளவில் பூதவுடல் காரைக்கால் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. திருமதி க.கைலாயநாதன். (மலர்-பெறாமகள்)
கிருபா கடையடி,
இணுவில் மேற்கு. (C-33409) (38-17-12-32)







இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சூரியகாந்தி

உதயன்

ஞாயிறு சிறப்பம்சம்



# தேர்தலில் கூட்டமைப்புக்கு கதாநாயகன் பாத்திரம்!

டன்ஸ்ரன் லூயிஸ்

**பொ**றுத்திருந்து பார்க்கும் கொள்கை **(Wait and see policy)** தான் மிகச் சரியான தெரிவு என இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் தீர்மானித்து விட்டன. எவ்வளவு விரைவில் சமாதானமோ அவ்வளவு விரைவில் நிதியுதவி கிடைக்கும் என்ற அறிவிப்பை அண்மையில் நடந்துமுடிந்த வாஷிங்ரன் மாநாட்டில் சர்வதேசம் அறிவித்துவிட்டது.

பொருளாதார விரிவாக்கத் துறைகளில் ஒரு ஸ்தம்பிப்பு தெரியத்தொடங்கியுள்ளது. ஜே.வி.பி. – சுதந்திரக் கட்சி கூட்டு ஏற்பட்டதும், தொடர்ந்து திடீர்த்தேர்தல் அறிவிப்பு வெளியானதும் யூரோ, டொலர் ஆகிய நாணயங்களுக்கு எதிரான ரூபாயின் பெறுமதியில் கணிசமான வீழ்ச்சியை ஏற்படுத்திவிட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் கைத்தொழில்துறை ஏற்றுமதி இறக்குமதித்துறை, தொழில்வாய்ப்பு புருவாக்கங்கள் என்பனவற்றின் வளர்ச்சி வீதம் மந்தமடையத் தொடங்கிவிட்டது. தனியார் துறையினரின் முதலீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தேர்தல் செலவுகளும், அரசியல் பரபரப்புக்களும் ஒருபுறமிருக்க, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள், அவர்கள் மூலமான அமைச்சர்கள் ஆகியோர் அடிக்கடி பதவி இழக்கச் செய்யப்படுவதால் சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்களைச் சேர்ந்த நிறைவேற்று அதிகாரிகளாக உள்ள அரச உத்தியோகத்தர்கள் தீர்மானகரமான சூழ்நிலைகளின்றி குழப்பமடைவதன் காரணமாக அபிவிருத்திப் பணிகள் சார்ந்த துணிகரமான முடிவுகள் பாதிக்கப்படும் வாய்ப்புக்களும் தோன்றிவருகின்றன.

தேர்தல் கடமைகளை நோக்கித் திசை திருப்பப்பட்டு தேர்தல் பணிகளையாற்ற வேண்டிய நிலையில் மாவட்ட செயலகங்கள் உள்ளதனால் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனர்நிர்மாணம் சார்ந்த கடமையொழுங்குகளில் குழப்பங்கள், பின்னடைவுகள் உருவாகுவது இயல்பே. அத்துடன், எல்லாத் திணைக்களங்களிலும் அதிகாரிகள், ஊழியர்கள் சுடுசுவையுடன் தேர்தல் நாடகத்தின் பாத்திரப் படைப்புக்களை அலசி ஆராய்ந்து நேரம் போக்குவதையும் காணமுடிகிறது.

பாடசாலை மட்டக்கல்வியில் இத்தேர்தல் ஒரு சிறு பின்னடைவை ஏற்படுத்தும். நடக்கவிருந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சை (பல்கலைக்கழக நுழைவு அனுமதிப் பரீட்சை) ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன் துண்டுதுண்டாகப் பிரிக்கப்பட்ட பாடசாலை வேலைநாள் அட்டவணையும் சீரான கல்விக்கு உகப்பானது அல்ல. பொருளாதாரம், அபிவிருத்தி, நிர்வாகம் சார்ந்த விடயங்களில் தேக்கநிலைகளையும் சில பின்னடைவுகளையும் இந்த அவசர தேர்தல் ஏற்படுத்தியுள்ளது. எனினும், இத்தேக்க நிலைகளையும் பின்னடைவுகளையும் நிவர்த்தித்து முன்னேறும் பொருளாதார ஸ்திரப்பாட்டை ஏற்படுத்தக்கூடிய அரசியல் ஸ்திரப்பாட்டுக்கு இத்தேர்தல் வழிவகுக்குமா? என்ற ஒரு கேள்வி எழுகிறது.

சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரை – குறிப்பாக அமெரிக்கா – ஜப்பான் – ஐரோப்பிய ஒன்றியம் என்ற முக்கூட்டும் – உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற ஸ்தாபனங்களும் தமது உதவி வழங்கும் வாக்குறுதிகளை மதித்து பிரதமர் – ஜனாதிபதி ஆகியோரின் அரசியல் கூட்டின் அவசியத்தை வலியுறுத்தின. இந்தியப் பிரதமரும், இந்திய வெளியுறவுத்துறை சார்ந்தோரும் நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்த இது வல்ல தருணம் என்று ஜனாதிபதியை எச்சரித்திருந்ததாகவும் முன்புசெய்திகள் வெளியாகின.

எனினும், ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜே.வி.பி. என்ற குதிரையை நம்பி தேர்தல் ஆற்றில் குதித்து விட்டார். கடந்த தேர்தல்களைக் காட்டிலும் இம்முறை ஜே.வி.பி. முக்கிய சக்தியாகத் திகழப்போகிறது என்பது உண்மைதான்! ஆனால், ஜனாதிபதியின் கட்சியைச் சேர்ந்த பல மூத்த உறுப்பினர்கள் தேர்தலுக்கான முதலீடாக முன்வைக்கும் கோஷம் 'போர்நிறுத்தம் புலிகளுடன் தொடரும், ஆட்சியமைக்கப்பட்டதும் புலிகளுடன் சமரசப்பேச்சுக்கள் நடக்கும்; என்பனவாகும். போர் அற்ற சூழலை ரணில் உருவாக்கியிருந்தாலும் சமாதான நடவடிக்கைகளில் ஏற்பட்ட முட்டுக் கட்டை நிலைவரங்களும், மருத்துவ சேவை, சுகாதாரத்துறை ஊழியர்கள், புகையிரதசேவை ஊழியர்கள் போன்றோரின் தொழிற்சங்க நடவடிக்கைகள் (வேலை நிறுத்தங்கள்) என்பன காரணமாக ரணில் அரசு மீது தெற்கில் ஒரு அதிருப்தி ஏற்பட்டுள்ளதை மறுக்கமுடியாது. மேலும் எதிர்பார்த்தளவு உயர்வாக அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளமும் வழங்கப்படவில்லை. சமாதானத்தின் பெயரால் போனதடவை ரணிலுக்கு வீழ்ந்த வாக்குகளை கவர ஜனாதிபதி பொருத்தமான திட்டங்களைத் தீட்டுகிறார்.

அந்தவகையில், மீண்டும் தொடங்கும் சமாதானப் பேச்சுக்கள் என்றும், புலிகள் ஆத்திரப்படும்படி தானும் தனது சகபாடிகளும் நடந்துகொள்ளப்போவதில்லை என்றும் கூறும் ஜனாதிபதி, புலிகளை – அவர்கள் தொடர்ந்து பொறுமையாகக் கடைப்பிடிக்கும் போர்நிறுத்தத்துக்காக – பாராட்டவும் தவறவில்லை. கடந்த இரு ஆண்டுகளில் புலிகள் மேலும் பலப்பட்டுள்ளனர். என்றும் சிலவேளைகளில் அச்சம் தெரிவிக்கின்றார்.

போருக்கான வெறுப்பு வாக்குகளைக் கவரும் வீச்சுடன் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் ஈடுபாடு காட்டுகின்ற அதே வேளை, ஜே.வி.பி. போருக்கான விருப்பை சிங்கள மக்கள் மத்தியில் தூண்டி, தீவிர சிங்களவர்களின் வாக்குகளைக் கவரத் துடிக்கிறது. அத்துடிப்பு எல்லைகடந்து விடுதலைப் புலிகளையும் அதன் தலைமையையும் வசைபாடி வாக்கு வங்கியை நிரப்பவும் அக்கட்சி முனைகிறது. உலக வங்கி, ஆசியஅபிவிருத்தி வங்கி என்பவற்றின் வழிநடத்துகையுடன் கூடிய தற்போதைய இலங்கையின் கல்விக் கொள்கை தொடர்பாகவும் பல மாற்றங்கள் தேவையென்கிறது. ஜே.வி.பி. காணி விவசாயக் கொள்கைகளிலும் மாற்றங்கள் தேவையென்கிறது.

ஜே.வி.பியினர் (முக்கிய அங்கத்தவர்கள்) அண்மைக்காலமாகக் கூறிவருகின்ற கருத்துக்கள் மூலம், இலங்கையில் போர்நிறுத்தம் தற்போது நிலவுவதற்கு காரணமான ஆவணமான புரிந்துணர்வு உடன்படிக்கை காலாவதியாகி விட்டது என்றும் அது தொடர்பில் இலங்கையின்



ஐக்கிய, இறைமை, ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் ஓர் புதிய உடன்பாடு எட்டப்படும் என்றும் வெளிப்படுத்தியுள்ளனர். மேலும் இம்முறை புலிகளை நாடாளுமன்றத்துக்கான தமது பிரதிநிதிகளாக தமிழர்கள் அனுப்பப்போகிறார்கள் என்று கதையடித்து தமக்கான வாக்கு வேட்டையிலும் ஜே.வி.பி. ஈடுபட்டுள்ளது.

இங்கே வாக்குவேட்டைக்கான யுக்திகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் முரண்பட்டாலும் விளைவாக சமாதானத்துக்கு விழும் வாக்குகளையும் போருக்கு விழும் வாக்குகளையும் ஒன்றாகப் பயன்படுத்தி ஆட்சிபீடமேறுவதே ஜே.வி.பி. – ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டின் இலக்கு ஆகும்.

அவ்வாறானால் தனியாக ஜே.வி.பி. – ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டு மட்டும் இம்முறை நாடாளுமன்ற அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைக்கும் சூழ்நிலைக்கான வாய்ப்புக்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கான வெற்றிவாய்ப்புக்களுடன் ஒப்பிடும்போது மிகப்பிரகாசமாக உள்ளன என்று கூறிவிடமுடியாது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி என்பன ரணில் பக்கம் சாய்ந்தே உள்ளனர். ஹக்கீம் – ரணில் இரகசிய உடன்பாடும் சாத்தியமாகி உள்ளதாக கொழும்பில் பேசப்படுகிறது. பள்ளிவாசல்களின் தர்மகர்த்தாக்கள், முஸ்லிம் இளைஞர்கள், தென்கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் என பல தரப்பாரும் கொழும்பில் கூடி ஹக்கீம் அணி, பேரியல் அஷ்ரப்பின் நுவா (NUA), அதாவுல்லா அணி ஆகியவற்றை ஹக்கீமின் கீழ் கொண்டுவருவதன் மூலம் முஸ்லிம் காங்கிரஸை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்து முஸ்லிம்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் வாய்ப்புக்கள் பற்றி முஸ்லிம் தரப்பார் அனைவரும் கொழும்பில் இரு ஹோட்டல்களில் கூடி ஆராய்ந்து ஓர் இணக்கத்துக்கு வந்துள்ளனர். பேரியல் அஷ்ரப் மட்டுமே ஹக்கீமின் தலைமையின் கீழ் செயற்பட மறுத்துள்ளார்.

– இவ்வாறு இணக்கம் ஏற்பட்டாலும் கூட முஸ்லிம் குழுக்கள் மூன்றில் ஹக்கீம் அணியைத் தவிர மிகுதி இரண்டும் ஸ்ரீ லங்கா சு.க. – ஜே.வி.பி. கூட்டை நேரடியாகவும், மறைமுகமாகவும் ஆதரிக்கின்றன. பேரியல் அணி நேரடியாகவும் அதாவுல்லா அணி மறைமுகமாகவும் ஆதரிக்கின்றன. இவர்கள் (அதாவுல்லா அணி) வடக்கும் கிழக்கும் இணைக்கப்படக்கூடாது என்று வாதாடி கிழக்கில் முஸ்லிம் அலகு ஒன்று தனியாக அமைக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

ரணிலுடன் ஆட்சியமைத்தல் தொடர்பாக பகிரங்கமற்ற வகையில் உடன்பாடு கண்டு ஐக்கிய தேசியூ முன்னணிக்கு ஆதரவாக தேர்தலில் நிற்கின்ற ஹக்கீம், புலிகளுடனான பேச்சுகளில் முஸ்லிம்களுக்கான தனித்தரப்பு பிரதிநிதித்துவம் தமக்கு வழங்கப்படவேண்டும் என்று நிச்சயம் கோருவார்.

எந்தவகையில் பார்த்தாலும் – அதாவது ஜே.வி.பி. – ஸ்ரீலங்கா சு.க. – பேரியல் குழு ஆகியன மூன்றும் சேர்ந்து ஆட்சியமைத்தாலென்ன, ஐ.தே.முன்னணி – ஹக்கீம் குழு மற்றும் மலையகக் கட்சிகள் என்பன இணைந்து ஆட்சியமைத்தாலென்ன, ஆரம்பிக்கப்படக்கூடிய பேச்சுக்களில் முஸ்லிம் தரப்பின் 'பிடிவாதத்தன்மை' தமிழர்களின் உரிமைப் பிரச்சினை தொடர்பான தீர்வுவடிவத்துக்கு குந்தகமாகவே அமையும். ஜே.வி.பி. – ஸ்ரீலங்கா சு.க. – பேரியல் கூட்டு ஆட்சியமைக்கும் நிலையில் இனப்பிரச்சினைக்கான தீர்வுவிவகாரத்தில் ஜே.வி.பி., முஸ்லிம்தரப்பு ஆகிய இரு தடைக்கற்கள் உள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக ரணிலுக்குள்ள அமெரிக்க – ஐரோப்பிய – ஜப்பானிய பின்புலமும் அவர் ஏற்படுத்திய அல்லது ஏற்படுத்த நினைத்திருக்கும் 'சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல்' **(International Security Net work)** என்பன ஒரு எல்லைக்கு அப்பால் அதிகரித்த தன்மையைக் காட்டும் போது, அது புலிகள் மீது நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தும் நிலைமைக்கு இட்டுச் செல்லும். அவ்வாறே திருமதி சந்திரிகா குமாரதுங்கவும் ஜே.வி.பி. தலைவர்களும் ஆட்சியமைத்தால் முற்றிலும் இந்தியப் பின்புலம் மற்றும் இந்தியாவின் பாதுகாப்பு உத்தரவாதங்கள் என்பவற்றைத் தளமாக வைத்துக் கொண்டு – (இந்தியாவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் போன்றவற்றை செய்வதன் மூலமாக) – புலிகளுடனான பேச்சுக்களை நகர்த்த முயல்வர். இதுவும் புலிகள் மீதான பல நிர்ப்பந்தங்களை விதிக்க ஏதுவாகும்.

இவ்வாறான ஒரு சூழ்நிலைத் தீர்ப்பியத்தில் இலங்கைத் தமிழர்களின் கட்சிகள், அரசியல் கதாபாத்திரங்கள் இரு வேறுபட்ட அணிவகுப்பைச் செய்திருக்கின்றன. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் மூதன்மைப் பங்களிப்போடு புலிகளின் அரசியலுக்கும் அவர்களின் வழி நடத்தலுக்கும் 'எதிருமீ புதிருமான' ஒரு தேர்தல் அணி இந்த அணி ஈ.பி.டி.பி. தனித்து போட்டியிடுவதாகவோ அன்றேல் ஈ.பி.ஆர்.எல்.எவ்.(வரதர் அணி), புளொட், சங்கர் ராஜியின் ஈரோஸ் என்ற பெயரிலான குழு ஆகியனவற்றின் கூட்டாகவோ அமையலாம். டக்ளஸ் தேவானந்தாவின் 'அரசியல் பாணி' மற்றும் அவர் அமைச்சராக இருந்தபோது அவரது கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த உள்ளூராட்சி அமைப்புக்கள் ஊடாகச் செய்த நகரங்கள், கிராமங்களின் வீதியிடல், வீதி திருத்தவேலைகள், புலிகள் மீதான அவர்களது விமர்சனங்கள் போன்றனதான் பெரும்பாலும் அவர்களது தேர்தல் முதலீடாக அமையலாம். டக்ளஸ் கட்சிக்கு கிடைக்கக் கூடிய எந்த அளவிலான தேர்தல் வெற்றியும் ஜே.வி.பி. – ஸ்ரீ.லங்கா சு.க. கூட்டிற்கே ஆட்சியமைக்க உதவும். அப்படி ஒரு ஆட்சியமைந்தால் அவருக்குக் கிடைக்கக் கூடிய அமைச்சர் பதவியோ அவரது

(உள் பக்கம் பார்க்க)

# வில்லியம் புஷ்ஷின் எதிர்காலம் கெரி, அல்கெய்டா கைகளில்!

ஆடிப்போயிருக்கிறார் புஷ்.

நவம்பரில் நடக்க உள்ள தேர்தலில் தனக்குப் பிரதான போட்டியாளராக லாம் என்று கருதப்படுபவரான ஜோண் கெரி உட்கட்சித் தேர்தலில் பெற்று வரும் வெற்றிகள் வயிற்றில் புளியைக் கரைக்க, ஈராக்கில் வெடிக்கும் குண்டுகளால் தனது பதவிக் கதிரை சுக்கு நூறாகி விடுமோ என்பதில் ஆடித்தான் போயிருக்கிறார் புஷ்.

ஜோண் கெரியின் வெற்றிக்கு அமெரிக்கப் பத்திரிகைகளும் மின்னியல் ஊடகங்களும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. புஷ்ஷுக்கு மிகச் சரியான போட்டியாளர் கெரிதான் என்பது அவற்றின் கணிப்பு.


2001 ஜனாதிபதித் தேர்தலில் புஷ்ஷை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனநாயகக் கட்சி வேட்பாளரும் அப்போதைய உப ஜனாதிபதியுமான அல்கோர் அப்போது கவர்ச்சிகரமான வேட்பாளராக இல்லை. பில் கிளின்ரனின் பாலியல் லீலைகளால் வேறு, ஜனநாயகக் கட்சி ஆட்டம் கண்டிருந்த காலம் அது.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்ட புஷ் புகுந்து விளையாடினார். அமெரிக்க ஜனநாயகத்தையே கேலிக்குள்ளாக்கி, இரண்டு தடவைகள் வாக்குகள் எண்ணப்பட்ட பின்னர் வந்த தேர்தல் முடிவு புஷ்ஷுக்குச் சாதகமானது.


எப்போதுமே அமெரிக்கப் பிரஜைகள் விரும்பும், நாம் அமெரிக்கர்கள்; உலகில் முதன்மையானவர்கள் என்ற எண்ணத்துக்குத் தீனி போடும் ஒரு வீர புருஷராகவே புஷ்ஷின் முதல் பதவிக்காலம் முடிவு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. தந்தை 1990 இல் வளைகுடா யுத்தத்தை நடத்திய வழியில் தனயன் ஆப்கானிஸ்தான், ஈராக் என இரு போர்களை நடத்தினார். உலகப் பொலீஸின் ஒரே இன்ஸ்பெக்டர் ஜெனரலாக (பொலீஸ் மா அதிபர்) அவர் ஆடிய ஆட்டங்களுக்கெல்லாம் இப்போது முடிவு வந்தாயிற்று போன்று தோன்ற ஆரம்பித்துவிட்டது.



ஈராக்கில் உள்ள அமெரிக்கப் படையினர் கடும் மன உளைச்சல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.



புஷ்



கெரி

இப்போதைய பொலீஸ் ஜெனரல் முன்னாள் குற்றவாளி என்று, அமெரிக்க மக்கள் முன் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார் ஜோண் கெரி. வியட்நாம் போரின் போது அமெரிக்க தேசியப் பாதுகாப்புப் படையில் (National Gards) பணியாற்றிய புஷ் அதிலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் நழுவிவிட்டார் என்று அவர் போட்ட குண்டின் திரி அமெரிக்காவில் நன்றாகவே பற்றி எரிய ஆரம்பித்து விட்டது. வியட்நாம் போருக்குத் தன்னை அனுப்பப் போகின்றார்கள் என்று தெரிந்ததும் முறைப்படி அறிவிக்காமலேயே புஷ் படையிலிருந்து ஓடிவிட்டார். டெக்ஸாஸ் மாநில காங்கிரஸ் உறுப்பினராக இருந்த அவரது தந்தை ஜோர்ஜ் புஷ்ஷின் அரசியல் பலமே வில்லியம் புஷ் தப்பியோட வழியேற்படுத்திக் கொடுத்தது என்பது கெரியின் குற்றச்சாட்டு. தேசிய பாதுகாப்புச் சேவையின் வான்படையில் அப்போது பணியாற்றிக் கொண்டிருந்தார் புஷ்.

போருக்குப் பயந்து தப்பியோட முயலவில்லை என்று நிரூபிப்பதற்கு, தேசியப் படையில் புஷ் பணியாற்றிய காலப் பகுதி தொடர்பான ஆவணங்களை வெள்ளை மாளிகை வெளியிடுமளவுக்கு நிலைமை மோசமாகி விட்டது.

புஷ் படையை விட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் ஓடினார் என்று கூறப்படும் அதே காலப்பகுதியில் ஜோண் கெரியும் அமெரிக்கப் படையில் பணியாற்றியவர்; வியட்நாம் போரிலும் ஈடுபட்டவர். அதற்கான விருதுகளும் பெற்றவர் என்பதால் அவரது கருத்து அமெரிக்க மக்களிடம் ஆழமாகவே செல்வாக்குச் செலுத்துகின்றது. புஷ் அப்படிச் செய்திருக்கக் கூடும் என்பதைப் பெரும்பான்மையான அமெரிக்கர்கள் நிராகரிப்பதற்குத் தயாராக இல்லை.

கெரி செல்லும் இடங்களில் எல்லாம் அவருக்குக் கிடைக்கும் வரவேற்பு இதனை உணர்த்துகின்றது. ஜோர்ஜ் வில்லியம் புஷ்ஷுக்கு மிகச் சரியான போட்டியாளர் கெரிதான் என்று அமெரிக்க ஊடகங்களும் மக்களும் நம்ப ஆரம்பித்துவிட்டார்கள். கெரி வீசிய புஷ்ஷை இலக்காகக் கொண்ட குண்டு நன்றாகவே வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டது.

படையில் இருந்து புஷ் சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறினார் என்பது தவிர, ஈராக் மீது அவர் தொடுத்த போர் குறித்தும் கெரி கேள்விகளைத் தொடுத்து வருகிறார்? அவரது கேள்விகளுக்கு முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களைத் தெரிவித்துவருகிறார் புஷ். ஈராக் பேரழிவு ஆயுதங்களைக் கொண்டிருக்கிறது என்று கூறித்தான் அதன் மீது அமெரிக்கா போர் தொடுத்தது. ஆனால், கெரியின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த புஷ் சதாம் பேரழிவு ஆயுதங்களைத் தயாரிக்கும் வலுவைக் கொண்டிருந்தார் என்பதனால்தான் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது என்று தெரிவித்திருக்கிறார். புஷ் குழம்பிப் போயிருக்கிறார்; அவரைக் குழப்பும் ஆயுதம் கெரியின் கையில் உண்டு என்பதையே இது தெளிவுபடுத்துகின்றது.

தனது பதவிக் கதிரையை மீண்டும் ஒரு தடவை தக்கவைத்துக்கொள்ள கெரிக்கு எதிரான வியூகங்களை வகுப்பதில் கவனஞ் செலுத்துவதா? ஈராக்கில் நாளாந்தம் இடம் பெறும் குண்டுவெடிப்புக்களால் எழும் எதிர்ப்பலையைச் சமாளிப்பதா? இப்போது புஷ்ஷை ஆட்டங்காண வைத்திருக்கும் பிரச்சினைகள் இவைதான்.

ஈராக்கில் ஆப்பிழுத்த குரங்கின் கதையாகி விட்டது புஷ்ஷின் நிலை. மாட்டிக்கொண்டு விழிப்பதைத் தவிர வேறுவழியில்லை. போர் முடிந்ததும் சில மாதங்களில் ஆப்கானிஸ்தான் போன்று தலையாட்டி அரசு ஒன்றை பக்தாத்தில் அமர்த்தி, ஈராக் நிர்வாகத்தை அதன் கையில் கொடுத்து தனது நலன்களைக் கவனித்துக் கொள்ளலாம் என்று தான் புஷ் நிர்வாகம் முதலில் கருதி இருந்தது. ஆனால், அது நடந்தபாடாக இல்லை.

மத அடிப்படைவாதங்களால் பிளவுபட்டுக் கிடக்கும் ஈராக்கிய சமூகங்களை ஒன்றிணைத்து அதிகாரத்தைக் அவற்றிடம் கையளிப்பது ஒன்றும் அவ்வளவு சுலபமான காரியம் இல்லை என்று இப்போது புரிகிறது வாஷிங்ரனுக்கு. சில மாதங்களில் முடிந்துவிடும் என்று நினைத்த காரியத்தை 8 மாதங்களாகியும் அதனால் சாதிக்கமுடியவில்லை. அடுத்த ஜூன் மாதத்தில் ஈராக் நிர்வாகத்தை ஈராக்கியரிடம் ஒப்படைக்க இப்போது அமெரிக்கா தீர்மானித்திருக்கிறது. ஆனால், அதுவும் சாத்தியப்படும்போன்று தோன்றவில்லை என்றே சொல்லப்படுகிறது. ஈராக் நிர்வாகத்தை – எண்ணெய் வளத்தைக் கருத்திற்கொண்டு – ஈராக்கியர்களிடம் ஒப்படைக்க அமெரிக்கா விரும்பவில்லை என்று பரவலாகச் சொல்லப்பட்டாலும் அதனால் ஈராக் நிர்வாகத்தை ஒப்படைக்க முடியவில்லை என்பதும் நிதர்சனமான உண்மை.

அங்கு தொடரும் தாக்குதல்களும் அவற்றின் இலக்குகளும் உறுதிப்படுத்துவது இதைத்தான். ஈராக்கில் பாதுகாப்பை முழுமையாக உறுதிப்படுத்தாமல் நிர்வாகத்தை ஈராக்கியர்களிடம் அமெரிக்கா ஒப்படைக்கப்போவதில்லை. ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கா மற்றும் அதன் கூட்டுப் படைகளின் இலக்குகள் மட்டுமே தற்கொலையாளிகளதும் கார்க் குண்டுத் தாக்குதல்களினதும் இலக்கல்ல. உள்ளூர் பொலீஸ்காரர்களும் புதிய ஈராக்கியப் படையினரும் கூட இப்போது இலக்குகள்தான். கடந்த வாரத்தில் நடந்த தாக்குதல்கள் இதை உணர்த்தின. உள்ளூர் காவல் வளாகம் ஒன்றுக்குள் பட்டப்பகலில் நுழைந்த ஆயுததாரிகள் அதனைத் தாக்கி அங்கிருந்த கைதிகளை மீட்டுச்சென்றுள்ளனர்.

அமெரிக்க மற்றும் கூட்டுப்படையினரின் இலக்குகளில் இருந்து தாக்குதல்களைப் பரவலாக்கும் அமெரிக்கர்களின் தந்திரோபாயம் பெருமளவு பயனைக் கொடுத்துள்ளது என்பதையே இந்தத் தாக்குதல்கள் உணர்த்துகின்றன. இதனால், இப்போது பெருமளவில் ஈராக்கியர்கள் உயிரிழப்புக்களைச் சந்திக்கிறார்கள்.

உயிரிழப்பவர் யாராக இருந்தாலும் தாக்குதல்களை நடத்துபவர்கள் யார்? அமெரிக்கப் படைகளை நிர்வகிப்பவர்கள் இப்போது மண்டையைப் பிய்த்துக்கொள்ளும் கேள்வி இது தான். முகம் தெரியா எதிரியை நோக்கிச் சுடும் ஏகாந்த வெளியை எதிர்நோக்கும் அமெரிக்கப் படையினர்வேறு அங்கு கடுமையான உளத்தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர். இதுபற்றி பென்ரகன் விசாரணை ஒன்றை நடத்தியிருக்கிறது. ஆனால், அந்த அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை. அங்கிருக்கும். படையினர் அனைவரையும் திருப்பி அழைத்து விட்டுப் புதிதாக ஒரு லட்சம் படையினரை ஈராக்குக்கு அனுப்புவதற்கும் பென்ரகன் யோசிக்கிறது.

சதாம் மறைவாக இருக்கும் வரை இந்தத் தாக்குதல்களின் சூத்திரதாரி அவர்தான் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவரும் அவருடன் சேர்ந்து தேடப்படுவோர் பட்டியலில் இருந்தவர்களில் அநேகர் இப்போது அமெரிக்கக் காவலில். ஆனால், தாக்குதல்களின் வேகம் இன்னும் இன்னும் அதிகரித்துச் செல்கின்றது. அப்படியானால் இப்போது தாக்குதல்களை வழிநடத்துபவர்கள் யார்?

இந்தத் தாக்குதல்களின் அடிமூளையாக ஜோர்தான் நாட்டைச்சேர்ந்த 38 வயதான தீவிரவாதி ஒருவரே இருக்கலாம் என்கிறது அமெரிக்கா. 2001 ஆம் ஆண்டு ஆப்கானில், அமெரிக்க விமானங்கள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் அபு முஸாப் அல் – ஷர்காரி என்ற அந்தத் தீவிரவாதி தனது ஒரு காலை இழந்துவிட்டார் என்று கூறுகிறார்கள் பென்ரகன் அதிகாரிகள். இவரது தலைக்கு ஒரு கோடி அமெரிக்க டொலர் விலையாக அறிவிக்கப்பட்டுள்ளது. பின்லேடனின் அல்கெய்டா அமைப்புடன் நெருங்கிய தொடர்புகளை அவர் பேணி வருவதாகவும் அமெரிக்க அதிகாரிகள் சொல்கிறார்கள். அத்தகைய பெரும் தீவிரவாத அமைப்பு ஒன்றின் ஆதரவு இன்றி ஈராக்கில் தாக்குதல்களை வழிநடத்துவதும் சாத்தியமற்றதே.

ஷியா மற்றும் சுனி இன முஸ்லிம்கள் மத்தியில் மோதல்களை உருவாக்கி ஈராக்கில் சிவில் யுத்தம் ஒன்றைத் தோற்றுவிக்கவும் தீவிரவாதிகள் முயல்கின்றனர் என்று கூறப்படுகின்றது. ஈராக் தாக்குதல்களின் அடிமூளை எனக் கருதப்படும் ஷர்காரியினால் எழுதப்பட்டதாக அமெரிக்கா கூறும் கடிதம் ஒன்றில் இருந்து இந்தச் சதித்திட்டம் அம்பலத்துக்கு வந்துள்ளது.

**- அர்ச்சனா.**

ஈராக்கில் இனிவரும் காலத்தை எதிர்வு கூறும் கடிதமாக இதைப் பார்க்கும் அமெரிக்கர்களுக்கு ஈராக் நிர்வாகக் கையளிப்பு திட்டமிட்டபடி நடக்கும் என்று நம்பிக்கையில்லை. ஈராக்கில் போதிய பாதுகாப்பை உறுதிப்படுத்தாமல் அங்கிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறுவதோ நிர்வாகத்தை ஈராக்கியர்களிடம் ஒப்படைப்பதோ சாத்தியமும் இல்லை.

ஜோண் கெரியையும் ஈராக்கில் நிர்வாகத்தைக் கையளிப்பதையும் வெற்றிகரமாகச் சமாளிப்பதிலேயே அதிபர் புஷ்ஷின் இரண்டாவது பதவிக் காலத்தின் எதிர்காலம் இருக்கிறது. அதனாலேயே நவம்பரில் நடக்க உள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக ஜூனில் ஆட்சிக் கையளிப்புக்கு புஷ் நிர்வாகம் திட்டமிட்டிருக்கிறது. ஆனால், அதனை அல்கெய்டாவும் அதனோடிணைந்த தீவிரவாதமுமே தீர்மானிக்கப்போகின்றன. அதன் மூலம் வாஷிங்ரனின எதிர்கால அரசியலைக்கூட அவைதான தீர்மானிக்கப் போகின்றன. ★



அமெரிக்கப் படையில் கெரி



தேசியப் பாதுகாப்புப் படையில் புஷ்

## தோற்ற வாதமும் துளிர்க்கும் வேதமும்

காதலிற்காய் கவிதையொன்று காட்டு என்றனர்
கல்லெடுத்த சாழுகளைக் காட்டி நின்றனர்
வாதமொன்று வந்துவிட்டால் விலக முடியுமா?
வல்லதமிழ் சொல்லெறிந்து வெல்ல வேண்டுமா?

இவைதனைக் கசக்கிப்பெண் முனையில் ஆற்றினான்
அழுக்கியின் கலங்களில் கருமை ஏற்றினான்
வேளையொன்று வந்ததென் வேட்கை பூண்கையில்.....
வீழ்ச்சியின்றிக் காதல்வரி விளையக் காண்கையில்.....

ஊனமுற்ற இனமதொன்று ஊன்றி எழுகுது!
ஊறிவிட்ட இரத்தம்வழி மானம் ஒழுகுது!
தானிருந்த தகுசிறப்பு தளிர்க்கக் கண்டது! - ஐயோ
தறிகெட்டார், "சபை" குழப்பக் கண்டு துவண்டது!

பூம்வரை படத்திலொரு புள்ளி வீழுமோ?
புதுமையுடனிங்குமொரு பொழுது புலருமோ.....
என்றுமய்யோ அவன்விரல்கள் எழுதிப் போகுது! - அட
ஏற்றானவன், "என்னால் காதல் எழுத முடியலை!"

- அனலையூர்ச் சேந்தன்.

## தருணத்தில் தம்குணம் காட்டுதல் தகுமோ?

பேச்சுவார்த்தையொன்று வந்ததினாற் பெரும்
பாதையுந் திறந்து கொண்டதனால்
ஆச்சி யப்புவென்று சொன்னவ ரெல்லோரும்
மம்மி டடியென்று சொல்லி வாறார்

காளையர் காற்சட்டையோடு வாறார் ~ நற்றைக்
காதினிற் தோட்டோடும் இங்கே வாறார்
வாயினிற் சிகரெட்டை ஊதிக்கொண்டு தன்
தாய் வீட்டை பார்த்திடத் தேடி வாறார்.

வெட்டுப்பாவாடையும் விதவித ரீசேட்டும்
ஒட்டிய ஜீன்சும் அணிந்து வரும்
தாயையும் பெண்ணையும் தெரியவில்லை தமிழ்ப்
பெண்ணா இவரென்றும் புரியவில்லை

வதிவிடம் பெற்றிட வயலற்றை முடித்தவர்
விவாக ரத்தினைப் பெற்று வந்து
பேரழகும் பெருஞ்சீர் தனமும் உள்ள
கன்னியைக் கட்டிக் கொண்டோடுகிறார்!

தமிழிற்காய்த் தாங்களொன்றானோ மென்று சொல்லி
தம்பட்ட மடித்துக் கதிரை பெற்றோர்
தருணத்திற் தம்குணங் காட்டுதல் தகுமோ
தமிழன்னை கண்ணீராய்ச் சிந்துகின்றாள் பாவம்!

வீடியோ சீடியால் வீடு தோறும் படு
விரசமாய்ப் பாடலோடு ஆடல் பார்க்கும்
பழசுகளோடு இளசுஞ் சேர்ந்து பட்டப்
பகலிலும் பாழ்படும் நிலையுமாச்சு

டொல்பினும் பஸ்சும் பெருகலாச்சு இங்கே
பல்வகை வாகனம் ஓடலாச்சு
வல்லுறவோடு வழிப்பறியுஞ் சேர்ந்து
வாகன விபத்துக்கள் மலியலாச்சு

இந்தத் தமிழருக்காகவா எம்மவர்
ஈய்ந்தனர் தம்முயிர் என நினைக்க
நொந்து மனம் மிகவேகுதையே ~ இதை
எங்கு எவரிடம் சொல்வதையோ

- கவிமணி அன்னைதாஸன்.

## செத்ததற்காய் அல்ல; செய்தவைக்காக!

இந்திய இராணுவத்தில் இறந்தவரின் நினைவாக
சந்தியிலே சிலைவைத்துச் சமர்ப்பிப்பம் எனும் வார்த்தை
உந்தனின் வாயிலையா உருவாச்சு. அடபவிதா.
முந்தியவர் செய்கொடுமை முழுதாக மறந்தனையோ?

சண்டையிலே சாகசித்து தலைவீழ்ந்து சிலைகொண்டால்
உண்டவர்க்கும் பெரும்புகழாம் – ஊர்கெடுத்த இராணுவமோ – நாமளித்த
தண்டனையால் செத்தவர்கள். தலைகுனிந்து திருமலையில்
கண்டகப்பல் ஏறியவர்கதை கேட்டால் ஊர்சிரிக்கும்!

ஆனாலும் சிலைவைக்க ஆவலுற்றாய் இதையெல்லாம்
வீணாகிப் போவதற்க விடமாட்டேன் – என்வீட்டைத்
தானமாய்த் தருவேன் தமிழரெல்லாம் ஒன்றாகி
ஆனதெல்லாம் முயன்றிங்கு அமைப்போமேஒரு நினைவு!

இதற்காக அவருடைத்த இருக்கின்ற என்வீட்டைத்
திருத்தாமல் வைத்துள்ளேன் – சிலகாலம் போனாலும்
மறக்காமல் அவர்வேலை மனதோடு பதிவாங்கச்
சிறப்பான என்வீடு திருத்தாமல் இருக்கிறது!

கன்னத்தில் அறைந்தாவின் கைதடவி அவன் நினைவுச்
சின்னத்தைத் திறந்தாலும். சிலையொன்றும் வேண்டாமே;
சன்னத்தால் துளையடித்த தனிச்சுவரே. அதுபோதும்;
வண்ணத்தால் எழுதுவன்நான் 'இதுவந்தவனின் வேலை'யென!

- கி.குருபரன்.

# செல்வந்தப் போர் நடவடிக்கை



துப்பாக்கிகள் பூட்டப்பட்டதால் யுத்தச் சத்தங்கள் இப்போது ஓய்ந்துள்ளன. A-9 பாதை கலகலப்புடன் நீள விரிந்து கிடக்கிறது. இடையிடையே வீதி விபத்துக்களால் மரண ஓலங்கள் கேட்டு மறைகின்றன. எங்கு பார்த்தாலும் வாகனங்கள் நிறைந்த கரியமிலத் தெருக்களாகவே யாழ்ப்பாண வீதிகள் காணப்படுகின்றன. சிதைந்துபோன தெருக்கள். உடைந்து போன கட்டடத் தொகுதிகள் என்பன மீள உயிர்ப்புறுகின்றன. யுத்தத்தால் விழுப்புண்ணடைந்த மனங்கள் மட்டும் இன்னும் கட்டியெழுப்பப்படாமலே சிதைந்து சின்னாபின்னமாகி முட்புதர்கள் படர்ந்து காணப்படுகின்றன.

யுத்தத்தோடு கூடப்பிறந்த குழந்தைகள் இன்னும் சமாதானம் என்றால் என்னவென்றே தெரியாமல் அகதிமுகாம்களிலும். அடுத்தவன் குடிசைக்குள்ளும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

நிசப்த இரவுகளைக் கிழித்துக் கத்தும் நாய்களினது மரண ஓலங்கள் நாளைய இவர்களது வாழ்க்கையை கேள்விக்குறியாக்கி நிற்கின்றன.

மீண்டும் ஒரு யுத்தம் வெடித்தால்?

பிணங்களுடனும். பிண்டங்களுடனும் வாழ்ந்த நிலையை விடவா இனிவரும் யுத்தம் எமக்கு இன்னல் தரப்போகிறது?

இல்லை!இல்லை!! மீண்டுமொரு புலம்பெயர்வு சத்தமில்லாமல் யுத்தமில்லாமல். இரத்தம் சிந்தாமல் யாழ். மண்ணில் அரங்கேறப் போகிறது; அரங்கேறி வருகிறது. இங்கேயும் மரணங்கள். மானமிழப்புகள். அவலங்கள். அழுகைநிலைகள். அகதிக்கோலங்கள் நிகழத்தான் போகின்றன. எல்லோரும் இரக்கமில்லாத கண்களால் அவற்றைக் காணத்தான் போகிறீர்கள்.

குழந்தைகள். குமரிகள். விதவைகள். அங்கவீனர்கள் என எல்லோருமே மரணப் புதைகுழிக்குள் புதைக்கப்படுவார்கள். இது நிச்சய நிரூபணமாகிவிட்டது. கோயில்களும். பாடசாலைகளும் இவர்களைப் புறக்கணிக்கும் அரசு. அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் இவர்களது முகவரியை தொலைத்துவிட்டு மௌன மூச்சிரைக்கும்.

என்ன இன்னுமா? புரியவில்லை?

ஏழைமக்கள் மீது பொருளாதார வர்க்கம் கண்மூடித்தனமாக துன்பச்செல்வீச்சு நடத்தி வருகிறதே அதைத்தான் சொல்கிறேன்.

'செல்வந்தப் போர் நடவடிக்கை' என்ற பெயரில் பணமென்ற ஆயுதங்களைக்கொண்டு போர் தொடங்கியிருக்கிறது. ஏழைவர்க்கங்கள் போகுமிடம் தெரியாமல் மீண்டும் அகதிப்படகேறிவிட்டார்கள்.

மனம் நொந்து சித்தம் மங்கி உளநோயாளிகளாக ஏழைமக்கள் மாறிவருகின்றனர். எதிர்கால சந்ததி ஒன்று ஊனமாகவே இருக்கப் போகிறது.

### காணி அபகரிப்பு

இரண்டு தசாப்த கால யுத்தம்தான் மக்களை அதிகளவு சோதனைக்கும். வேதனைக்கும் உள்ளாக்கியது. இடம்பெயர்வு. அகதி என்ற முத்திரைச் சொல் நம்மவர்களுக்கு விரும்பியோ. விரும்பாமலோ குத்தப்பட்டதும் அந்தக் கொடிய போர் அரக்கனால்தான்.

உயர்பாதுகாப்பு வலயமென ஏக்கர் கணக்கான நிலங்களை இராணுவக் கால்கள் மிதித்துக் கொண்டிருக்கின்றன. இதனை விடுவிப்பதற்கு போராட்டங்கள் பல்வேறு வழிகளில் முன்னெடுக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டிருக்கின்றன.

ஆனால். இப்பத்தியில் எழுத வருகின்ற விடயம் வித்தியாசமானது; விசனத்திற்குரியது.

A-9 பாதை திறக்கப்பட்டதிலிருந்து குடாநாட்டில் காணிவிலை இன்றுவரை அதிகரித்துவருகிறது. வெளிநாட்டவர்கள். வர்த்தகப் புள்ளிகள். தென்னிலங்கையில் குடியேறிய செல்வந்தமக்கள் போன்றவர்களின் வருகையே இந்த விலையதிகரிப்புக்குக் காரணம்.

நகரப்புறங்களில் ஒரு பரப்பு காணியின் விலை 10 லட்சம் முதல் 20 லட்சம் வரை போகிறது. இப்பகுதியில் சாதாரண ஒரு குடும்பம் வசிக்கக்கூடிய வீட்டுடன் காணி வாங்குவதென்றால் 50 லட்சம் முதல் 75 லட்சம் வரை கையில் பணம் தேவை.

கிராமப்புறங்களில் விலை சற்றுக்குறைவு. இங்கே ஒரு பரப்பு காணி இரண்டரை லட்சம் முதல் 3 லட்சம் வரை விலைபோகிறது. வீட்டுடன் காணி வாங்குவதென்றால் 20 லட்சம் முதல் 30. 40 லட்சம் வரை பணம்தேவை.

குடாநாட்டுக்குள் இறக்குமதியாகி இருக்கும் செல்வந்த வர்க்கங்களே போட்டிபோட்டுக் கொண்டு விலைக்கு மேல் விலை வைத்து காணிகளை வாங்குகின்றன.

யாழ்ப்பாணத்தில் சாதாரண அரசசேவையில் உள்ளவர்களால் கூட இந்த உச்சவிலையில் காணிகளை வாங்கமுடியாது. ஏழைகள் இதை நினைத்துக்கூடப் பார்க்கமுடியுமா?

இதைவிட பணம்படைத்தவர்கள் செய்யும் கைங்கரியம் என்ன தெரியுமா?

- சுயர்சன்

தமக்கிடையே உள்ள 'ஈகோ' பிரச்சினையால் அதிகவிலை கொடுத்து தேவைக்கதியமாக காணிகளை வாங்கி தங்களது தற்பெருமையை நிலைநாட்டிக்கொள்வதுதான். இத்தோடு. நின்றுவிடவில்லை. அவர்கள் 'பணத்திமிர்' மேலும் ஒருபடியேறி வறுமையில் வாழ்கின்றவர்கள் வாங்குவதற்கு தீர்மானித்துவிட்டதொரு காணியை கூடிய பணம் கொடுத்து தட்டிப்பறித்து விடுகிறார்கள்.

ஏழைமக்களால் என்னதான் செய்யமுடியும்? ஏமாற்றமும். விரக்தியுமே இவர்கள் வாங்கி வந்த வரம்.

பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து பல இடங்களில் குடியேறிய குடும்பஸ்தர் ஒருவரின் சோகம் இப்படி நீள்கிறது.

1990 ஆம் ஆண்டு சொந்த ஊரான பலாலியில் இருந்து இடம்பெயர்ந்து பல இடங்களில் தங்கியிருந்து தற்பொழுது 6 ஆவது இடமாக உரும்பிராயில் குடியேறியிருக்கிறார் அவர்.

ஐந்து பெண் பிள்ளைகள் உட்பட மொத்தமாக 7பேர் கொண்ட குடும்பம் தொழில் கூலி வேலை. இவர் குடியிருக்கும் காணியை அப்பகுதியில் உள்ள பணக்கார வர்க்கத்தையுடைய ஒருவர் வாங்கிவிட்டார். அதுமட்டுமல்ல இவர்களை விரைவில் வெளியேற்றுவதற்கு குறுகிய காலக்கெடுவும் வழங்கியிருக்கிறார்.

ஒருவேளை உணவுக்கே போராடுகின்ற இந்தக்குடும்பத்தால் என்ன தான் செய்யமுடியும்? இவர்கள் எங்கே போவது?

இவர்களது சொந்தக் குடியிருப்பை இராணுவ ஆக்கிரமிப்பு விழுங்கிவிட்டது. இதனை மீட்டெடுக்க அனைவரும் ஒன்றுபட்டு வருவார்களா? இப்படி ஏராளமான குடும்பங்கள் நிர்க்கதியற்ற நிலையில் உள்ளன.

### சீதனமுறைமை/கொடுமை

இன்று கண்ணீருடனும் கலைந்து போன கனவுகளுடனும் நிஜத்தை தொலைத்து வாழும் இளம் பெண்களின் நிலை பரிதாபத்திற்குரியது.பிற இனங்களைவிட தமிழ் இனத்தில் தான் சீதனக் கொடுமை பூதாகரமாய் உருவெடுத்துள்ளது. இதனால் எத்தனையோ பெண்கள் உதிர்வதற்கென்றே பூக்கின்றனர்.

சாதாரண கூலி வேலை செய்யும் தொழிலாளி முதல் உயர்மட்டமென கருதப்படுகின்ற டாக்டர். பொறியியலாளர் வரை 6 லட்சம் முதல் 80 லட்சம் வரை பெண்ணுடன் சேர்த்த சீ!-தனம் வாங்கப்படுகிறது.

இதைவிட நகை. நட்டு. வீடுவளவு. ஹீரோ கொண்டா. கார் போன்றவையும் 'கொசுறா'க் கொடுக்க வேண்டும். நிலைமை இப்படி இருக்கையில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற பெண்கள் எதிர்காலத்தை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

மனித வாழ்வின் மகத்துவம் பற்றி தெளிவான புரிதல் இன்றியே எமது சமூகம் பணத்துக்கு மேல் தலைகீழாக ஆடிக்கொண்டிருக்கிறது. மனங்களை அறியாது. பணம் தான் மனிதனுடைய வாழ்க்கையை தீர்மானிப்பதென்றால் மனிதம் மண்ணுக்குள்ளே நிரந்தரமாய்ப் புதையவேண்டிவரும்.

அந்நியச் செலாவணி நம் தேசத்தின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்து வருகின்றது. இன்று இதையாரும் மறுப்பதற்கில்லை. இவற்றை நல்ல முறையில் சிறந்த திட்டமிடலுடன் பயன்படுத்த வேண்டும். எம்மிடம் இல்லாத ஒன்றே அதுதான்.

நாமெல்லோரும் ஈழத்தாய் பெற்றெடுத்த பிள்ளைகள் ஏழை. பணக்காரர் என்ற வர்க்க பேதங்களோடு சாதி. மதம் என்ற வறண்ட கோட்பாடுகளையும் கிழித்தெறிந்து ஒற்றுமையாக வாழப்பழகிக் கொள்ளவேண்டும். ஒருத்தரை ஒருத்தர் அடிமைப்படுத்தவோ அன்றி சிறுமைப்படுத்தவோ கூடாது. அனைவரும் சமம் என்று எல்லோரையும் மதித்தல் வேண்டும். காணி ஒன்றிருந்தால் என்ன ஒன்பது இருந்தாலென்ன போகும்போது கொண்டா போகப்போகிறீர்கள்.

# மழலைச் செல்வம் உலகச் சந்தையில் என்ன விலை?



அதிசயப் பிறவிகளும் அற்புத மனிதர்களும் வாழ்ந்த- வாழ்ந்து கொண்டிருக்கின்ற பெருமைமிக்க உலகம் இது.

ஞானிகளின் பெயரில் கோயில்களும் விஞ்ஞானிகளின் பெயரில அறிவியல் ஆய்வுகூடங்களும் கொண்டு – நன்றி செலுத்தி – அவர்களுக்கு கடமைப்பட்டிருககும் அறிவியல் உலகம் இது.

விஞ்ஞான வளர்ச்சி உச்சம் கணடிருக்கும் இவ்வுலகினிலே இன்னும் பலருடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லை. மணமான தம்பதிகள் பலர் சகல செல்வங்களும் இருந்தும் தமக்கு குழந்தை பாக்கியம் கிடைக்குமா என்ற ஏக்கத்துடன் வாழ்வதைக் காண்கிறோம். தத்தமது அறிவுக்கும் வசதிக்களுக்கும் ஏற்ப அவாகள் சாஸ்த்திரிகளிடமும் வைத்தியசாலைகளுக்கும் கோயில்களுக்கும் அலைகிறார்கள். சிலர் தமது இலக்கை எட்டியும் விடுகிறார்கள். காகம் இருக்க பனம்பழம் விழுந்த கதையாக ~ குழந்தை கிடைத்துவிடுகிறது.

குழந்தை கிடைத்துவிடுவதால் மட்டும் குடும்பங்கள் திருப்தி கண்டுவிடுவதில்லை. அதில் ஆண் குழந்தைதான் வேண்டும் என அடம்பிடிப்பவர்கள், பெண் குழந்தை என்றால் முகத்தைச் சுழிப் பவர்கள், அடுத்தது பெண்ணாக வரவேண்டும் என எண்ணி ஆண் பிள்ளைகளையே அடுக்கிக் கொண்டு போகிறவர்கள் அல்லது அதற்கு மாறாக எதிர்பார்த்து பெண் பிள்ளைகளை வரிசையில் வைத்திருப்பவர்கள் எனப் பல ரக மனிதர்கள் வாழும் உலகம் இது.

ஆணோ பெண்ணோ விருப்பத்திற்கு மாறாகவேனும் அது வாய்த்துவிட்டால் திருப்திப்பட்டுக்கொண்டு பொன் குஞ்சாய் பேணி வளர்க்கும் ஒரு சமுதாயச் சூழலில் வாழ்கின்ற நாங்கள் அதிகம் கொடுத்து வைத்தவர்கள் ~ மனிதப் பிறவியின் மகத்துவம் தெரிந்தவர்கள் என்றால் மிகையாகாது. ஆனால், உலக நிலைமை இன்று அவ்வாறு இல்லை என்பதுதான் கவலை அளிக்கின்ற விடயம்.

கருவில் இருக்கும் குழந்தை ஆணாக இருந்தால் சீதனம் வாங்கலாம் என மனப்பால் குடிக்கும் அம்மாக்கள் எம்மிடம் இருக்கிறார்கள். ஆனால் அது பெண்ணாக இருந்தால் கள்ளிப்பால் ஊட்டும் அளவிற்கு அவர்கள் கொடூரமானவர்கள் இல்லை.


குழந்தை கறுப்பா சிகப்பா அம்மா பரம்பரையா அப்பா பரம்பரையா என்றெல்லாம் ஆராய்ச்சிகள் வலுக்கும் போது ஆச்சிமார் தலையீட்டால் அது குடும்பக் கலவரமாகவும் மாறிவிடுவதுண்டு. குழந்தையில் அம்மா பங்கு ஐம்பது அப்பா பங்கு ஐம்பது என்கின்ற தத்துவம்தான் என்ன பிணக்கு இருந்தாலும் குடும்பங்களை ஒட்டி வைத்துக் கொண்டும் இருக்கிறது.

வயிற்றில் இருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என அறிவதில் சில பெற்றோர் அவதிப்படுகிறார்கள். அவர்களை விட ஆச்சிமாருக்கு அவதியோ அவதி. அம்மாச்சி அப்பாச்சி சண்டைக்கு இதுதானே அத்திவாரம். மெல்ல மெல்ல விஞ்ஞானம் ஊருக்குள் எட்டிப் பார்க்கிறது. ஆச்சிமார் மேல் வயிறு கீழ் வயிறு பார்த்து சொல்கின்ற ஆருடங்கள் பிசகிவிடுவதுண்டு. ஆனாலும் பல பெற்றோர் சிறுநீர்ப் பரிசோதனை செய்து கொள்ளாமல் குழந்தை ஆணா பெண்ணா என்பதை பிறக்கும் வரை 'சஸ்பென்ஸ்' ஆகவே விட்டு விடுகிறார்கள். அது பெருமையான விஷயம். பெண் என்றால் பேசாமல் அமுக்கிவிட்டு வருகிறவர்களும் இருக் கத்தான் செய்கிறார்கள். (பெண் என்றால் பேயும் இரங்காது) கண்ணால் காணாததை அழித்து விடுவதில் பாவமும் இல்லை கவலையும் இல்லை என்பது அவர்களின் வாதமாக இருக்கிறது.

இயற்கை இவர்களை தண்டிக்காமல் விடுவதில்லை. அடுத்த கருத்தரிப்பு தாமதமாகும் போதுதான் ஐயோ பெண் என்றாலும் அதைப் பெற்றிருக்கலாமே என்கின்ற ஏக்கம் பிறக்கும். என்னதான் விஞ்ஞானம் கொடிகட்டிப் பறந்தாலும் - இயற்கையின் கொடைக்கு ஈடு இணை கிடையாது. பரிசோதனை குழாய் குழந்தைகள் ஆய்வுகூடத் தயாரிப்புக்களாக இருந்தாலும் தாயினதும் தகப்பனதும் ஆய்வு கூடமுறையிலான கருச் சேர்க்கையினால் உருவாக்கப்பட்டு கருப்பையில் விதைக்கப்படுதலினால் – குழந்தை அற்ற பெற்றோருக்கான வரப்பிரசாதம் என்றே அதனைக் கருதவேண்டும். எனினும் பலவாறான விமர்சனங் களும் வாதங்களும் முன்வைக்கப்படுகின்றன.

கரு உருவாக முன்னரே கைக்கொள்ளப்படுகின்ற கருத்தடை முறைகளையே தவறு என்று பரிசுத்த பாப்பரசர் விளக்கமளித்து வருகிறார். முட்டை சாப்பிடுவது பாவம் இல்லை அது கோழிக்குஞ்சாக வந்தால்த்தான் கொல்லக் கூடாது என வாதிடுகிறவர்களும் இருக்கிறார்கள். கருச்சிதைவு என்பது ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்றாக ஒரு கொலைக் குற்றமாக சமூகத்தில் கருதப்பட்டாலும் அது பலரது மனச்சாட்சியை உறுத்துவதில்லை. இவற்றையெல்லாம் மிஞ்சி நிற்கின்றன இன்றைய விஞ்ஞான ஆய்வுகூடக் கூட்டுக் கொலைகள்.

இயற்கையில் லட்சக்கணக்கான ஆண்கருக்கள் (விந்துக்கள்) ஒரே தடவையில் விடப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு குணங்கொண்ட குழந்தையைத் தரவல்லன. ஆனால், அவற்றில் ஒன்றே ஒன்று மாத்திரம்



பெண்கருவைச் (முட்டை) சந்தித்து கருவாக வளர்கிறது. இயற்கையின் இந்த விந்தையில் உயிர்ச் சேதங்கள் கிடையாது. ஆய்வு கூடத்தில் பல எண்ணிக்கையில் கருக்களையும் விந்துக்களையும் ஒரே தடவையில் இணைய வைக்க முடிகிறது. அவை இணைகின்றபோது ஆணா பெண்ணா அந்த இயல்பா இந்த இயல்பா கறுப்பா சிகப்பா அப்பா முகமா அம்மா முகமா உயரம் பருமன் கண்களின் இயல்புகள் புத்திக்கூர்மை என்கின்ற தன்மைகளை தீர்மா னித்து பொருத்தமான கருவை மட்டும் கருப்பையில் விதைக்க விஞ்ஞானம் வழிகண்டிருக்கிறது. ஏனைய கருக்கள் சர்வசாதாரணமாக குப்பைத் தொட்டிக்குள் வீசப்படுவது சகஜமாகி வருகிறது. இவ்வாறு ஒரு குழந்தையை தெரிவு செய்து கருப்பையில் பதிக்க அமெரிக்க ஆய்வுகூடக் கட்டணம் இருபதினாயிரம் டொலர்கள்தான். மலிவுதானே. இதனை baby making technology என்று 'நியூஸ் வீக்' சஞ்சிகை வர்ணித்து இருக்கிறது. இனி ஆச்சிமார் மருமக்களை ஆய்வுகூடத்துக்கே அனுப்பிக் கொள்ளலாம். அதற்கு முதலே போட்டி போட்டுக் கொள்ளலாம். ஆண் பிள்ளைக்கு ஆசைப்படுகிறவர்கள் இந்த இருபதினாயிரம் டொலர்களையும் இருபத்தைந்து வருட வட்டியுடன் சேர்த்து சீதனமாக வாங்கிக் கொள்ளலாம்.

ஆய்வு கூடங்களில் கையுறை அணிந்து முகத்தை துணியால் கட்டிக் கொண்டு நுணுக்குக் காட்டிகள் சகிதம் ஆய்வு செய்கின்ற டாக்டர் பட்டம் பெற்ற விஞ்ஞானிகள் கருக்களை கழித்துவிட்டு குப்பைக் கூடைக்குள் கொட்டுகின்ற கொலைகள் சட்டபூர்வமானவையா என்கின்ற கேள்விகளுக்கு மனச்சாட்சிகள்தானே பதில் சொல்லியாக வேண்டும்.

உலகினில் எத்தனை வைத்தியர்கள் இத்தகைய ஆய்வுகளுக்கு துணைபோக விரும்புகிறார்கள்? கருவில் இருக்கும் குழந்தை ஆணா பெண்ணா என தீர்மானிப்பதை விரும்புகிறீர்களா என வைத்தியர்களிடம் கேட்கப்பட்டது. உலகளாவிய ரீதியில் 38 வீதமானோர் மட்டுமே இதனை ஆதரிக்கிறார்கள். சுவிற்ஸர்லாந்தில் எந்த வைத்தியரும் இதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை. தாய்லாந்தில் நூற்றுக்கு 8 பேரும் பிரான்ஸில் 9 பேரும் துருக்கியில் 10 பேரும் அமெரிகாவில் 72 பேரும் போர்த்துக்கல் மற்றும் இஸ்ரேலில் 82 பேரும் அதிகளவிலாக ரஷ்யாவில் 95 பேரும் இத்த கைய ஆய்வுகளை ஆதரிக்கிறார்கள். வைத்தியர்கள் ஆதரித்தால் மாமிமார்பாடு கொண்டாட்டம்தானே.

இந்தியாவின் மும்பை நகர முன்னணி வைத்திய சாலை ஒன்றும் தனது குழந்தையை தீர்மானிக்கும் செயற்பாடுகள் பற்றி இணையத்தளத்தில் செய்திகளை வெளியிட்டு விளம்பரம் தேடிக் கொண்டிருக்கிறது. ஹொங்கொங், எகிப்து, ஜேர்மனி நாடுகளிலிருந்து பல தம்பதிகள் மும்பைக்கு படையெடுக்கிறார்கள். சீனாவிலும் இந்தியாவிலும் இத்தகைய வசதிகள் ஆண், பெண் சமநிலையைப் பாதிக்கும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. எல்லோரும் ஆண் பிள்ளை பெற்றுவிட்டு யாரிடம் சீதனம் வாங்கப் போகிறார்களோ?

இத்தாலியில் 2,500 கருச்சேர்க்கை சிகிச்சை நிலையங்கள் இயங்குகின்றன. இவை வத்திக்கானால் காரசாரமாக விமர்சிக்கப்படுகின்றன. இங்கு வேண்டிய இனத்தில் நிறத்தில் குணத்தில் கருக்களை கொள்வனவு செய்ய முடிகிறது. 1994 இல் ஒரு 62 வயதுப் பெண்மணி இங்கு குழந்தை யைப் பெற்றிருக்கிறார். குழந்தைக்காக ஏங்கும் பெண்களுக்கு செய்யும் இந்த உதவியை வத்திக்கான் ஏன் விமர்சிக்க வேண்டும் என்பது வைத் தியர்களின் வாதமாக இருக்கிறது.

இந்த முளைய வியாபாரத்தை கட்டுப்படுத்துவது பற்றி அமெரிக்க ஜனாதிபதி சபை சட்டங்களை இயற்றத் தீர்மானித்திருக்கிறது. சட்டங்கள் ஆய்வுகூடங்களுக்குள் புகுந்து விளையா டுமா?

ஒரு தாயின் முட்டையில் வேறொரு தாயின் முட்டையில் உள்ள சில D.N.Aகள் இணைக் கப்பட்டு இயல்புகள் மாற்றப்பட்டு பின்னர் முட்டை விந்துடன் கருக்கட்டப்பட்ட சம்பவத்தில் ~ பிறக்கப்போகும் பிள்ளையின் தாய் யார்? அந்தப் பிள்ளைக்கு பெற்றோர்கள் மூன்று பேரா? என்கின்ற குழப்பமான நிலைமைகள் எழுகின்ற நிலைமை மாநாடு ஒன்றில் விமர்சனத்துக்குள்ளானபோது அத்தகைய ஆய்வுகள் சீனாவில் நசுக்கப்பட்டன.

ஆய்வு கூடங்களுக்கோ விந்துக்களையும் முட்டைகளையும் பெறுவதில் எந்தச் சிக்கலும் இல்லை. அவை தாராளமாகக் கிடைக்கின்றன. எத்தனையோ தம்பதிகள் குழந்தை இல்லை என்று வைத்தியம் பார்க்கப் போகும்போதெல்லாம் ஆய்வுகூடத் திரவங்களில் விந்துக்களும் முட்டைகளும் உயிருடன் விடப்படுகின்றன.

**மு.சிவனேசன்**

பிறக்கப்போகும் குழந்தை ஆணா பெண்ணா எனத் தீர்மானிக்கும் விந்தின் இயல்புகள் X அல்லது Y என விஞ்ஞான குறியீட்டால் அடையாளமிடப்படுகின்றன. விந்துக்களுக்கு சாயமூட்டி லேசர் ஒளியில் அவற்றை இனங்கண்டு நேர் மற்றும் மறை மின்னேற்றங்களால் அவற்றை ஆண், பெண் என வேறாக்கி முட்டையை கருக் கட்ட வைக்கும் ஆய்வுகூடமுறை MICROSORT எனப்படுகிறது. இதைவிட வேறு பல முறைகளிலும் கருக்கட்டலுக்கு முன்னான பால் நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டாலும் 'மைக்கிறோசோட்' 100 வீதம் நம்பிக்கையானதாக கருதப்படுகின்றது.

சட்டங்களும் மதவாதங்களும் என்னதான் சொன்னாலும் குழந்தை வேண்டும் எனத் தவிப்பவர்கள் என்ன விலை கொடுத்தும் ஒன்றைப் பெற்றுக்கொள்ளவே நாடுகிறார்கள். தம்பதிகளிடம் கருவோ விந்தோ சரிவரக் கிடைக்காதபோது தேவைப்படுபவற்றை மாற்றாரிடம் இருந்து நேரடியாக பெற்றுக்கொள்ளாது ஆய்வுகூடத்தில் பெற்றுக்கொள்வது சௌகரியமாகப்படுகிறது. இப்படிப் பெரும் விலைகொடுத்து பெறும் குழந்தைப் பாக்கியத்தில் இனம், நிறம், குணம் என் றெல்லாம் வகைவகையாகத் தெரிவுசெய்யவும் வசதிகள் வாய்த்தால் விட்டுவிடவா போகிறார்கள் பெற்றோர்கள்?

எனினும் குழந்தை கையில் கிடைத்தபின்பும் அது வளரும்போதும் தான் ஆய்வுகூட காலகட்டத்தில் எதிர்பார்த்ததெல்லாம் சரியாக அமைகின்றதா என கண்டுகொள்ள இயலும். அப்போதே ஆய்வுகூடங்கள் மீது வழக்குத் தொடரவும் கொடுப்பனவை மீளப் பெறவும் வாய்ப்புக்கள் இருக்கும். எனினும் எதிர்பார்ப்புக்கள் பிசகி முரணாகப் பிறக்கும் குழந்தைகளை மாற்றாந்தாய் மனப் பான்மையுடன் நடத்தாவிட்டால் போதும். உலகினில் மனிதம் வாழும். ★

## தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் பாணியோ' புலிகளுக்கு ஒரு 'தர்மசங்கடமான' நிலைமையைத் தோற்றுவிக்கும்.

அச்சங்கடநிலை அமையக் கூடுமெனக் கருதப்படக்கூடிய சந்திரிகா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுக்களில் எத்தகைய விளைவுகளைத் தரும் என்று நாம் ஊகிக்கலாம். மேலும் ஜே.வி.பி. ~ ஸ்ரீலங்கா சு.க.கூட்டு ஒப்பந்த வாசகத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான பேச்சுக்கள் புலிகளுடன் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்பதற்கான அறிகுறிகள் தெரியவில்லை.

அடுத்து இத்தேர்தலில் ஒரு கதாநாயகத் தன்மையோடு (Heroic Style) அணிவகுத்திருக்கும் மற்றைய அணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (TNA) ஆகும். தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதயசூரியனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இம்முறை முறையே பயன்படாதவராகவும், பயன்படாததாகவும் 'விதிவிலக்குகளாக' மாறிவிட்டன. அவ்விதிவிலக்குகள் பற்றி பெரியளவில் அலட்டிக் கொள்ளாதவர்களாக மாவை சேனாதிராசா, ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம் போன்ற கூட்டணிக்காரர்கள், ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ்அணி, ரெலோ, இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவற்றுடன் சேர்ந்து, விடுதலைப் புலிகளின அரசியல் துறையோடு ஆழ, அகலமாகப் பரிசீலித்து, தேர்தல் களத்தில் குதிக்கப்போகும் வேட்பாளர் பட்டியலை தயாரித்துள்ளனர். வடக்கு ~ கிழக்கின் எல்லா மாவட்டங்களிலும், கொழும்பிலும் இவர்கள் தேர்தலில் போட்டியிட ஒழுங்குகள் உள்ளதாகத் தெரிகிறது. இவர்கள் தமது வேட்பாளர் தெரிவில் கல்வியமைப்புக்கள், பொது நிறுவனங்கள் சார்ந்த முக்கிய பேர்வழிகளையும் வேட்பாளர்களாக சேர்த்துக் கொண்டுள்ளதால் வடக்கு – கிழக்கின் இருமுக்கிய பல்கலைக்கழகங்களான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மாணவர் சேனைகளும், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், பல்கலைக்கழகங்களின் கற்றல்சாரா ஊழியர்களின் ஆதரவுத்தளமும் மாவட்டங்கள் தோறும் மக்களிடம் பெரிதும் செல்வாக்குப் பெற்றுள்ள பலநோக்கு கூட்டுறவு அமைப்புக்கள் என்பனவற்றின் பெரும் ஆதரவுத் தளமும் உருவாகிவிட்டன. அத்துடன், சி.வி.கே.சிவஞானம் போன்ற அபிவிருத்திசார் நிர்வாகத்துறைகளில் ஆழமான அனுபவங் கொண்டவர்களும், ஈழவேந்தன் போன்ற 'தமிழுணர்வுப் பிரசாரப் புயல்களாக தமிழ், ஆங்கில, சிங்கள மொழியாற்றல் உள்ளவர்களும் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றிருப்பது மேலும் ஆதரவுத் தளத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வலுப்படுத்துகின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப் புலிகளின் அரசியல் படை, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பரப்புரை நடவடிக்கைகளில் பெரிதும் உதவும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், கொழும்பில் ஆட்சி பீடமேறவுள்ள எந்தக் கூட்டுக் கட்சிக்கும் ஆட்சியமைக்கும் நாடாளுமன்ற ஆசன எண்ணிக்கை வலுவைத் தீர்மானிக்கும் வல்லமையுள்ள அரசியல் அணியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் திகழும்.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை (ISGA) தீர்வு யோசனைகளை முன்வைத்தும், விடுதலைப் புலிகளின் ஏக பிரதிநிதித்துவத்துக்கும் தமிழ் மக்களின் ஆணை கேட்கும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் பரப்புரைகளை மேற்கொள்ளும் என்று தெரிகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாதிக்கக்கூடிய விடயமாக அதுதான் அமையப்போகிறது. அச்சாதனைக்கூடாக சர்வதேச சமூகம் சில புரிதல்களைப்பெற வழியேற்படும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் ஆதரவுடன் ஆட்சிபீட மேறக்கூடிய எந்த அரசியல் சக்தியிடமும் தமிழ்மக்களின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் போன்ற விடயங்களுக்கான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதில் உறுதியான பேரம் பேசும் சூழ்நிலையொன்று உருவாகுவதும் மற்றொரு தன்மையாக அமையும்.

கொழும்பில் ஆட்சி பீடமேறக்கூடும் எனக் கருதப்படும் சந்திரிகா தலைமையிலான அணியும் ரணில் தலைமையிலான அணியும் தத்தமக்கென சுற்றிவைத்திருக்கும் உள்ளூர், சர்வதேச பின்புலங்களும், 1978ஆம் ஆண்டின் ஒற்றையாட்சி அரசமைப்பு புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களில் பாரிய தாமதங்களையும் பாதகமான தன்மைகளையும் ஏற்படுத்தி மீண்டும் ஒரு கால இழுத்தடிப்பாக இழுபடவே சந்தர்ப்பம் உள்ளது. அதிலும் மீள ரணில் ஆட்சியமைக்கும் நிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் 'குரைச்சல்கள' மேலதிகசுமையாக அவருக்கு இருக்கும்.

புலிகளைப் பொறுத்தவரையில் இப்போது தாமாக போர்க்களமேறப் போவதில்லை எனப் பலதடவைகள் கூறிவிட்டனர். அத்துடன், தேர்தல் களத்தை தமக்கான அரசியல் யுக்திகளில் ஒன்றாகப் பயன்படுத்துவதில் மிகவும் அக்கறையாகவும் உள்ளனர். சமாதானத்தின் மீட்சிதான் சர்வதேச நாடுகளின் பொருளாதார உதவிக்கு வழிவகுக்கும் என்ற நிலையும் உள்ளதனால் 'மீண்டும் பேசுவோம்' என்பதே அடுத்து அமையும் அரசின் தாரக மந்திரமாக அமையும். ❑



# வெற்றிகரமாகப் பூர்த்தியாகும் புரிந்துணர்வின் இரண்டாம் ஆண்டு

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இன்றுடன் இரண்டு ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு சமாதானத்தீர்வை எட்டும் வகையில் அரசும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கென கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி நோர்வே அரசின் அனுசரணையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை அரசின் சார்பில் பிரமதர் ரணில் விக்கிரமசிங்க வவுனியாவில் வைத்தும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் தலைவர் வே.பிரபாகரன் வன்னியில் வைத்தும் நோர்வே சமாதான அனுசரணையாளர் முன்னிலையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாதிட்டனர்.

> அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இன்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னர் பல தடவைகள் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட போதிலும் இருதரப்புக்களின் தலைவர்களும் இதில் கைச்சாத்திட்டமை இதன் விசேட சிறப்பம்சமாகும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு வரலாற்றில் ஆகக் கூடுதலான காலம் அமுலில் இருந்து வரும் உடன்படிக்கை என்ற வகையிலும் இது முக்கியத்துவம் பெறுகிறது.

பல சிக்கல்களுக்கு மத்தியில் பெரிய சவால்களுக்கு முகம் கொடுத்துத் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வரும் இந்த உடன்படிக்கையின் மூலம் பல மகத்தான வெற்றிகள் நாட்டிற்குக் கிடைத்தது என்பதை எவராலும் மறுக்கவோ. மறைக்கவோ முடியாது.

கடந்த 20 வருட காலமாக யுத்தத்தினால் ஏற்பட்ட பல உயிரிழப்புகள் இச்சமாதான காலத்தில் முற்றாகத் தவிர்க்கப்பட்டன. வடக்கு - கிழக்கு மக்கள் மீது சிங்களப் பேரினவாதம் நீண்டகாலமாகச் சுமத்தியிருந்த பொருளாதாரத் தடைநீக்கப்பட்டது; தரைப்பாதை திறக்கப்பட்டது. நாட்டின் சகல பகுதிகளுக்கும் தமிழ்மக்கள் சுதந்திரமாகச் சென்றுவரக் கூடிய நிலை உருவானது. சிங்கள - தமிழ் மக்கள் தமக்கிடையேயான உறவை வளர்த்துக் கொண்டனர். இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர்ந்தனர். நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகளுக்குச் சர்வதேச ஆதரவு கிடைத்தது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி உயர்ந்தமட்டத்தை அடைந்தது. அரசும் புலிகளும் இனப்பிரச்சினைக்கு சமஷ்டி மூலம் தீர்வு காண இணக்கம் கண்டனர். இவ்வாறு புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் கிடைத்த வெற்றிகள் இன்னும் பல.

இவற்றுள் முக்கியமாக சிலவற்றைக் குறிப்பிடலாம். இந்த உடன்படிக்கையின் பிரகாரம் வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான ஏ.9தரைப்பாதை திறக்கப்பட்டது. இதன்மூலம். தமிழ்மக்கள் தென்னிலங்கைக்கும் சிங்கள மக்கள் வடக்குக்கும் சுதந்திரமாகச் சென்றுவரக்கூடிய நிலை உருவாகியது.

நீண்டகாலமாகக் கடுமையான பொருளாதாரத் தடைக்கும் இராணுவ அடக்கு முறைக்கும் உட்பட்டு வாழ்ந்த தமிழ்மக்கள். சுதந்திரமாக - பயமின்றி - நாடு முழுவதும் நடமாடக்கூடிய நிலை ஏற்பட்டது. நீண்டகால யுத்தத்தினால் தமது பொருளாதார நிலைகளின் அத்திவாரங்களை இழந்துபோன தமிழ்மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தை மீண்டும் ஒரு ஸ்திரநிலைக்குக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்.

விமானக்குண்டு வீச்சுகள். ஷெல்தாக்குதல்கள் காரணமாக சின்னாபின்னமாகிப்போன வீடுகள். பாடசாலைகள். அரச மற்றும் பொதுக் கட்டடங்கள் மீண்டும் பொலிவுடன் மிளிர இந்த உடன்படிக்கை அடிகோலியது. சர்வதேச தொடர்பாடல் வசதிகள். நவீன தொழில்நுட்ப வசதிகள் உட்பட இதர வசதிகள் அனைத்தும் தமிழர் தாயகப் பிரதேசங்களில் அறிமுகமாகின. மக்கள் தமது தேவைகளை உடனடியாகப் பூர்த்திசெய்யக்கூடிய ஒரு சூழல் உருவாகியது.

- ராஜராஜன் -

இடம்பெயர்ந்து வேறு இடங்களிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாக வாழ்ந்த மக்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையை அடுத்துத் தமது சொந்த இடங்களில் நிம்மதியுடன் மீளக் குடியமர்ந்தனர்.

தமிழர் தாயகத்தின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இராணுவ நெருக்குவாரங்கள் ஓரளவுக்குக் குறைந்து மக்கள் தமது பிரச்சினைகளைத் துணிவுடன் சர்வதேசத்துக்கும் காட்டக்கூடிய ஒரு நிலை உருவாகியது.

(அடுத்த பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றக் கதிரைகள் தரும் காசு!

அரசியல்வாதிகள் யார்? மக்களுக்காகச் சேவை செய்பவர்கள். தங்களின் தனிப்பட்ட வாழ்வைத் தியாகம் செய்து மக்கள் நலனுக்காக உழைப்பவர்கள். அவர்கள் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றம் செல்வதெல்லாம் மக்களின் பிரச்சினைக்காகக் குரல்கொடுக்கத்தான்.

- இப்படித்தானே நாங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறோம்? ஆம்! அப்படித்தான் நினைத்துக்கொண்டிருக்கிறோம்.

ஆனாலும், தேர்தலில் இந்த அரசியல்வாதிகள் பணத்தை வாரி இறைத்துப் பிரசாரம் செய்கிறார்களே அது எப்படிச் சாத்தியமாகிறது. 'தனக்கு மிஞ்சித்தான் தானம்' என்றொரு பழமொழி தமிழில் உண்டு. அப்படியிருக்க மக்களுக்காகக் குரல்கொடுக்க நாடாளுமன்றம் செல்வதற்கு இந்த அரசியல்வாதிகள் ஏன் இப்படிக் காசைத் தண்ணீராக இறைக்கிறார்கள்?

அடிக்கடி தேர்தல் வருவதாலோ என்னவோ கொஞ்ச நாள்களாகவே இந்தக் கேள்வி மண்டையைக் குடைந்து கொண்டிருந்தது. விளைவு இந்த அரசியல்வாதிகள் நாடாளுமன்றம் செல்வதற்கு ஏன் ஆலாய்ப் பறக்கிறார்கள் என்று ஆராயப் புறப்பட்டதுதான். ஆனால், சொன்னால் நம்பமாட்டீர்கள் கிடைத்த முடிவுகள் என்னை ஆச்சரியப்படவைத்தன. யான் பெற்ற இன்பம் (அதிர்ச்சி) நீங்களும் பெற வேண்டும் என்று நினைத்து இங்கே அந்த விவரங்களை எல்லாம் தருகிறேன். ஒரு தடவை அவற்றையெல்லாம் நீங்களும் அறிந்து வைத்துக்கொள்ளுங்களேன்.

ஒருவர் கட்சி சார்பாகவோ சுயேச்சைக் குழுவாகவோ தேர்தலில் நின்று வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினராகிவிட்டால், அவருக்கு

* சம்பளம்- 2[illegible]100 ரூபா (மாதாந்தம்)
* சட்டப்படி [illegible]தாந்தம் கிடைக்கும் ஏனைய அலவன்ஸ்கள்-
  1) பொழுது[illegible]போக்கு- 1,000/=
  2) எரிபொருள்- 7,500/=
  3) கைத்தொலைபேசி- 2,000/=
* நாடாளுமன்ற அமர்வு- 4,000/=
* சாரதி சம்பளம்- 3,500/= (ஒருவருக்கு மேல் சாரதிகளைப் பாவிக்கலாம்)
* ஏனைய நன்மைகள்
* தொலைபேசி சர்வதேச இணைப்பு
* போட்டோப்பிரதி இயந்திரம் - 685/= (மாதாந்தம்- வரி-விலக்கு அளிக்கப்பட்ட விலையில்)
* கணனி- 1150/= (மாதாந்தம் வரிவிலக்கு அளிக்கப்பட்ட விலையில்)
* தட்டச்சு இயந்திரம்- 425/= (மாதாந்தம் வரிவிலக்கு அளிக்கப்பட்ட விலையில்) சகல வசதிகளுடன் மோட்டார் வாகனம் இறக்குமதி செய்ய அனுமதிப்பத்திரம் - 30,000 அமெரிக்க டொலர்.
* ஐந்துவருடங்களின்பின் மேலும் ஒரு காரை இறக்குமதிசெய்ய அனுமதிப்பத்திரம்.
* கொழும்பிலிருந்து 25 மைல்களுக்கு அப்பாற்பட்ட பிரதேச எம்.பிக்களுக்கு சகல வசதிகளுடன் இருமாடிக் கட்டடவீடு. (மாதாந்தம் ஆயிரம் மட்டும் வாடகை)
* நாடாளுமன்ற கன்ரீனில் சலுகை விலையில் உணவு. காலை உணவு 6 ரூபா (வெளியில் 600 ரூபா பெறுமதியானது). மதிய உணவு- 15 ரூபா (வெளியில் 1500 ரூபா பெறுமதியானது) பிளேன் ரீ-45 சதம். பால் ரீ-60சதம். மாலை தேநீருடன் இரு உப உணவு இலவசம்.
* ஒரு வருடத்துக்கு ஐந்து ரயர், ரியூப்.
* 10 லட்சத்துக்கு இலவச ஆயுள் காப்புறுதி
* 5வருடத்தின் ஓய்வூதியம்.
* 5 வருடத்தைப் பூர்த்திசெய்யாதவர்கள் 4 லட்சம் முதல் 5 லட்சம் பெறுவர்.
* தபால் அலவன்ஸ் 7,500 ரூபா (மாதம்)
* இலவச வைத்திய சிகிச்சை
* ஆகக்குறைந்தது 5 வெளிநாட்டுப் பயணங்கள்.
* இலவச காகிதாதிகள்.

இத்தனையும் மட்டுமா ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரத்தியேகச் செயலாளரை வைத்திருப்பதற்கு அனுமதி உண்டு. அவர்களுக்கும் பெரும் தொகை சம்பளமாக வழங்கப்படுகின்றது. இதனால் பெரும்பாலானவர்கள் தமது மனைவியையே அந்தரங்கச் செயலாளராக வைத்துக்கொள்கின்றனர். 5 வருடங்கள் தொடர்ச்சியாச் செயலாளராகப் பணியாற்றினால் அவருக்கும்கூட ஓய்வூதியம் வழங்கப்படும். இதனாலேயே தமது மனைவிமாரை அநேகர் செயலாளராக வைத்துக்கொள்கிறார்கள்.

நாடாளுமன்றத்துக்கு செல்லும் சந்தர்ப்பம் ஒன்று அண்மையில் கிடைத்தது. அங்குள்ள கன்ரீன் சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. வழமையே அதுதான் என்றார்கள். உள்ளே போய் அமர்ந்தால் ஒரு மேசையைச் சுற்றி ஒரு குடும்பமே இருந்தது. நடுவே வெள்ளை உடுப்பு சகிதம் ஒருவர் இருந்தார். பார்த்தாலேயே அவர் தான் அரசியல்வாதி என்பது தெரிந்தது. என்னை அழைத்துப்போன அரசியல வாதியிடம் மெல்ல அந்த மேசையைக் காட்டிக் கேட்டேன். "அது அவரது குடும்பம் நாடாளுமன்றம் கூடும் நாள்களில் குடும்பத்துக்கு நாளாந்தம் இங்கேதான் சாப்பாடு" - என்றார் அவர். அடடா!

- *கனிமொழி*

# முழு உலகமே உங்கள் கைகளுக்குள் அடங்கும்!





இன்னும் சில வருடங்களில் முழு உலகையும் எமது உள்ளங்கைகளுக்குள் அடக்கிவிட முடியும் என்றால் அதில் ஆச்சரியப்படுவதிற்கு எதுவுமில்லை. தற்போது உலகில் ஏற்பட்டு வரும் அசுர விஞ்ஞான வளர்ச்சியால் எதுவும் சாத்தியப்படக் கூடியதே.

நாம் வெளியே செல்லும் போது. எமது கணனி. தொலைபேசி. புகைப்படக்கருவி. வீடியோ விளையாட்டுக்கள். ஓடியோ சாதனங்கள் மற்றும் வீடியோ சாதனங்களையெல்லாம் ஒன்றாக எம்முடன் எடுத்துச் செல்ல முடியுமா? ஆம். இன்னும் சில வருடங்களில் இந்தக் கனவு முழுவதும் நனவாகிவிடும்.

மேலே கூறப்பட்ட அனைத்துச் சாதனங்களையும் ஒன்றாக இணைந்து. ஒரு கையடைக்கக் கருவியின் அளவில் தயாரிப்பதற்கான முயற்சியில் உலகின் பிரபலமான பல நிறுவனங்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இதற்காக. அவை கோடிக்கணக்கான டொலர்கள் பணத்தையும் முதலீடு செய்துள்ளன.

பிடிஏ. (PDA - Personal Digital Assistants) பிரத்தியேக டிஜிட்டல் உதவியாளர்கள் என்று அழைக்கப்படும் இந்தக் கருவிகளை அடிப்படையில் இலத்திரனியல் நாள்குறிப்புகள் என்றால் அதுமிகையில்லை. இவற்றில் எமக்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் பதிவுசெய்துவைக்க முடியும். மேலும் எமக்குத் தேவையான போது. பதிவு செய்து வைத்த தகவல்களை மீண்டும் உடனடியாகப் பெறக்கூடியதாகவும் இருக்கும்.



ஆரம்பத்தில் இந்த பிடிஏக்கள் எங்கள் பெரிய வர்த்தகர்களை இலக்குவைத்தே தயாரிக்கப்பட்டன. இப்போது இவற்றை அனைவருக்கும் ஏற்றவிதத்தில் தயாரிப்பதற்கு இவற்றின் தயாரிப்பாளர்கள் தீர்மானித்திருக்கின்றார்கள்.

முன்னர் ஆனை விலைக்கு விற்கப்பட்ட இந்த பிடிஏக்கள் இப்போது பூனை விலைக்கு இறங்கிவிட்டன. ஆசிய நாடுகளின் தயாரிப்பாளர்களினால் தயாரிக்கப்படும் தரமான பிடிஏக்கள் இப்போது மிகவும் மலிவு விலையில் கிடைக்கின்றன. பிடிஏக்களில் அநேக சுவாரஸ்யமான விடயங்களையும் இணைத்துத் தயாரிக்கும் போதுதான் எமது கனவு மெல்ல நனவாக ஆரம்பிக்கின்றது.

உதாரணமாக. எம்மிடம் எமது உள்ளங்கைகளுக்குள் அடங்கக்கூடிய சிறிய இலத்திரனியல் பிடிஏ சாதனம் ஒன்று உள்ளது. அதனை உபயோகித்து ஒரு புகைப்படத்தை எடுக்கின்றோம். உடனடியாகவே அப்படத்தை மின்னியல் கடிதம் (ஈ-மெயில்) மூலம் எமது நண்பருக்கு அனுப்புகின்றோம். அதேவேளை. எமக்கு மிகவும் பிடித்தமான பாடகரின் பாடலை அந்த மின்னியல் பிடிஏ சாதனத்திலேயே கேட்கின்றோம். இது மட்டுமா? அன்று நாங்கள் செய்யப்போகும் அடுத்த வேலை என்ன? என்பதையும் அந்தக் கருவியை உபயோகித்தே அறிந்து கொள்கின்றோம். ஆஹா! இதை வாசிக்கும் போது எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றது. இவ்வாறான கனவுக்கருவியை வாங்கி ஒரே கல்லில் இரண்டு... இல்லையில்லை பல மாங்காய்களை வீழ்த்துவதிற்கு உங்கள் மனம் துடிக்கவில்லையா?

**- தாரணி -**

பொறுமையாக இருங்கள். தொடர்ந்து வாசியுங்கள் தற்போது தயாரிக்கப்படும் கையடக்க சாதனங்களில் போதியளவு செயல்திறனும் நினைவகத் தொகுதியும் (Memory) உள்ளன. கையடக்க பிடிஏக்களில் இன்ரெனெற் இணைப்பையும் ஏற்படுத்த வேண்டியுள்ளது. தற்போது வெளிவரும் சில பிடிஏக்கள் ப்ளூடுத் (Bluetooth) தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்படுகின்றன. இந்த பிடிஏக்களைப் பயன்படுத்தி. பொருந்தமான தொலைபேசி எண்ணில். கம்பியில்லாத இணைப்பு மூலமாக இன்ரநெற் தொடர்பையும் ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

பிடிஏக்களின் ஒலியமைப்பு மற்றும் தொலைபேசி இணைப்பு போன்றவற்றில் இன்னும் சில மாற்றங்களைச் செய்ய வேண்யுள்ளது. பிடிஏக்களில் கையடக்கத் தொலைபேசிகளை இணைப்பதிலும்பார்க்க கையடக்கத் தொலைபேசிகளில் பிடிஏக்களை இணைக்கும் முயற்சியில் சில தயாரிப்பாளர்கள் ஈடுபட்டு வருகின்றார்கள். முழு உலகையே உங்கள் உள்ளங்கைகளில் கொண்டுவரப் போகும் உங்களது மின்னியல் கனவுலகக் குழந்தை பூரண வளர்ச்சிபெற இன்னம் சில ஆண்டுகள் செல்லலாம் அதுவரை பொறுமையாக இருங்கள். ▼

## வெற்றிகரமாக....

(முதல் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் தமதுகட்டுப்பாடற்ற பகுதிகளில் சுதந்திரமாக நடமாடி மக்களுடன் இணைந்த பணிகளிலும். அரசியல் பணிகளிலும் ஈடுபட்டனர். சர்வதேச நாடுகளின் அமைச்சர்கள். தூதுவர்கள் மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து அரசுடன் பேச்சுக்களை மேற்கொண்டது மட்டுமல்லாமல் வன்னிக்கும் சென்று விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து இனப்பிரச்சினைத் தீர்வு பற்றியும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடுவதற்கு இப்புரிந்துணர்வு உடன்படிக்கை வழி வகுத்தது.

இனப்பிரச்சினைத்தீர்வுக்கு வழிவகுப்பதற்கான. விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான 6 சுற்றுச் சமாதானப் பேச்சுக்கள் பல வெளிநாடுகளில் நடைபெற்றன. இப்பேச்சுகளில் பங்குகொள்ளவென விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் வெளிநாடுகளுக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய மூடாகப் பயணம செய்தனர். ஒரு காலத்தில் பரம எதிரிகளாகப் போர்க்களத்தில் சந்தித்தவர்கள் இப்போது சமாதான விரும்பிகளாக பேச்சு மேசையில் அமர்ந்து கொண்டனர். அத்துடன். புலிகள் தமது அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பிரத்தியேகமாகவும் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்தனர்.

இக்காலப்பகுதியில் பல வெளிநாட்டு உதவியும் இலங்கைக்குக் கிடைத்தது. இதன்மூலம். நாட்டில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. நாட்டின் பங்குச் சந்தையிலும் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டன. நாட்டில் நிலவும் அமைதி நிலையின் காரணமாக பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு தமது முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். இதனால இலங்கையின் பொருளாதார நிலைமை குறிப்பிட்டளவுக்கு முன்னேற்றம் கண்டது. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடுகள் பல்வேறு நாடுகளிலும் இடம்பெற்றன. இதன் காரணமாகக் குறிப்பிடத்தக்களவு நிதியும் நாட்டிற்குக் கிடைத்தது.

மொத்தத்தில் இப்புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் நாடு பெற்றுக் கொண்ட நன்மைகள் அளவிட முடியாதவை. உடன்படிக்கை மூலம தமிழ்மக்களின் வாழ்க்கையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டதா என்ற கேள்விக்கு விடையளிக்க முன்னர் இலங்கை முன்னேற்றம் கண்டது என்பது மட்டும் உண்மை. எனினும். தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் இவையெல்லாம் பெரியதொரு விடயங்களாகக் கருதி விடமுடியாது.

ஏனெனில். சமாதானப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டதைப் போன்று தமிழர் தாயகப் பிரதேசத்தை இராணுவப் பாதுகாப்பு என்ற வகையில் பெருமளவு பகுதிகளை விழுங்கியிருக்கும் உயர் பாதுகாப்பு வலயத்தில் ஒன்றேனும் இதுவரை அகற்றப்படவில்லை. அவற்றின் பாதுகாப்பு வேலிகள்கூடப் பின் தள்ளப்படவில்லை. பொதுமக்களின் வீடுகளில் இராணுவம் குடியிருக்க அவர்கள் முகாம்களில் வசிக்கிறார்கள். மக்களின் பொருளாதார மையங்களான பெருமளவு விவசாய நிலங்கள் எதுவித விவசாய நடவடிக்கைகளும் இல்லாமல் உயர்பாதுகாப்பு வலயத்தில் இன்னும் முடங்கிக் கிடக்கின்றன.

புதைக்கப்பட்ட மிதிவெடிகள் இன்னும் சரியான முறையில் அகற்றப் படாமையால் உயிருக்கான அச்சுறுத்தல் தொடர்ந்தும் இருந்து கொண்டிருக்கிறது.

கடலில் சுதந்திரமான மீன்பிடிக்கு மீனவர்களுக்கு இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. கடற்படையினர் வரையறுத்த பகுதிகளிலேயே அவர்கள் தமது மீன்பிடி நடவடிக்கைகளைத் தொடர்கின்றனர்.

புரிந்துணர்வு உடன் படிக்கையின் மூலம் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பலன்களை விட தென்னிலங்கைக்குக் கிடைத்த நன்மைகள் அதிகம் என்றே கூறலாம்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி இன்றுடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. நாட்டின் வரலாற்று நோக்கில் இரண்டு வருடம் என்பது நீண்ட தொருகாலம் அல்ல. எனினும். 20 வருட காலமாக யுத்தம் நடைபெற்ற நாடொன்றில் இரண்டு வருடங்கள் யுத்தமின்றிக் கழிந்தமை முக்கியமானதே. இவற்றை நோக்குமிடத்து உடன்படிக்கையின் இரண்டு வருட பூர்த்தி இலங்கையின் வராற்றில் ஒரு முக்கியமான காலகட்டம்.

ஆயினும். இடையே தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் போட்டி காரணமாக சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுள்ளன. இதன் விளைவாக சமாதானப் பேச்சுக்களின் அனுசரணையாளர் நிலையிலிருந்து தான் தற்காலிகமாக விலகுவதாக நோர்வே அரசு அறிவிததது. எனினும். தெற்கில் அரசியல் போட்டி முடிந்தபாடில்லை.

விடுதலைப் புலிகள் தயாரித்த இடைக்கால நிர்வாக வரைபை அவர்கள் அரசிடம் சமர்ப்பித்தபோது ஜனாதிபதி சந்திரிகா தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி பிரதமர் ரணில் தலைமையிலான அரசிடமிருந்த மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பிடுங்கிக் கொண்டார்.

இதன் காரணமாக. பிரதமர் ரணிலின் அரசு ஆட்டம் கண்டது. அமைச்சுக்களை மீள ஒப்படைக்காதவரை தாம் சமாதானப் பேச்சுகளில் ஈடுபடுவதில்லை என்றார் ரணில்.

மூன்று அமைச்சுக்களும் சரியாகச் செயற்படவில்லை. அதனால் தான் அவற்றை நான் பறித்துக்கொண்டேன். எனினும். பிரதமர் ரணில் தலைமையிலான அரசு சமாதான முயற்சிகளை முன்னெடுக்க இது தடையாக அமையாது - என்றார் ஜனாதிபதி சந்திரிகா. அதிகாரப் போட்டியின் உச்சக்கட்டம் பிரதமர் ரணில் தானும் சமாதான முன்னெடுப்புக்களிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

தெற்கில் அதிகார பலமுள்ள ஓர் அரசுடனேயே தாம் பேசுவோம். என்கிறார்கள் புலிகள். இந்நிலையில். கடந்த 7ஆம் திகதி நள்ளிரவு திடீரென நாடாளு மன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை அறிவித்தார் ஜனாதிபதி.

இத்தனைக்கு மத்தியிலும் இன்னல்கள். இடையுறுகள். பிரச்சினைகள் ஏற்பட்ட போதிலும் புரிந்துணர்வு உடன்படிக்கை முறிவடையாது இரண்டு ஆண்டுகளைப் பூர்த்திசெய்து தொடர்கிறது.

தெற்கில் என்ன பிரச்சினை வந்தாலும் புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலில் இருக்கும் என புலிகளும் அறிவித்துவிட்டனர். இதனிடையே இந்த உடன்படிக்கை செல்லுபடியற்றதாகி விட்டது என்கிறார் ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸ.

எது எவ்வாறாயினும் இப்புரிந்துணர்வு உடன்படிக்கை எந்த அரசு ஆட்சிப்பீடமேறினாலும் தொடரவேண்டுமென்றுதான் மக்கள் விரும்புகிறார்கள். எனவே. தெற்கில் ஆட்சியைக் கைப்பற்றப்போகும் அரசு இப்புரிந்துணர்வைத் தொடர்ந்து பேணுமா? முறித்துக்கொள்ளப்போகிறதா? முறிவடைந்தால் மீண்டும் யுத்தம் வெடிக்குமா? என்ற கேள்விகளுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறும் பொதுத் தேர்தலின் பின்னர் விடை கிடைக்கும்.